# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28

விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 356 கார்த்திகை 04ஆம் நாள் புதன்கிழமை 20 நவம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050




இலங்கையின் 7 ஆவது நிறைவேற்று அதிகார அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்ச நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். அரச தலைவர் செயலத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (எ)

## தமிழரின் மனங்களை வெல்லும் வகையில் நாம் செயற்படுவோம்

### மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 20

தமிழ் மக்களின் வாக்குகள் பெருமளவில் கிடைக்கவில்லை என்பதற்காக அவர்களை நாம் ஒதுக்கிவைக்க முடியாது. அவர்கள் இந்த நாட்டில் தலைநிமிர்ந்து வாழும் நிலையை எமது ஆட்சியில் ஏற்படுத்துவோம். அவர்களின் மனங்களை வெல்லும் வகையில் நாம் செயற்படுவோம். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். 25

## இடைக்கால அரசு இன்று ஆட்சியேற்கும்?

கொழும்பு, நவ.20

இடைக்கால (காபந்து) அரசு ஒன்று இன்று ஆட்சியை ஏற்கும் என்று நேற்றிரவு தகவல்கள் வெளியாகின.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி சார்பாகப் போட்டியிட்ட கோத்தபாய ராஜபக்ச வெற்றி பெற்றார். அவர் நேற்று உத்தி 25

## தமிழர்கள் புறக்கணித்தாலும் அவர்களைப் பாதுகாப்பேன்

### இப்படிச் சொல்கிறார் கோத்தபாய ராஜபக்ச

யாழ்ப்பாணம், நவ. 20

அரச தலைவர் தேர்தலில் தமிழ், முஸ்லிம் மக்களில் பெரும்பாலானோர் என்னைப் புறக்கணித்தாலும் அவர்களின் காவலனாக இருப்பேன். ஏனெனில், நான் இப்போது நாட்டின் தலை 25

## கண்டியில் இருந்தே வேம்படிக்கு மிரட்டல்.

யாழ்ப்பாணம், நவ.20

யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு குண்டுப் புரளியை ஏற்படுத்தும் அநாமதேயக் கடிதம் தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதி மன்றில் பொலி 25

## அடுத்த கட்டம் தொடர்பாக இந்தவாரம் இறுதி முடிவு

### சபாநாயகர் அலுவலகம் அறிக்கை

கொழும்பு, நவ. 20

அடுத்த கட்ட அரசியல் நடவடிக்கைகள் குறித்து இவ்வாரத்துக்குள் இறுதி தீர்மானமெடுப்பதற்கு சபாநாயகர் கரு ஜயசூரியா, எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கட்சி தலைவர்களுக்கிடையிலான சந்திப்பில் இணக் 25



## மோடியின் அழைப்பை ஏற்று இந்தியா செல்கிறார் கோத்தா

கொழும்பு, நவ.20

அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச எதிர்வரும் 29ஆம் திகதி இந்தியாவுக்குச் செல்லவுள்ளார். இந்திய அரசின் அழைப்பை அடுத்தே அவர் இந்தியா செல்லவுள்ளார். இந்திய அயலுறவு 08

## கூட்டமைப்பின் அடுத்த நகர்வு: எம்.பிக்களுடன் பேசி தீர்மானம்

யாழ்ப்பாணம், நவ. 20

புதிய அரச தலைவராக கோத்தபாய ராஜபக்ச பதவியேற்றுள்ள நிலையில், தமிழர் நலன் சார்ந்த எமது செயற்பாடுகளின் அடுத்த கட்ட நகர்வு தொடர்பில் அறிவிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இது தொடர்பில் பேசுவேன். அந்தப் பேச்சில் எடுக்கப்படும் தீர்மானத்தை மக்க 25

## தனிச் சிங்கள தலைவர் வந்ததால் பலசேனாவை கலைக்க தீர்மானம்

கொழும்பு, நவ. 20

பொதுத் தேர்தல் நடந்து முடிந்ததும், பொதுபல சேனா அமைப்பு கலைக்கப்படும் என்று அந்த அமைப்பின் பொதுச் செயலர் கல 02

## 9 வயதுச் சிறுமி காய்ச்சலால் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ.20

காய்ச்சல் காரணமாக 9 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் சுண்டு க்குழி மகளிர் கல்லூரியில் தரம் 4 இல் கற்கும் ஸ்ரீசுதாகர் ரஜாந்தி (வயது-9) என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார்.

ரஜாந்தி கடந்த ஒரு வாரமாகக் காய்ச்ச 02

## வாக்களிப்பில் காட்டிய ஒற்றுமை தமிழர்களிடம் தொடர வேண்டும்

### கோருகின்றார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், நவ. 20

தேர்தல் புறக்கணிப்பு, தமிழ் வேட்பாளருக்கு வாக்களிப்புப் போன்ற பல்வேறு திசை திருப்பல்கள் காணப்பட்ட சூழலில், அவற்றுக்குச் செவி 02

## தமிழ்க் கூட்டமைப்பிலிருந்து ரெலோ வெளியேறவேண்டும்

### சிறிகாந்தா வலியுறுத்து: இல்லையேல் தனிவழி எனவும் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 20

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ரெலோ அமைப்பு வெளியேற வேண்டும். 02

## ரெலோவின் கூட்டத்தில் புகுந்த சிலரால் குழப்பம்

### தவிசாளர் மீதும் தாக்குதல் முயற்சி

யாழ்ப்பாணம், நவ. 20

ரெலோவின் கட்சித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்துக்குள் புகுந்த ரெலோவின் 02




## பொது அறிவுத் தகவல்கள்

நத்தைகளால் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் வரை நித்திரை கொள்ள முடியும்.
கறையான் ஒரு நாளைக்கு முப்பதாயிரம் முட்டை இடும்.
பூனையின் கண்பார்வை மனிதனைவிட எட்டு மடங்கு கூர்மையானது.
விமானம் பறக்கும் உயரத்தை அளக்க உதவும் கருவியின் பெயர் ஆல்டி மீற்றர்.
முதன் முதலில் காகிதத்தினால் ரூபாய் நோட்டை அச்சிட்டு வெளியிட்ட நாடு சீனா.
ஐக்கிய நாடுகள் சபை 1945, ஒக்ரோபர் 24இல் தொடங்கப்பட்டது.
உலகிலேயே ஜனாதிபதிக்கு ஒரு வருட காலம் பதவி கொண்ட நாடு சுவீட்சர்லாந்து.
உலகிலேயே மிகப் பெரிய நூலகம் மாஸ்கோவில் உள்ள லெனின் நூலகம்.
பிளாஸ்டிக்குகளை எரிக்கும் பொழுது டையாக்சின் என்ற நச்சுப் புகை வெளியகிறது.

## சிங்கத்தின் சிறப்புகள்

காட்டுக்கு ராஜா என்று அழைக்கப்படும் சிங்கத்துக்கு இதயம் மிகவும் சிறியது . சிங்கம் எப்போதும் தனிமையில் இருக்காது.எங்கு சென்றாலும் தன் குடும்பத்துடன் தான் செல்லும் . சிங்கம் எப்போதும் சமவெளியில் தான் வாழும் .ஒரு மந்தையில் ஒரு ஆண் சிங்கமும், பல பெண்சிங்கங்களும்,பல குட்டிகளும் இருக்கும். பொதுவாகவே சிங்கம் ஒரு சோம்பேறி மிருகம் என்று கூறப்படுகிறது. ஒரு நாளைக்கு 20 மணி நேரம் தூங்கும் குணமுடையது . சூரியன் மறையும் நேரத்தில் தான் தூக்கத்தை விட்டு வேட்டைக்கு செல்லும்.ஆண் சிங்கத்தை விட பெண் சிங்கம் சிறியதாக இருக்கும் .ஆண் சிங்கத்தை விட பெண் சிங்கம் வேட்டையாடுவதில் சிறந்து விளங்குகிறது. பல நேரங்களில் ஆண் சிங்கம் வேட்டையில் ஈடுபடாது. பெண் சிங்கம்தான் வேட்டையில் ஈடுபடும். சாதாரணமாக ஒரு ஆண் சிங்கம் 9 அடி நீளம் வரை வளரும்.வால் மட்டும் 3 அடி இருக்கும் உயரம் 3.5 அடி இருக்கும்.எடை 550 பவுண்ட் இருக்கும்.சிங்கம் 12 அடி உயரத்திலும் 40 அடி பள்ளத்தில் தாவக்கூடியது .

## விடுகதை

பரந்து விரிந்தவன், பல வண்ணம் காட்டுகிறான் அது என்ன?
நீரில் வேட்டையாடும் எங்க ஊர் வெள்ளைச்சாமி, வலையில்லாமலேயே மீன் பிடிப்பான் அது என்ன?
எல்லாவற்றையும்பார்க்கும் இவர்களால், ஒருவரையொருவர் பார்க்க முடியாது அது என்ன?
குதிரில் கொட்டி வைக்காத தானியம், கொடை வள்ளல் கொடுக்காத தானியம் அது என்ன?
அங்கும் இங்கும் துள்ளுவான், அலுக்காமல் துவளாமல் துள்ளுவான் அது என்ன?
வானிலிருந்தும் வருவான், பூமிக்கடியிலிருந்தும் வருவான் அது என்ன?
உப்பை உண்டதால், ஓயாமல் இரைகிறான் அது என்ன?
இஷ்டம் போலக் காடு மேடுகளில் பாடுவான், கச்சேரியில் மட்டும் பாட மாட்டான் அது என்ன?

**விடைகள்**

| | |
|---|---|
| 1. வானம் | 2. கொக்கு |
| 3. கண்கள் | 4. ஆற்று மணல் |
| 5. தவளை | 6. மழை நீர், கிணற்று நீர் |
| 7. கடல், கடல் அலை | 8. வண்டு |

---

### ரெலோவின்...

யாழ்ப்பாண மாவட்ட அணியில் சிவாஜிலிங்கத்தை ஆதரித்த சிலர், கூட்டத்தில் பங்கேற்றவர்களை மிரட்டியுள்ளனர். அத்துடன் அவர்கள் நடத்திய கூட்டத்தில் பங்கேற்று கேள்வி எழுப்பிய வலி.கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளரையும் தாக்க முயற்சித்துள்ளனர்.

அரச தலைவர் தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதாக ரெலோவின் தலைமைக் குழு முடிவு செய்தது. இதற்கு எதிராக, ரெலோவின் யாழ்ப்பாண மாவட்டக் கிளையில் ஒரு பகுதியினர், அந்தக் கட்சியின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தை ஆதரிப்பதாகத் தீர்மானித்திருந்தனர்.

இந்த நிலையில் கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், கட்சியின் உபதலைவர் இந்திரகுமார் பிரசன்னா, பொருளாளர் ஜனா கருணாகரம், தேசிய அமைப்பாளர் சுரேன் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்தனர். யாழ்ப்பாண நகரிலுள்ள தனியார் விடுதியில் யாழ்ப்பாண மாவட்டக் கிளையில் உள்ள, சிவாஜிலிங்கத்தை ஆதரிக்காத உறுப்பினர்களுடன் அவர்கள் நேற்று மாலை 3 மணிக்கு சந்திப்பு நடத்தினர்.

சந்திப்பு இடம்பெற்றுக் கொண்டிருந்த போது அங்கு அத்துமீறி நுழைந்த, ரெலோவின் யாழ்ப்பாண மாவட்டப் பொறுப்பாளர், நல்லூர் பிரதேச சபையின் உபதவிசாளர் ஆகியோர், கூட்டத்தில் பங்கேற்றவர்களை அச்சுறுத்தியதாக, அதில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். கட்சித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் முன்பாகவே இவை அனைத்தும் இடம்பெற்றதாகக் கூறினர்.

இந்தக் கூட்டம் முடிவடைந்த பின்னர், மாலை 5 மணிக்கு கட்சியின் செயலர் சிறிகாந்தா தலைமையில் சிவாஜிலிங்கத்தை ஆதரித்த ரெலோ அணியினரின் கூட்டம் நடைபெற்றது. இந்தக்கூட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ரெலோ வெளியேற வேண்டும் என்று கட்சியின் செயலர் கூறினார். இதற்கு அதில் பங்கேற்ற, வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர், மக்கள் இந்தத் தேர்தலில் ஒற்றுமையாக வாக்களித்துள்ளனர். நாம் ஒற்றுமையைக் கட்டிக்காக்க வேண்டும் என்று கூறியதாகவும், இதன் போது கட்சியின் யாழ்ப்பாண மாவட்டக் கிளையின் துணைப் பொறுப்பாளர் அவரைத் தாக்க முற்பட்;டதாகவும் கூட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர். (ஓ.5)

### வாக்களிப்பில்...

சாய்க்காது, எமது வேண்டுகோளுக்கமைய ஒற்றுமையாக அன்னத்துக்கு வாக்களித்து, இலங்கை ஆட்சியாளருக்கும் பன்னாட்டுச் சமூகத்துக்கும் தமிழ் மக்கள் ஓர் உறுதியான செய்தியைக் கூறி இருக்கின்றனர். தமது உரிமை தொடர்பான வேட்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் தாம் தொடர்ந்தும் உறுதியாக இருப்பதை வெளிப்படுத்தி இருக்கின்றனர். இந்த மக்களுக்குத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். வாக்களிப்பில் காட்டிய ஒற்றுமை தொடர்ந்தும் பேணப்பட வேண்டும் என்று விரும்புகின்றேன். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் உள்ள தேசியப் பிரச்சனைக்குத் தீர்வு காணக் கூடிய வகையில் முன்னோடியான செய்தியைத் தனது தேர்தல் அறிக்கை வாயிலாக வெளிப்படுத்திய கருத்துகளின் அடிப்படையில் சஜித் பிரேமதாசவுக்கு வடகிழக்கு தமிழ் மக்கள் பெருவாரியாக வாக்களித்துள்ளனர்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்புபிளவுபடாத, பிரிக்கமுடியாத இலங்கை நாட்டினுள் அதியுச்ச அதிகாரப் பகிர்வு வழங்கப்படுமென்ற அடிப்படையில் தமிழ் மக்களை ஒருமித்துத் சஜித் பிரேமதாசவின் சின்னமான அன்னத்துக்கு வாக்களிக்குமாறு கேட்டிருந்தது. அதியுச்ச அதிகாரப் பகிர்வு தேசியப் பிரச்சனைக்கு தீர்வாக வழங்கப்பட வேண்டுமென்ற கருத்தை அனைத்து அரசியல் கட்சிகளும் தலைவர்களும் வெளிப்படையாக ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற அரச தலைவர் தலைவர் தேர்தலை விட இத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாக்களிப்பு வீதம் உயர்ந்துள்ளமை கருத்தில் கொள்ளப்படவேண்டிய விடயமாகும்.

புதிய அரச தலைவர், தமிழ் மக்களது கருத்து வெளிப்பாட்டுக்கு மதிப்பளித்துச் செயற்பட வேண்டுமென விரும்புகின்றேன். அவர், அவ்வாறு செயற்படுவார் என்று நம்புகின்றேன். அவ்வாறு செயற்படுவதன் மூலம், நாம் அனைவரும் இலங்கை நாட்டின் சமமான குடிமக்கள் என்னும் உணர்வு ஏற்படும் என்பதையும் நாடு பிளவுபடாது பாதுகாக்கப்படும் என்பதையும் அதன் மூலம் நாடும் நாட்டில் வாழும் அனைத்து மக்களும் பெரும் முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் அடைவர் என்பதையும் புதிய அரச தலைவருக்கும் அவர் சார்ந்தோருக்கும் தமிழ்மக்கள் சார்பில் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

எமது வேண்டுகோளுக்கமைய ஒற்றுமையாய் அன்னத்துக்கு வாக்களித்த அனைத்துத் தமிழ் மக்களுக்கும் மீண்டுமொருமுறை நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன், என்றுள்ளது.
(ஓ,5,22)

### தமிழ்க்...

அவர்களுடன் இணைந்து இனியும் பயணிக்க முடியாது. இதற்கு ரெலோ தலைமைக் குழு இணங்கவில்லையாயின் நாம் தனி வழி செல்வோம்.

இவ்வாறு ரெலோவின் செயலாளர் நாயகம் ந.சிறிகாந்தா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ரெலோ அமைப்பின் யாழ்ப்பாண மாவட்டக் குழுக் கூட்டம் நேற்று மாலை 5.30 மணிக்கு நல்லூரில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார் என்று கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் உதயனுக்குத் தெரிவித்தனர்.

எதிர்வரும் சனிக்கிழமை ரெலோவின் தலைமைக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று சமர்பிக்கவுள்ளேன். இனியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து ரெலோ பயணிக்க முடியாது. வெளியேற வேண்டும். இந்தத் தீர்மானத்தை ரெலோவின் தலைமைக் குழு ஆதரிக்கவில்லையாயின் நாம் (யாழ்ப்பாண மாவட்டக் கிளை) தனி வழி செல்வோம் என்று சிறிகாந்தா குறிப்பிட்டார் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ஓ,5)

### தனிச்சிங்கள...

கொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

ராஜகிரிய பிரதேசத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறுபான்மையினரின் வாக்குகளின்றி, இந்த நாட்டில் அரசை உருவாக்க முடியாதென்ற கருத்து நிலவியிருந்தது. ஆனால் இந்த முறை தேர்தல் முடிவுகள், அந்தக் கருத்தைத் தவிடுபொடியாக்கி உள்ளன. எவ்வாறாயினும், இந்த நாட்டுக்கு இப்போது சிறந்த தலைமைத்துவமொன்று கிடைக்கப்பெற்று உள்ளது. பொதுத் தேர்தலின் பின்னர், நல்லதோர் அமைச்சரவையுடன், நல்ல பயணமொன்றை மேற்கொள்ள முடியும். இந்த நாட்டைக் கட்டியெழுப்ப, இப்போது நல்ல தலைவரொருவர் கிடைத்திருக்கிறார்.

அதனால், பொதுபல சேனா என்ற அமைப்பின் தேவை, இனி தேவைப்படாது எனும் பட்சத்தில், பொதுத் தேர்தலைத் தொடர்ந்து, அமைப்பைக் க்லைத்துவிடத் தீர்மானித்துள்ளேன் - என்றார். (ஒ-5)

### 9 வயதுச்...

லால் பீடிக்கப்பட்டிருந்தார். நேற்று அதிகாலை காய்ச்சல் அதிகரித்து மயங்கிய நிலையில் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காய்ச்சல் அதிகரித்திருந்த நிலையில் சிறுமி சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். சிறுமி டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. சிறுமியின் குருதி மாதிரி கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன. (எ-26)

othm qualifications

UK Diploma in
BUSINESS MANAGEMENT
Level 4 Qualification
காலம்: 12 Months



Why BLC?

- தலைசிறந்த விரிவுரையாளர் குழாம்
- அதி நவீன வசதிகள் மற்றும் கற்றல் உபகரணம்
- விசாலமான பல்கலைச் சூழல்
- இலவச ஆங்கில மொழி பயிற்சி
- மாணவர் வசதிக்கேற்ற நேர அட்டவணை
- இலகு தவணைக் கொடுப்பனவுச் சலுகை இவை உட்பட இன்னும் பல விஷேட அம்சங்கள்.

London OTHM இன் நேரடி வழிகாட்டலில் சர்வதேச மற்றும் உள்நாட்டில் (OTHM & TVEC) அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்

வகுப்புக்கள் வார இறுதி அல்லது இரவு நேரங்களில் மாணவர் வசதி அடிப்படையில் நடைபெறும்.

BLC CAMPUS

4th Lane,
Brown Road, Jaffna.

தொடர்புகளுக்கு: 0777174443

T- 021 493 5555, 021 437 4443 E - info@blccampus.edu.lk www.blccampus.edu.lk



Sampath DOUBLE S
சேமிப்புக் கணக்கு
இப்பொழுது 100% வரை
போனஸ்
வட்டி

ரூபா 75,000/- இற்கு மேற்பட்ட வைப்புகளுக்கு
குடையொன்று இலவசம்

இப்பொழுது சம்பத் Double S போனஸ் கணக்கின் சேமிப்புகளுக்கு, ஒவ்வொரு மாதமும் வட்டிக்கு மேலதிகமான 100% வரை போனஸ் வட்டி.

மேலும் பல அனுகூலங்கள்!

- ஒன்லைன் வங்கிச்சேவை வசதி மற்றும் கணக்கில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் குறித்த உடனடி SMS Alerts.
- Cardless Cash சேவை மூலம் பணம் மீளப்பெறல்.
- ATM கொடுக்கல் வாங்கல் மற்றும் கணக்கை **ஆரம்பிக்கும்போதே** ஏனைய கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக்கூடிய International Mastercard/Visa டெபிட் அட்டை.
- நாடு முழுவதும் பரந்திருக்கும், 365 நாட்களும் இயங்கும் சூப்பர் கிளைகள் உட்பட 229 கிளைகள்.

இன்றே சம்பத் Double S கணக்கொன்றினை ஆரம்பித்து 100% போனஸ் வட்டியை பெறுங்கள்!

*சாதாரண வட்டி வீதம் 3% (வருடாந்த வட்டி)*

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

Sampath Bank Fitch Ratings A+(lka)





## விற்பனைக்கு

HERO HONDA PLEASURE
XG XXXX (CS 29408)

**0776705689**

## பணியாளர் தேவை

மனிப்பாயில் இயங்கும் அரைக்கும் ஆலைக்கு அனுபவம் உள்ள பணியாளர் தேவை

**077 337 0914**

## காணி விற்பனைக்கு

சுன்னாகம், உரும்பிராய் பகுதிக்கு அண்மையில் 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**077 664 2544, 076 845 9725**

## பணிப்பெண் தேவை

திருகோணமலையில்
ஓர் டாக்டர் வீட்டில் தங்கியிருந்து
பணிபுரியக் கூடிய
பணிப்பெண்தேவை.வயது 40 - 50
தங்குமிடவசதி செய்து தரப்படும்.
சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.

**076 807 8985, 075 909 8738**

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111




# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## பரமநாதன் தெய்வேந்திரம்

(பிரபல தொழிலதிபர், தெய்வம் புடவை மாளிகை – புதுக்குடியிருப்பு, தெய்வம் வாணியம்)

எமது குடும்பத் தலைவராகத் திகழ்ந்து. எம்மை வழிநடத்திய எமது அன்புத் தெய்வம் எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட செய்தியறிந்து நேரில் வந்தும் தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் மூலமாகவும் எமக்கு அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும். இறுதிக்கிரியைகளில் நேரிலே கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும். மலர்வளையம். மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும். கண்ணீர் அஞ்சலி அறிவித்தல்களைப் பதிப்பித்து விநியோகித்தவர்களுக்கும். சகல நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு உதவி செய்துவரும் உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு நாளை (21.11.2019) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

4ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு. (C/11709)(11,17)

மனைவி மற்றும் குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 ..... 08 ..... 1935



மறைவு 18 ..... 11 ..... 2019

## செல்வி அன்னபூரணி இரத்தினம் (அன்னா)

(முன்னாள் உப அதிபர் – யா/ இந்து மகளிர் கல்லூரி)

ரங்கூனை பிறப்பிடமாகவும். இல.**65**, வைமன் வீதி. நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அன்னபூரணி இரத்தினம் நேற்று **(18.11.2019)** திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான C.S இரத்தினம் - லீலாவதி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வியும். R.K.பிள்ளை (**பொபி**). விசாலாட்சி (பெற்றி) மற்றும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு (ஜெரல்ட்). கனகசபாபதி (பாப்பா) ஆகியோரின் அன்புச் சகோதரியும். இந்திரமதி (இந்திரா). காலஞ்சென்ற குகதாசன் மற்றும் யோகாம்பிகை (அம்பிகா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவப்பிரபா - ஈஸா. பிரியதர்சினி - ரமேஸ். கார்த்திகேயன் - அஜிதா. தயாபரி - கிருஸ்ணாகரன் ஆகியோரின் அன்பு மாமியும். ஜோதி. ஜெகான். அஞ்சலி. அஸ்வின். ஹசிக்கா. றிசிக்கா. பவீசன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **21.11.2019** வியாழக்கிழமை காலை **08** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் **10** மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

CS29402(16/17)


இல.65, வைமன் வீதி,
நல்லூர்.

தகவல்: குடும்பத்தினர்
077 483 0391

# மரண அறிவித்தல்கள்

## முத்துவேலு சரவணமுத்து

(ஓய்வு பெற்ற பிரதம லிகிதர், தெனியாயா– மூங்கிலாஞ்சேனை)



தோற்றம் 29.09.1920 மறைவு 19.11.2019

இந்துக் கல்லூரி வீதி. வடலியடைப்பு பண்டத்தரிப்பினை பிறப்பிடமாகக் கொண்டவரும் வெள்ளவத்தை. நோர்வே ஆகிய இடங்களில் தற்காலிகமாக வசித்தவரும் இல. 06. கனகபுரம் கிளிநொச்சியை வசிப்பிடமாக கொண்டவருமாகிய உயர்திரு முத்துவேலு சரவணமுத்து (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர். தெனியாயா- மூங்கிலாஞ்சேனை) நேற்று (19.11.2019) செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துவேலு சின்னப்பிள்ளை ஆகியோரின் மகனும் வீமன்காமம் தெல்லிப்பழையைச் சேர்ந்த இராசையா பொன்னம்மா ஆகியோரின் மருமகனும். காலஞ்சென்ற சரஸ்வதி (ஆசிரியை- இந்துக் கல்லூரி. பண்டத்தரிப்பு) அவர்களின் அன்புக் கணவரும். சுரேந்திரன் (நோர்வே) அவர்களின் அன்புத் தந்தையும். சிவவதனா (நோர்வே) அவர்களின் அன்பு மாமனாரும். சானு. சஞ்சை (நோர்வே) ஆகியோரின் பாசமிகு பேரனும். காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம். சிதம்பரம். சௌவுந்தரம். சரஸ்வதி. கண்மணி. நாகேஸ்வரி மற்றும் செல்வரத்தினம் (வாத்தியார்- இல.06. கனகபுரம்) ஆகியோரின் அன்பு சகோதரனும். காலஞ்சென்றவர்களாகிய தர்மலிங்கம். நாகலிங்கம். துரைச்சாமி. பரம்சோதி. நாராயணன். பத்மாவதி மற்றும் மங்கையற்கரசி. பாக்கியநாதன். பேரின்பநாயகம். பாலச்சந்திரன். மனோகரன். கருணாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும். அன்பரசி (ஆசிரியை. கிளி/ கிளிநொச்சி ம.வி). பாலேந்திரன் (பொதுமுகாமையாளர்- வடமாகாண சமாசம்). அன்பழகி (வீதி அபிவிருத்தி அதிகார சபை- மாங்குளம்). திருவருச்செல்வன் (செல்வா சென்றர்- கனகபுரம்) ஆகியோரின் பெரியப்பாவும் காலஞ்சென்ற மயில்வாகனம். செல்வநாயகம். பகவதியம்மா. பேரின்பநாயகம். மகேஸ்வரி. சந்திரோதயம். தனிநாயகம் ஆகியோரின் சித்தப்பாவும். பத்மநாதன். பத்மாவதி. கமலாவதி. கலாவதி. சோமஸ்கந்தராஜா. ஜெயலதா. ஜெயக்குமார். துமாகாந்தன், காலஞ்சென்ற ரூபகாந்தன் மற்றும் செல்வகாந்தன். பிரேமளா. மஞ்சுளா. சியாமளா. ப்ாஸ்கரன் (கிளி/ ஊற்றுபுலம் அ.த.பா). ஞானதமிழ்ச்செல்வி (கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்). சத்தியபாமா. பிரதீப் ஆகியோரின் அன்பு மாமனாரும் திரு திருமதி சிவசண்முகநாதனின் சம்மந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.06. கனகபுரத்திலிருந்து நாளை (21.11.2019) வியூாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று கந்தன்குளம் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

cs40510(16/17)

தொடர்புகளுக்கு
077 446 1904

தகவல்:
ச. சுரேந்திரன் (மகன்)
ச. செல்வரத்தினம் (சகோதரன்)



## திருமதி தங்கமணி அற்புதராசா

திருமதி தங்கமணி அற்புதராசா கடந்த (18.11.2019) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கிராம்புவில் முருகன் கோயில் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற இராசரத்தினம் உமையம்மா தம்பதிகளின் மூத்த மகளும் சரசாலை வடக்கைச்சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லப்பா தங்கம்மா தம்பதிகளின் மருமகளும் சரசாலை வடக்கைச் சேர்ந்த செல்லப்பா அற்புதராசாவின் அன்பு மனைவியும் பிரதீப் (தீபன்). காலஞ்சென்ற டெனிஜா ஆகியோரின் அன்புத்தாயாரும் கந்தசாமி சிவப்பிராகாசம். காலஞ்சென்ற சிவகுமார். தவமணி. நவமணி (இங்கிலாந்து). மலர்மணி (டென்மார்க்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் மேரி கொரக்ரி. வசந்தி. சந்திரமதி. சந்திரகுமார் (இங்கிலாந்து). பார்த்தீபன். (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனியும் சிவலக்சி.-துர்மிகா. கஜீபன். தர்ணிகா. ஜெசிக்கா (இங்கிலாந்து). ஜெனிற்றா (இங்கிலாந்து). ஜேஜே (இங்கிலாந்து). அர்வின் (டென்மார்க்). அர்ஜின் (டென்மார்க்) ஆகியோரின் பெரியம்மாவும் . தங்கராசா. காலஞ்சென்ற நாகராசா சரஸ்வதி. ஈஸ்வரி. கலாதேவி. இராசேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் சுந்தரலிங்கம். குலராஜசிங்கம். மேகநாதன். இந்திரன். நகுலாதேவி காலஞ்சென்ற விமலாதேவி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2019) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிராம்புவில் முருகன் கோயில் வீதி,
சாவகச்சேரி வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

# நம்பிக்கைத் துரோகம்!



மஞ்சக்குப்பம் கிராம தோட்டத்தில், தென்னையும், மாமரங்களும் நின்றன. தென்னை மரத்தில், ஒரு கழுகு நெடு நாளாக வசித்து வந்தது.

மா மரத்தில், அழகிய பச்சைக் கிளிகள் இரண்டு வசித்தன ஒரே தோட்டத்தில் இருந்தாலும், கழுகும், பச்சைக்கிளிகளும் பேசியதே இல்லை.

ஒரு நாள் முட்டை இட்டது பெண் கிளி; மகிழ்ச்சியடைந்தது ஆண் கிளி. அதே நேரம் கவலையுடன், "காலையில் உணவு தேட சென்றால், மாலை தான் திரும்புவோம்; அதுவரை, முட்டைகளை யார் கவனித்துக் கொள்வது" என்றது.

உடனே, "பக்கத்து மரத்தில் வசிக்கும் கழுகிடம் உதவி கேட்கலாம்" என்றது பெண் கிளி.

அவை, தென்னை மரத்துக்குச் சென்றன கம்பீரமாக அமர்ந்து இருந்த கழுகைக் கண்டதும், அஞ்சி நடுங்கின.

மலர்ந்த முகத்துடன், "வாருங்கள் கிளிகளே… நலம் தானா… எங்கிருந்து வருகிறீர்கள்…" என்று அன்புடன் விசாரித்தது கழுகு.

பயம் விலகிய கிளிகள், "இங்கு தான், மாமரத்தில் வசிக்கிறோம்; எங்களுக்கு ஒரு உதவி தேவைப்படுகிறது" என்றன.

உடனே, "என்ன உதவி?" என்றது கழுகு.

வந்த விடயத்தைக் கூறின பச்சைக்கிளிகள்.

மிகவும் உறுதியான குரலில், 'திரும்பி வரும் வரை, முட்டைகளைத் தினமும் பத்திரமாக பார்த்துக் கொள்கிறேன் நீங்கள் கவலைப்பட வேண்டாம்" என்றது கழுகு.

சில நாட்கள் சென்றன.

முட்டைகளில் இருந்து குஞ்சுகள் வெளிவந்தன; அவற்றை, சாப்பிடும் ஆசை வரவே, கட்டுப்படுத்த முயன்றது கழுகு; ஆனால் முடியவில்லை.

ஒரு குஞ்சை கொத்தி, ருசி பார்த்தது கழுகு. ஆசை நிறைவேறிய மகிழ்ச்சியில் கழுத்தை நீட்டி அமர்ந்திருந்தது. அப்போது, அம்பு ஒன்று, அதன் கழுத்தில் பாய்ந்தது; அது, "ஐயோ" எனக் கதறித் துடித்தபடி சாய்ந்தது.

கிளிகள், அந்த நேரத்தில் அங்கு வந்தன. அம்பு பட்டு விழுந்து கிடந்த கழுகைக் கண்டு பதறியபடி, "அண்ணா… யார் இப்படி செய்தது." என்று, முதலுதவி செய்ய முயன்றன. உடனே கழுகு, "மன்னித்து விடுங்கள் கிளிகளே… நான் நம்பிக்கை துரோகம் செய்து விட்டேன். நம்பி ஒப்படைத்த உங்கள் குஞ்சுகளில் ஒன்றை தின்று விட்டேன். அதற்கு தான் தக்க தண்டனை கிடைத்துள்ளது" என்று கூறி, உயிரை விட்டது.

குட்டி பூக்களே… நம்பிக்கை துரோகம் செய்ய கூடாது; துரோகம் செய்தால், தக்க தண்டனை கிடைக்கும் என்பதை, மனதில் கொண்டு வாழுங்கள்.


## வவுனியா தெற்கு தமிழ் பிரதே சபை
## வழங்குனர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் - 2020

சபையானது 2020 ஆம் ஆண்டுக்கான கீழ்க் குறிக்கப்பட்டுள்ள பொருட்கள் சேவைகளை வழங்குவதற்குத் தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குனர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

**பொருட்கள்**

01. காகிதாதிகள் பொருட்கள், எழுது பொருட்கள்
02. அலுவலக உபகரணங்கள்
03. நூலகங்களுக்கான நூல்கள்
04. புடவைவியாபாரம்
05. கட்டடப் பொருட்கள் (சீமெந்து, ஓடுகள், கம்பி வகைகள்,கொங்கிறீட் தூண்கள், சீமெந்து கற்கள்)
06. கற்கள், மணல், கிரவல்
07. தீந்தைகள் வகைகள் ( Paints) , நிறம் தீட்டும் பொருட்கள்
08. நீர் வழங்கும் குழாய்கள், கியூம் பைப்புகள் (Hume Pipe) மற்றும் ஏனைய பொருட்கள்
09. வாகன உதிரிப்பாகங்கள், துணைப் பொருட்கள்
10. மின் வழங்கும் பொருட்கள், மின் பாவனைப்பொருட்கள்
11. எரி பொருட்கள், உராய்வு நீக்கிகள்
12. இரும்பு பொருட்கள்
13. தீராந்திகள், பலகைகள்
14. பனைமரங்கள், சலாகைகள்
15. வாகனங்களுக்கான டயர், ரீயூப் மற்றும் மின்கலங்கள்
16. கணினி, பிரதியாக்கல் இயந்திரம், மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
17. சுத்திகரிப்பு பொருட்கள், கிருமி நாசினிகள்
18. பாதணிகள், தோற்பொருட்கள்
19. அலங்காரப்பொருட்கள்
20. இலத்திரனியல் பொருட்கள்

**சேவைகள்**

01. அச்சிடுதல், புத்தகங்கள் கட்டுதல்
02. மோட்டார் வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள்
03. ஒட்டுவேலைகள், உலோக வேலைகள்
04. மின்சாதனங்கள் திருத்தம், மீள மின்வலுவூட்டல் (Battery Charge)
05. இலத்திரனியல் சாதனங்கள்
06. வாகனங்கள் ரியூப் ஒட்டுதல்
07. வாகன சுத்திகரிப்பு
08. கோலவுடை, சீருடை தைத்தல்
09. கணினி பிரதியாக்கம் இயந்திரம் திருத்தல், சுத்திகரிப்பு (Service)
10. இறப்பர் முத்திரை தயாரித்தல்
11. வாகனங்கள் திருத்தம் செய்தல்.

**ஒப்பந்த வேலைகள் (ICTAD பதிவு உள்ளவர்கள் மட்டும்)**

01. கட்டட நிர்மாண வேலைகள்
02. கிணறு அமைத்தல்
03. வீதி நிர்மாணம், திருத்த வேலைகள்

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கு தனித்தனியான விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பபடிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தின் முன் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1000.00 உடன் அரசவரிகளையும் சேர்த்து ரூபா 1170.00 செலுத்தப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் கடிதஉறையின் இடதுபக்க மேல்மூலையில் "வழங்கல்/ ஒப்பந்த சேவைக்கான விண்ணப்பம் - 2020" எனக்குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் செயலாளர், தலைமைக்காரியாலயம் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்படிவங்கள் 20.12.2019ந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு 024-2225737/ 024-2050067 எனும் அலுவலக தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**திருமதி சுகந்தி கிஷோர்,**
**செயலாளர்,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா.**



## இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக, எல்.பீ. ஃபினான்ஸ் தனது ஆண்டறிக்கைகளின் சமர்ப்பணத்தில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

வங்கி சாராத நிதிச் சேவைகள் துறையில் தன்னிகரற்ற முன்னணி இடத்தை வகிப்பதுடன் புதுமை வழிகளின் முன்னோடியாகவும் விளங்கும் எல்.பீ. ஃபினான்ஸ், 2018/2019ஆம் ஆண்டிற்கான அதன் சுருக்கமான ஆண்டறிக்கையை வீடியோ வடிவத்தில் அறிமுகப்படுத்தியிருப்பது குறித்துப் பெருமையடைகின்றது. எல்.பீ. ஃபினான்ஸின் ஒட்டுமொத்த வியாபாரச் சிறப்பையும் மூலோபாயத்தில் செலுத்தப்படும் கவனம், செயற்பாடுகளில் செலுத்தப்படும் கவனம், நிறுவன ஆளுகை முறைகள், இடர் முகாமைத்துவம், நிதிச் செயற்பாடுகள் என்பவற்றையும் இந்த ஆண்டறிக்கை எடுத்துக்காட்டுகின்றது. நாம் அறிமுகப்படுத்தியுள்ள இந்த வீடியோக்கள், எதிர்காலத்தில் ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும் முறையில் இது புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துமென நாம் நம்புகின்றோம்.

உங்கள் மொபைல் சாதனத்தில் இலகுவாகப் பெறக்கூடிய மற்றும் இலகுவாக மீளாய்வு செய்யக்கூடிய இந்த வீடியோ ஆண்டறிக்கை எமது பங்காளிகளின் நேரத்தை மீதப்படுத்த உதவும். அச்சிடப்பட்ட, புத்தக வடிவிலான ஆண்டறிக்கையில் நீங்கள் தங்கியிருக்க வேண்டிய அவசியத்தை இது குறைக்கும். உங்களுக்குத் தேவையான தகவல்களைச் சுருக்கமாகவும் விளங்கிக்கொள்வதற்கு இலகுவான முறையிலும் அறிந்துகொள்ளலாம்.

அது மாத்திரமன்றி, வீடியோக்கள் உயர்ந்த மட்டத்திலான நம்பிக்கையை வழங்குகின்றன. எமது நிறுவனத்தின் தலைவர், முகாமைத்துவப்பணிப்பாளர், ஏனைய பணிப்பாளர்கள், பிரதம நிதி அதிகாரி ஆகியோர் வழங்கும் தகவல்களை நீங்கள் நேரடியாகவே கேட்க முடியும். அவர்கள் அனைவரும் தத்தமது நிபுணத்துவத் துறைகள் சம்பந்தமாகப் பேசுவார்கள். ஆக்கபூர்வமான முறையில் சமர்ப்பிக்கப்படும் இந்த ஆண்டறிக்கை, நிறுவனத்தின் செயற்பாட்டு ஆண்டு தொடர்பாக மிக முக்கிய தகவல்களை சுருக்கமான முறையில் உள்ளடக்கியதாக இருக்கும்.

எல்.பீ. ஃபினான்ஸின் முகாமைத்துவப்பணிப்பாளர் திரு. சுமித் ஆதிஹெட்டி இது பற்றித் தெரிவிக்கையில், வீடியோ ஆண்டறிக்கையையும் அச்சிடப்பட்ட முழு அளவிலான ஆண்டறிக்கையையும் எல்.பீ. ஃபினான்ஸின் பிரத்தியேக வலைத்தளத்தில் பெறக்கூடியதாக இருக்கும் என்று கூறினார். "எல்.பீ. ஃபினான்ஸின் நிலைபெறுதகு வலைத்தளம் 2017இல் ஆரம்பிக்கப்பட்டது. முத்துறைத் தரச்சிறப்பிற்கான எமது அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுவற்காகவே அது பிரத்தியேகமாக ஏற்படுத்தப்பட்டது. ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கையை மீளாய்வு செய்ய விரும்பும் தொழில்நுட்ப ஆய்வாளர்களின் வசதிக்கென, இலங்கையில் முதல் தடவையாக, ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் (IR) பரிசோதிப்புப் பட்டியல் ஒன்றையும் நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.

பங்காளிகள் அனைவருக்கும் சிறந்த பெறுமதியை உருவாக்கும் நிறுவனத்தின் அடிப்படைக் கொள்கைக்கு அமைய, வாடிக்கையாளர்களுக்கு உறுதியான மற்றும் முன்னேற்றகரமான நிதிச் சேவைகளை வழங்கும் அதே வேளையில், விசேடமாக வடிவமைக்கப்பட்ட நிதித் தீர்வுகளை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர்கள் தகவலறிந்த தீர்மானங்களை எடுப்பதற்கு இடமளிக்கும் வகையில் அவர்களுக்குச் சரிநுட்பமான மற்றும் வெளிப்படையான தகவல்களை வழங்குவதன் மூலமும் அச் சேவைகளுக்கு மேலதிக பெறுமதியைச் சேர்க்க எல்.பீ. ஃபினான்ஸ் தன்னை அர்ப்பணித்துள்ளது. சகல சமூகத்தினரும் தத்தமது விசேட பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு, சுபீட்சமான மற்றும் நிலைபெறு தன்மையுள்ள வாழ்க்கையை வாழக் கூடிய ஒருங்கிசைவான மற்றும் நன்மையளிக்கும் சமுதாயத்தை உருவாக்குவதற்கென எடுக்கப் படும் தேசிய முயற்சிக்குப் பங்களிப்புச் செய்யும் வகையில் உலகத் தராதரங்களுக்கு அமைவான மிகச் சிறந்த பொருளாதார, சுற்றாடல் மற்றும் சமூக நடைமுறைகளை ஒருங்கிணைப்பதிலேயே நிறுவனத்தின் நீண்டகால நோக்கும் தற்கால நடைமுறைகளும் கவனம் செலுத்தும். செல்வ உருவாக்கம் மற்றும் சாத்தியமான வளர்ச்சி மூலம் சகல பங்காளிகளுக்கும் நிலைபெறு தன்மையுள்ள எதிர்காலத்தைத் ஏற்படுத்தும் பொருட்டு, மூலோபாய மற்றும் புதுமை வழியிலான திட்டங்களை அமுல் செய்வதற்கு எல்.பீ. ஃபினான்ஸ் ஏற்கனவே நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

சமூக ஊடகப் பிரசாரம்

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக, எல்.பீ. ஃபினான்ஸ் அதன் 2018/19 ஆண்டறிக்கையைச் சமர்ப்பிப்பதற்குப் புரட்சிகரமான வழியை அறிமுகப்படுத்தியுள்ளது.

எதிர்பாருங்கள்...... எல்.பீ. ஃபினான்ஸ் பி.எல்.சி. தலைவர் உங்களுக்கு உரை நிகழ்த்துவார்.

வங்கி சாராத நிதிச் சேவைகள் துறையில் தன்னிகரற்ற முன்னணி இடத்தை வகிப்பதுடன் தொழிற்றுறையில் புதிய முன்முயற்சிகளின் முன்னோடியாகவும் விளங்கும் எல்.பீ. ஃபினான்ஸ் அதன் 2018/19 ஆண்டறிக்கையை வீடியோ வடிவத்தில் சமர்ப்பிப்பது குறித்துப் பெருமையடைகின்றது.

வீடியோ இல. 01

பத்திரிகைக்கான குறிப்பு வாசகம்

**இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக, எல்.பீ. ஃபினான்ஸ் அதன் 2018/19 ஆண்டறிக்கையை வீடியோ முறையில் சமர்ப்பித்துள்ளது.**




பிரவேசியுங்கள்: www.sustainability.lk அல்லது QR குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள்.

ஓம் ஸ்ரீராம் விஸ்வம்பிரமனே நம

## மரண அறிவித்தல்

## சபாபதி புஸ்பராசலிங்கம்



அரசடி ஒழுங்கை திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி புஸ்பராசலிங்கம் நேற்று (19.11.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி- அன்னம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- சிவபாக்கியம் தம்பதியின் மருமகனும் காலஞ்சென்ற கனகேஸ்வரி (கனகம்மா)யின் அன்புக் கணவரும் பாஸ்கரன். மாலினி (லண்டன்). தயாளன் (ஆசிரியர்- யா/மத்திய கல்லூரி). காலஞ்சென்றவர்களான அகிலன். ராகினி ஆகியோரின் அன்புத் தந்தையும்; ராசரத்தினம் (ஆச்சாரியார்). தவமணி தேவி (தேவி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.11.2019) வியாழக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி செம்பாடு இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
அரசடி ஒழுங்கை, திருநெல்வேலி. குடும்பத்தினர்

## நாகபூஷணி திருமண சேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.

257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

021 222 9306, 077 138 7596, 071 999 9306


## வேலையாள் தேவை

முருகண்டி பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள பிரபல உணவகத்திற்கு வேலையாட்கள் தேவை.

- சமையலாளர்
- சிட்டை எழுதுநர்
- உணவு பரிமாறுபவர்
- சுத்திகரிப்பாளர்
- காசாளர்

இருபாலாரும் தேவை (C 11710)

0773866250



## இளநீர்

இயற்கை என்றும் நமக்குப்
பரிசாய்த் தந்திடும் நீராம்
தென்னை மரத்தில் காய்க்கின்ற
இளநீர் அதன் பேராம்!

செயற்கை சிறிதும் இல்லை
எனவே தீங்கும் இல்லை
பெரியவர் குழந்தை யாவரும்
குடிக்கத் தகுந்த நீராம்!

ஓடி ஆடி விளையாடி
களைத்து நாமும் வந்தால்
குடித்த உடன் களைப்பினைப்
போக்கும் நல்ல நீராம்!

அருந்திட தாகம் தணியும்
உடலில் குளிர்ச்சி தோன்றும்
நீரின் அளவு நம் உடலில்
குறையாமல் அது காக்கும்!

வெப்பத்தாலே தோன்றும்
நோய்கள் வராமல் தடுக்கும்
எலும்புகள் உறுதி பெற்றிடவே
சத்தும் எமக்குக் கொடுக்கும்!

கோடை காலம் கடுமையாய்க்
கொளுத்துகின்ற வெயிலுக்கு
இளநீர் பருகி நாமும்
உடலின் நலனைக் காப்போம்!

## மரண அறிவித்தல்

# சுப்பிரமணியம் விசுவலிங்கம்



பிறப்பு 14.01.1940 இறப்பு 18.11.2019

யாழ்ப்பாணம் அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி திருவையாறை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் விசுவலிங்கம் 18.11.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னமா தம்பதியரின் மருமகனும், மகாலட்சுமி (பூக்காறி) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, கணேசுப்பிள்ளை மற்றும் கார்த்திகேசு, நாகம்மா, வெற்றிவேல் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சறோஜினிதேவி, சுசீலா, புவனேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (25/2 திருவைய்யாறு) அவரது இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் இன்று (20.11.2019) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கரியைக்காக இரணைமடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**குடும்பத்தினர்.**

புவனேந்திரன் - 070 564 7693
கருணா - 077 588 7141

25/2, திருவையாறு, கிளிநொச்சி.

(cs.29414) (13.17)

## மரண அறிவித்தல்

## சிறில் மேரி மாகிறேற் (செல்வம்)



பிறப்பு 19.08.1939 இறப்பு 18.11.2019

குருநகரைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிறில் மேரி மாகிறேற் (செல்வம்) கடந்த (18.11.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபமாலை சிறில் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை வரவணிக்கா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செபமாலை சவிராசி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான புஸ்பம், சேவியர் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான அரியநாயகம், புஸ்பம், செபஸ்ரியான் ஆகியோரின் மைத்துனியும் ஜசறா, வளர்மதி, அன்ரனி (ஜேர்மனி), லவ்கின், சின்னப்பிள்ளை, கோமஸ் (பிரான்ஸ்), றூபன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற எட்வின் ஜெயராஜ் ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராசநாயகம் (ஓய்வுபெற்ற மக்கள் வங்கி உத்தியோகத்தர்), பாவை, யேக்குமார், ஜான்சி (பிரான்ஸ்), ஜிவ்றி (பிரான்ஸ்), ஆகியோரின் மாமியாரும், ராஜ் கலிஸ்ரஸ் - பொபிதா, ராஜி - ரஞ்சன் (பிரான்ஸ்), றொமி - இளங்கீரன், றெனு - மீரா, எட்வின் - ரேவதி, லக்சி - லெபோன்ஸ் (லண்டன்), பெனினா, றுக்சி, விஜய், வினோத், தர்சன் (பிரான்ஸ்), தர்சிகா - சுஜிவன் (பிரான்ஸ்), றோஜா (பிரான்ஸ்), மெலிசா (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் சரோனி, றிதிக்ஸா, இனுசாந், ஜொனாத்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று மாலை 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலிக்காக புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : இ. ராஜ்கலிஸ்ரஸ் (பேரன்)**

## மரண அறிவித்தல்

## தாமோதரம்பிள்ளை நாகநாதன்

*(முன்னாள் R.D.D தொழில்நுட்ப உத்தியோகத்தர்)*



பிறப்பு 03.02.1953 இறப்பு 18.11.2019

சுழிபுரம் மத்தி சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை நாகநாதன் 18.11.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - அருளம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் பத்மாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நிசாந்தன், கௌசல்யா மற்றும் நிசாந்தி (லண்டன்), பிரசாந் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரூபேந்திரனின் (லண்டன்) அன்பு மாமனாரும் முருகேசம்பிள்ளை (பிரான்ஸ்), சற்குணநாதன் (வவுனியா), ஜெகநாதன் (புத்தளம்), லோகநாதன் (ஜேர்மனி), கமலநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சத்தியதேவி (கொலண்ட்), கமலாதேவி (பிரான்ஸ்), கருணாதேவி (மல்லாவி), ஸ்ரீ கிருஸ்ணமேனன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் கன்சிகன் (லண்டன்), இனோச் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2019) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் திருவடிநிலை இந்துமயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
சுழிபுரம் மத்தி, சுழிபுரம். (CS 29411)(14.17) **குடும்பத்தினர்.**

**077 646 4621**

## மோடியின்...

த்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நேற்று மாலை இலங்கைக்கு அவசர பயணம் ஒன்றை மேற்கொண்டு வந்துள்ளார். அவர் புதிய அரச தலைவர் கோத்தபாய ராஜபச்வை நேற்று இரவே சந்தித்துப் பேச்சு நடத்தியுள் ளார். இந்திய அரசின் அழைப்பை இந்திய அயலுறவுத் துறை அமைச்சர் அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச விடம் கையளித்துள்ளார். இந்தச் சந்திப்பை அடுத்து அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச இந்தியாவுக்கு எதிர்வரும் 29 ஆம் திகதி செல்லவுள்ளார்.

அரச தலைவராகப் பதவியேற்றதும் கோத்தபாய ராஜ பக்ச மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டுப் பயணமாக இந்தியப் பயணம் அமையும். இந்தியா செல்லும் அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச அந்த நாட்டின் தலைமை அமைச்சர், அரச தலைவர் மற்றும் உயர்மட்ட அதிகாரிகளைச் சந்திப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் சிறப்புப் பணிப்பின் பேரிலேயே அந்த நாட்டு அயலுறவுத் துறை அமைச்சர் இலங்கை வந்திருந்தார். இலங்கை வந்துள்ள இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச ஆகியோரையும் சந்திப்பார் என்று தெரியவருகின்றது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச வெற்றியீட்டினார். அவர் நேற்றுமுன்தினம் அநுராதபுரத்தில் பதவியேற்றுக் கொண்டார். நேற்று அவர் அரச தலைவர் செயலகத்தில் உத்தியோகபூர்வமாகத் தனது கடமைகளைப் பொறுப் பேற்றுக் கொண்டார்.

அதேவேளை, 2015ஆம் ஆண்டு நடந்த அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெற்ற மைத்திரிபால சிறிசேனவும் முதலாவது வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவுக்கே சென்றிருந்தார். (எ-22)




## விழிநீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர் **க.தெய்வீகன்** அவர்களின் பாசமிகு தந்தை **நாகநாதி கனகரத்தினம்** கடந்த 17.11.2019 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CS 1025)(15.17)

**பாடசாலைச் சமூகம்**
**யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி**

## நல்லூர் பிரதேச சபை
## கொக்குவில்
## 2020 ம் ஆண்டிற்கான மீள்கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், என்பவற்றை 2020ம் ஆண்டு தை மாதம் 1ம் திகதி தொடக்கம் மார்கழி 31ம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி :- 04.12.2019 ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 04.12.2019 ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.00
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 04.12.2019 ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேசசபை.

01. கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5,கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
02. கேள்விப்பத்திரங்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்திப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் தமது அடையாள அட்டையையும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
03. கேள்விப்படிவக்கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 15% பெறுமதிசேர் வரியும் 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்பட வேண்டும்.
04. கூட்டுறவுச்சங்கங்கள் தவிர்ந்த, தனிப்பட்டவர்கள் திருநெல்வேலிச்சந்தை, கொக்குவில் சந்தை என்பவற்றுக் குரிய விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பின், ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே ரூபா 1,500,000.00 இற்கும் ரூபா 200,000.00 இற்கும் குறையாது வைப்பில் உள்ளமைக் கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
06. ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
07. கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
08. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 10.12.2019 ம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
09. மேலதிக விபரங்களை 16.10.2019ம் திகதிய உதயன்/ தினக்குரல் பத்திரிகையின் நல்லூர் பிரதேசசபை கொக்குவில் 2020 ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் பார்வையிட முடிவதுடன் குறித்த நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு கேள்விதாரர் கட்டுப்படுதல் வேண்டும்.
10. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### 2020 ம் ஆண்டுக்கு சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இல | சந்தைகள் (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன்), இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| | நல்லூர் உப அலுவலகம் | | | |
| 1. | திருநெல்வேலிச்சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 15,000.00 | 25 512 000.00 |
| 2. | திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 663 000.00 |
| 3 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 02. | 500.00 | 5,000.00 | 162 525.00 |
| | கொக்குவில் உப அலுவலகம் | | | |
| 1. | கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 10,000.00 | 1 168 900.00 |
| 2. | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 467 100.00 |
| 3 | கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 581 000.00 |
| 4 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 01 | 500.00 | 5,000.00 | 142 200.00 |
| 5 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 02 | 500.00 | 5,000.00 | 142 200.00 |
| 6 | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 1 875 100.00 |
| 7 | கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 806 000.00 |

திரு தா.தியாகமூர்த்தி
**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி.**
**19.11.2019**

**தொலைபேசி இல 021 222 2700**

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு 17 . 07 . 2010

இறப்பு 19 . 11 . 2019

### செல்வி பென்சித் றஜாந்தி சிறிசுதாகரன்

**(சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி - தரம் 4)**

உடுவிலைப் பிறப்பிடமாகவும் சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பென்சித் றஜாந்தி நேற்று (19.11.2019) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சிறி சுதாகரன் (ஆசிரியர் - புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்) கனிமொழி (ஆசிரியை - புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகாவித்தியாலயம்) தம்பதிகளின் அன்பு மகளும் சிறாந்தியின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (20.11.2019) புதன்கிழமை பி.ப 2.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்பு புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி 3.30 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**100,பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல் : குடும்பத்தினர்.**
**சிறி சுதாகரன் - 077 229 8923**

(CS 29420)(15.17)



**தோற்றம்** 29 08 1929

**மறைவு** 15 11 2019

### சுப்பர் வேலுப்பிள்ளை

*(இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் (AGA), கிளிநொச்சி)*

கைதடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை வசிப் பிடமாகவும் கொண்டிருந்த சுப்பர் வேலுப்பிள்ளை 15.11.2019 வெள்ளிக் கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சுப்பர் கற்பகம் தம்பதியரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்ற திரு.திருமதி சுப்பிரமணியம் தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற திருமதி சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் சுரேந்திரன், நிமலேந்திரன், சத்தியேந்திரன், மோகேந்திரன், கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரபாகினி, சுகாநந்தினி, ஜயந்தினி, சுகந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜனோன், ஜனினா, அஜனன், அபிதன், வினுசன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, வள்ளியம்மை, தெய்வானைப்பிள்ளை, மயில்வாகனம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, ஆறுமுகம், சுப்பையா, பரமேஸ்வரி, கோடீஸ்வரன் மற்றும் யோகேஸ்வரன், செல்வராசா, மகேஸ்வரி, கமலாஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.11.2019) புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பொரளை ஜயரட்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நண்பகல் 12.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று 2.00 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:* **பிள்ளைகள்.**

**077 736 0168, 077 871 3138**

# டெங்குவை ஒழிப்போம்; உயிர்களைக் காப்போம்


## மரண அறிவித்தல்

### திருமதி அன்பு கணேசதாசன்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)




காரைநகரைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்பு கணேசதாசன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) நேற்று (19.11.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும் கார்த்திகேசு இராசம்மா தம்பதிகளின் மருமகளும் கணேசதாசனின் பாசமிகு மனைவியும் நந்தினியின் அன்பு தாயாரும் கங்காசுதனின் (கொக்குவில் இந்துக் கல்லூரி A/L மாணவன்). அருமைப் பேர்த்தியாரும் காலஞ்சென்ற அலோசியசின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற அருணேசராசா, அருணேசராணி, அருணேசரட்ணம், சயலொளிபவன். அருணேசகுகன். லண்டன்வாழ் அருணேசலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான மகாலட்சுமி, சின்னத்தம்பி பாக்கியம் காந்திமதி. மற்றும் கொழும்பு வாழ் மகேஸ்வரி லண்டன்வாழ் தங்கம்மா ஆகியோரின் அன்புச்சகோதரியும் சக்திவேல், சிவகுமரன், சத்திவாணி, ரகுமூர்த்தி, செல்வகுமரன், ரதிவாணி, வித்தியாவாணி, கீதா, வாணி, கௌரி, காந்தன், சாந்தா கௌரி, ஜெயக்குமார், குகணேஸ்வரி (வசந்தா), ரவிக்குமார், செல்வ கௌரி, கலைவாணி, திகலொளிபவன், ஸ்ரீவாணி, குகானந்தன், தயா, ஞானசக்தி, ஞானேந்திரன், ஞானமோகன், ஞானரூபன் ஆகியோரின் ஆசை அன்ரியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2019) புதன்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 018 6259 (CS 29422)(6.17) தகவல் : மகள், பேரன்

டெங்குப் பாதிப்புக்கு ஆளாவோருக்கு, இரண்டு நாள்களுக்கு மேல், உடல் எலும்பு இணைப்புகளில் தீவிர வலியுடன் கூடிய தொடர் காய்ச்சல் இருக்கும். இந்த அறிகுறிகள் இருந்தால், பொதுமக்கள் என்ன செய்ய வேண்டும்? எம் மக்களில் பெரும்பாலோரிடம், காய்ச்சல் என்றால், முதலில் மருத்துக் கடைகளுக்குச் சென்று, தன்னிச்சையாக மாத்திரை உட்கொள்ளும் போக்கு உள்ளது. ஆபத்தான இப்போக்கை கைவிட்டு, உடல்வலியுடன் கூடிய காய்ச்சல் இருந்தால், தாமதிக்காமல் உடனே மருத்துவமனைக்குச் செல்வது அவசியம்.

**முக்கிய பரிசோதனை**

டெங்கு அறிகுறியுடன் வருவோருக்கு, என்னென்ன பரிசோதனைகள் செய்யப்படுகின்றன? டெங்கு காய்ச்சல் அறிகுறியுடன் மருத்துவமனைக்கு வருவோருக்கு, முதலில், குருதியில் உள்ள தட்டணுக்களின் எண்ணிக்கையை அறியும் பரிசோதனை மேற்கொள்ளப்படும். சராசரியாக ஒரு மனிதனின் குருதியில் அவரவர் வயதிற்கேற்ப, 1.5 லட்சம் முதல் 4 லட்சம் வரை, தட்டணுக்கள் இருக்க வேண்டும். இந்த எண்ணிக்கை, 60 ஆயிரத்துக்கு கீழ் குறைந்தால், அவர்களுக்கு டெங்கு இருக்க, அதிக வாய்ப்பு உள்ளது. அதை உறுதி செய்யவதற்கான பரிசோதனைகள் செய்யப்பட்டு, கூடவே, தட்டணுக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான சிகிச்சை யும் தரப்படும்.

டெங்கில் எத்தனை நிலைகள் உள்ளன? மூன்று நிலைகள் உள்ளன. முதல் நிலை டெங்குவால் பாதிக்கப்படுவோருக்கு, டெங்கு வைரஸ் பாதிப்பதால், மூன்று முதல் ஏழு நாள்கள் வரை, காய்ச்சல் இருக்கும். மற்றப்படி பெரிய பாதிப்புகள் இருக்காது. இக்காய்ச்சல் வந்துபோன சில நாள்கள் இடைவெளியில், மீண்டும் டெங்கு வைரஸ் தாக்குதலுக்கு ஆளாவோர், காய்ச்சலின் இரண்டாம் நிலையில் உள்ளவர்களாக கருதப்படுவர். இவர்களுக்கு, குருதி உறைவதற்கு தேவையான தட்டணுக்களின் எண்ணிக்கை குறைந்து, வாய், மூக்கு போன்ற பகுதிகளில் குருதிப்போக்கு ஏற்படும். இந்நிலை முற்றியவர்கள், டெங்குவின் மூன்றாம் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இவர்களுக்கு, குருதிப் போக்கின் காரணமாக, குருதி சிவப்பணுக்களின் எண்ணிக்கை குறைந்து, குருதி அழுத்தம், நாடித்துடிப்பு குறைந்து, மயக்க நிலையை அடைவர். தோலில் ஆங்காங்கே சிவப்புப் புள்ளிகள் உண்டாகும். டெங்கு தாக்குதலுக்கு ஆளாகி, இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலையில் உள்ளவர்களுக்குதான் உயிரிழக்கும் அபாயம் அதிகம். ஆனால், தற்போது, டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்படுவோரில், 90 சதவீதம் பேருக்கு, டெங்கின் முதல் நிலை பாதிப்பு மட்டுமே உள்ளதால், பொதுமக்கள் பீதியடை யத் தேவையில்லை.

**இயற்கை மருத்துவம்**

பல இடங்களில் டெங்குக் காய்ச்சலின் பாதிப்பு வாட்டி எடுக்கிறது. இதைக் கட்டுப்படுத்துவதற்கு பல மருத்துவ முறை களை கையாண்டு வருகின்றனர். இதில் சித்த மருத்துவர்கள் பரிந்துரைப்பது நிலவேம்பு கசாயம். இதற்கு பல்வேறு மருத்துவ குணங்களும் உள்ளன. சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவ முறைகளில் நிலவேம்பு மூலிகையின் பங்கு அதிகம் உள்ளது. இது ஒரு சிறந்த கிருமி நாசினி இதனால் உடலில் நோய் எதிப்பு சக்தி அதிகம் உருவாகின்றது. விட்டுவிட்டு வரும் காய்ச்சல், கண்களைச் சுற்றிலும் வலி, தலை வலி, மூட்டு வலி, குமட் டல், வாந்தி, உடம்பில் சிறு கொப்புளங்கள், அதில் குருதிக்கசிவு, மலத்தில் குருதிக் ஆகியவைதான் டெங்குக் காய்ச்சலின் அறிகுறிகள்.

நிலவேம்பு குடிதண்ணீரில் வெட்டி வேர், விலாமிச்சு வேர், சந்தனத்தூள், பேய்புடல், கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு, பற்பாடகம் என்று ஒன்பது வகையான இயற்கை மருந்துப் பொருள்கள் கலந்து இருக்கின்றன. இதில் நிலவேம்பு, விலாமிச்சு வேர், பேய்புடல், மிளகு, பற்பாடகம் ஆகிய ஐந்து பொருள்களும் உடலின் வெப்பத்தை அகற்றி காய்ச்சலைப் போக்கும் தன்மை கொண்டவை. தலைவலி, மூட்டுவலி ஆகியவற்றையும் இவை போக்கிவிடும். நாவறட்சியைத் தடுத்து உடலில் நீர்ச்சத்துக் குறை யாமல் வெட்டிவேர் காப்பாற்றும். தொண்டை, உணவுக்குழல், இரைப்பை, குடல் ஆகியவற்றில் ஏற்படும் அழற்சியைப் போக்கி புண் ஏதும் ஏற்படாமல் கோரைக்கிழங்கு தடுக்கும். உடலில் உள்ள அகட்டு வாயுவை அகற்றி வயிறு உப்புசம் ஏற்படாமல் சுக்கு தடுக்கும். சிறுநீர் எரிச்சலைப் போக்கி அதிக சிறுநீர் எளிதில் வெளியேற சந்தனத்தூள் வழிவகை செய்கிறது. இத்தனை செயல்களையும் ஒருங்கே கொண்டதுதான் இந்த நிலவேம்பு சூரணம். பன்றிக் காய்ச்சல், பறவைக் காய்ச்சல் போன்ற எல்லா விஷக் காய்ச் சலுக்கும் ஏற்ற அற்புதமான மருந்து.

**நுளப்பைக் கட்டுப்படுத்த**

டெங்குக் காய்ச்சலை ஏற்படுத்தும் ஏடிஸ் கொசுவைக் கட்டுப்படுத்தவும் சித்த மருத்துவத்தில் வழி உண்டு. காஞ்சாங்கோரை அல்லது வேப்பிலையை வீட்டின் முன்புறம் மற்றும் கொல்லைப் புற வாசல்களில் தோரணம் போல் தொங்கவிட்டால், அதன் வாசனைக்குக் கொசுக்கள் உள்ளே வராது. அதேபோல, நொச்சி இலை அல்லது காஞ்சாங்கோரை இலையை நிழலில் காயவைத்து நெருப்பில் போட்டு புகை வரவழைத்தால், அந்தப் புகையும் கொசுவை உள்ளே வராமல் விரட்டிவிடும். ஆடாதொடை இலை மற்றும் வேப்பிலையை வெயிலில் காயவைத்து சமஅளவு எடுத்து பொடியாக்கிக்கொள்ள வேண்டும். அந்தப் பொடியோடு சிறிதளவு சாணத் தூள் சேர்த்து அதில் பச்சரிசிக் கஞ்சியை ஊற்றி உருட்டி வெயிலில் காயவைத்து எடுத்து பயன்படுத்தினாலும் நுளம்பு வராது.


## மரண அறிவித்தல்கள்

### சித்தர் கந்தையா



தோற்றம் 10.07.1926 மறைவு 14.11.2019

புன்னாலைக்கட்டுவன் தெற்கை பிறப்பிடமாகவும், கைதடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சித்தர் கந்தையா கடந்த (14.11.2019) வியாழக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சித்தர்- கைலாத்தை தம்பதி களின் அன்பு புதல்வரும் காலஞ்சென்றவர்களான வேலு -நாச்சிப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கதிராசிப் பிள்ளையின் அன்புக் கணவரும் கணபதிப்பிள்ளை காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, சின்னத்துரை, செல்லையா, பொன்னம்பலம் கிருஷ்ணன் ஆகியோரின் சகோதரரும் சண்முகநாதன் (ஜேர்மனி), தவமணி (கனடா), செல்வரத்தினம் (லண்டன்), மனோன்மணி (சுவிஸ்), புஸ்பமலர், குணரத்தினம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமசிவம், இந்திராணி, வதனா, சந்திரன், ஜெயா, விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் தீபா, றூபா, சீபா, மௌனிகா, பௌசிகா, தமிழினி, தாருஜன், மதுசன், மிதுனன், மீனுஜன், அங்கயன், அங்கயா, கீர்த்தீபன், காலஞ்சென்ற சுஞ்சீபன் ஆகியோரின் அன்புப் பேரனும், கௌசிகா, ஜெசிலின் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2019) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கைதடி வடக்கு தச்சன்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி வடக்கு

தகவல்: குடும்பத்தினர்.
077 332 9168

### நாகமுத்து அப்பையா



உரும்பிராய் வடக்கு, உரும்பிராயினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து அப்பையா அவர்கள் நேற்று (19.11.2019) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து கதிரி அவர்களின் மகனும் காலஞ்சென்றவர்களான கந்தன் தங்கமுத்து அவர்களின் மூத்த மருமகனும் பூரணத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னம்மா, சின்னையா, செல்லத்துரை மற்றும் பொன்னையா ஆகியோரின் சகோதரரும், சபேசன், பிரபாகரன், சந்திரிகா, ராதிகா, ஜெயந்தன், காலஞ்சென்ற யசோதா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ராதிகா, சுஜிதா, கிருபாகரன், பிரபாகரன், நிவேதிகா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2019) புதன்கிழமை மாலை 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இருளன் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 0424 995

தகவல்: குடும்பத்தினர்

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## சொல்வதைச்செய்தால்சிறப்பு

தமிழ், முஸ்லிம் மக்கள் தன்னைப் புறக்கணித்தாலும் அவர்களின்காவலனாக இருப்பேன். நான்இப்போது நாட்டின்தலைவன். மூவினமக்களினதும்தலைவர்என்று கூறியுள்ளார் 7ஆவது நிறைவேற்று அரச தலைவராகப் பதவியேற்றுள்ள கோத்தபாய ராஜபக்ச.

நேற்றுமுன்தினம்வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடன் பேசும்போதேஅவர்இந்தவிடயத்தைக்குறிப்பிட்டுள்ளார்.

அரச தலைவரின் சகோதரரும், முன்னாள் அரச தலைவரும், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்சவும்இவ்வாறானகருத்தையேவெளிநாட்டுஊடகவியலாளர்களிடம் வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ் மக்களும் இலங்கைக் குடிமக்கள்தான். அவர்கள் இந்தநாட்டில்தலைமிர்ந்துவாழும்நிலையை எமது ஆட்சியில் ஏற்படுத்துவோம். அவர்களின் மனங்களை வெல்லும் வகையில் நாம் செயற்படுவோம் என்று மகிந்த ராஜபக்ச கூறியுள்ளார்.

தெற்கில் பெரும் ஆதரவைப் பெற்றுள்ள ராஜபக்சதரப்பினர் சிறுபான்மை மக்களின் மனங்களை இம்மியளவேனும் வெற்றிகொள்ளவில்லை என்பதை நடந்து முடிந்த அரசதலைவர் தேர்தல் வெளிப்படுத்தியுள்ளது.

ராஜபக்சவினர்அதிகாரத்தில் இருந்தபோது சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை அணுகிய விதமும், சிறுபான்மைமக்களின்நியாயமானஅபிலாசைகளைபுறந்தள்ளிச் செயற்பட்ட விதமுமே அவர்களைச் சிறுபான்மை மக்களிடம் இருந்து தூரத் தள்ளி வைத்துள்ளது எனலாம்.

போரை முடித்துநாட்டில் அமைதியை ஏற்படுத்தினோம் என்றுராஜபக்சவினர்கூறினாலும்அவர்கள்அதிகாரத்தில் இருந்தபோது சிறுபான்மை மக்கள்நாட்டில் அச்சமின்றி, சுதந்திரமாக வாழும் நிலமையைத் தோற்றுவிக்கத் தவறியிருந்தனர்.

அரசியல்பிரச்சினை, காணிவிடுவிப்பு, அரசியல்கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர்விவகாரம்,அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள் எனதமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கருத்தில் எடுக்காத போக்கும், மறுபுறத்தில் முஸ்லிம் மக்கள் மீதான வன்முறைகளைத் தடுக்காத நிலைமையும் ராஜபக்சக்களில் இருந்து சிறுபான்மை மக்களைத் தூரத் தள்ளியது.

மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இருந்தபோது பௌதீக அபிவிருத்திகளைமேற்கொள்வதில்காட்டியமுனைப்புக்களை சிறுபான்மைமக்களின்பிரச்சினைகளைத்தீர்ப்பதில்காட்டவில்லை. பௌதீக அபிவிருத்திகளின் மூலம் சிறுபான்மை மக்களின் மனங்களை வெல்ல முடியும் என்ற ராஜபக்சவினரின் எண்ணம் தவறு என்று 2015ஆம் ஆண்டு நடந்த அரச தலைவர் தேர்தல் அவர்களுக்கு உணர்த்தியிருக்கும் என்பது திண்ணம்.

தற்போது மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள ராஜபக்சவினருக்கு சிறுபான்மை மக்களின் மனப்போக்கு என்ன என்பதை தேர்தல் முடிவுகள் உணர்த்தியிருக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும்இதையேஅறிக்கையொன்றில்சுட்டிக்காட்டியுள்ளார். புதிய அரசதலைவர், தமிழ் மக்களது கருத்து வெளிப்பாட்டுக்கு மதிப்பளித்துச் செயற்பட வேண்டுமென விரும்புகின்றேன். அவர், அவ்வாறு செயற்படுவார்என்று நம்புகின்றேன். அவ்வாறு செயற்படுவதன் மூலம், நாம் அனைவரும்இலங்கைநாட்டின்சமமானகுடிமக்கள்என்னும் உணர்வு ஏற்படும் என்பதையும் நாடு பிளவுபடாது பாதுகாக்கப்படும் என்பதையும் அதன் மூலம் நாடும், நாட்டில்வாழும்அனைத்துமக்களும்பெரும்முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் அடைவர் என்பதையும் புதிய அரச தலைவருக்கும் அவர் சார்ந்தோருக்கும் தமிழ் மக்கள்சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன்என்று இரா. சம்பந்தன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் சிறுபான்மை மக்கள் அச்சமின்றி, சுதந்திரமாக வாழ வழி ஏற்படுத்துவதே அவர்களின் மனங்களை வெல்வதற்கான வழி. அதை ராஜபக்சவினர் உணர்ந்து எதிர்காலத்தில் செயற்படுவார்களா என்பதைக் காலம்தான் வெளிக்காட்டும்.



# சிறுபான்மை மக்களின் நலன்களையும் பொருட்படுத்தவேண்டும் கோத்தபாய ராஜபக்ச

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச இலங்கைஅரசதலைவராகத்தேர்ந்தெடுக்கப்பட்டது முற்றிலும் எதிர்பாராத ஒன்று அல்ல. ஆட்சியாளர்கள் மீது மக்களுக்கிருந்த அதிருப்தியைப் போக்கும் விதத்தில் சஜித் பிரேமதாசவின் பரப்புரை அமையவில்லை. இலங்கையின் தெற்கில், குறிப்பாக சிங்களவர்களிடையே முந்தைய அரசின் மீது அதிருப்தி மட்டுமல்ல அவநம்பிக்கையும் ஏற்பட்டுவிட்டது. தமிழர்கள், முஸ்லிம்கள் பெருமளவுக்கு சஜித் பிரேமதாசவுக்குஆதரவாகவேவாக்களித்திருந்தனர்.

இலங்கை சுதந்திர கட்சித் தலைவரான சிறிசேனாவும், ஐக்கியதேசியக்கட்சித்தலைவரான ரணில் விக்ரமசிங்கவும் மகிந்த ராஜபக்ச மீண்டும்ஆட்சிக்குவந்துவிடக்கூடாதுஎன்பதற்காக 2015ஆம் ஆண்டில் கூட்டரசு அமைத்தனர். மைத்திரிபால சிறிசேன அரச தலைவராகவும் ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சராகவும் பதவியேற்றனர். ஆனால், அவ்விரு கட்சிகளின் கூட்டரசு பொருளாதாரம், ராணுவம், நாட்டின்உள்நாட்டுப் பாதுகாப்பு, அகதிகள் மறுசீரமைப்பு என்று எந்தத் துறையிலும் தீவிரமாகச் செயல்படவில்லை. பரஸ்பர நம்பிக்கை குறைந்ததாலும் மெத்தனம் அதிகமானதாலும் அரசுநிர்வாகமே மந்த கதியில்தான் இருந்தது.

தமிழர்களின் முக்கியக் கோரிக்கைகள் ஒன்றுகூட நிறை வேற்றப்படவில்லை. நாட்டின் சீர்திருத்தத்துக்கும் வளர்ச்சிக்குமாக மக்கள் அளித்த வாக்குகள் வீணடிக்கப்பட்டன. சட்டமியற்றும் அதிபர் பதவியின்அதிகாரம்குறைக்கப்படும், தலைமை அமைச்சர்பதவிமுக்கியத்துவம்பெறும், தமிழர்களின்காணிகள்திரும்பத்தரப்படும், தமிழர்கள் அவரவர் இடங்களில் மீள் குடியேற்றம் பெறுவார்கள், தேசிய நீரோட்டத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும்இணையநடவடிக்கைஎடுக்கப்படும், மாகாண அரசுகளுக்கு அதிக அதிகாரம் வழங்கப்படும் என்ற உறுதிமொழிகள் வெறும் வார்த்தைகளாகவே நின்றுவிட்டன.

### போர்க் குற்றங்கள் தொடர்பில் ஏராளமாக குற்றச்சாட்டுள்ளது

2009ஆம் ஆண்டில் நடந்த போரின்போது, ஏராளமான தமிழர்கள் உயிரிழக்கவும் காணாமல்போகவும் ராஜபக்சக்கள்தான் காரணம் என்பது தமிழர்களின் குற்றச்சாட்டு. அதுமட்டுமல்லாமல், அவர்களுக்குப்பின்வந்தவர்களும் போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் பாதுகாத்தனர் என்பதும் தமிழர்களின் ஆதங்கம். முஸ்லிம்களின் அச்சமெல்லாம் பெரும்பான்மையினவாதம் இனித் தலைதூக்கும் என்பதுதான். கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறன்று, இலங்கைதேவாலயங்களில்நடந்தகுண்டுவெடிப்புகளால் ஏற்பட்ட உயிரிழப்புகளை அடுத்து இலங்கை அரசின் மீது சாமானியர்களுக்கு நம்பிக்கை குறைந்துவிட்டது.

புதியஅரசு இவற்றைநிறைவேற்றும்என்று நம்புவதில்அர்த்தம் இல்லை. அரசதலைவர் பதவியில்ஒருவர்தொடர்ந்துஇரண்டுமுறைக்குமேல் இருக்கக்கூடாதுஎன்றசட்டம்கூட இனிதிருத்தப்படலாம். 'தேசப்பாதுகாப்புக்காக'என்றபெயரில் சிறுபான்மையினர் நலன்கள் அலட்சியப்படுத்தப்படலாம். இந்த அச்சங்களைப் போக்க வேண்டியது புதிய அதிபரின் கடமை. புதிய அதிபர் சீன ஆதரவாளர் என்பது உலகறிந்த ரகசியம். அதற்காக இந்திய அரசைப் பகைத்துக் கொள்ளும் விதத்தில் அவர் செயற்பட மாட்டார் என்று நம்புவோம்.

இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் இலங்கையின் புதிய அரசு மீண்டும் தவறுகள் இழைத்துவிடாதவண்ணம் பாதுகாக்கும் பொறுப்பு இந்தியாவுக்கு உண்டு. கோத்தபாய அரச தலைவரானால் இப்படித்தான் நடந்துகொள்வார் என்ற கணிப்பைப்பொய்யாக்கினால், அது இலங்கையின்ஐக்கியத்துக்கும்வளர்ச்சிக்கும்உகந்ததாக இருக்கும். நன்றி: இந்துதமிழ்திசை

**இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் இலங்கையின் புதிய அரசு மீண்டும் தவறுகள் இழைத்துவிடாதவண்ணம் பாதுகாக்கும் பொறுப்பு இந்தியாவுக்கு உண்டு. கோத்தபாய அரசதலைவரானால் இப்படித்தான் நடந்துகொள்வார் என்ற கணிப்பைப் பொய்யாக்கினால், அது இலங்கையின் ஐக்கியத்துக்கும் வளர்ச்சிக்கும் உகந்ததாக இருக்கும்.**


# தோற்றுப்போயுள்ளது சம்பந்தனின் சவால்!

■ ஜித்தன்



அரச தலைவர் தேர்தல் திருவிழா முடிந்து விட்டது. தமிழர்கள் ஏற்றுக் கொள்ள முடியாத, விரும்பாத முடிவு கிடைத்து விட்டது. ஆனாலும், அதை அடுத்த 5 ஆண்டுகளுக்கு ஏற்றாகத்தான் வேண்டும்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்சவின் பெயர் உறுதிப்படுத்தப்பட்டதும், அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தனைச் சந்தித்தார். ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி மாலை இந்தச் சந்திப்பு நடைபெற்றது. கோத்தபாயவின் முதலாவது தமிழ்த் தரப்புத் தலைவர் சந்திப்பாக இது அமைந்தது. தமிழர்களின் வாக்குகள் இன்றியே தேர்தலில் வெல்வேன் என்று கோத்தபாய இந்தச் சந்திப்பில் கூறியிருந்தார். தேர்தல் பரப்புரைகள் ஆரம்பமாக முதல், அதுவும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் யார்



என்று தெரிய முதலே, சிங்கள மக்களின் வாக்குகளால் மாத்திரம் வெற்றி பெறுவேன் என்று கோத்தபாய திடமாகக் கூறியிருந்தார். அவர் அதனை முழுமையாக நம்பினார்.

கோத்தபாயவின் இந்தச் செய்தி ஊடகங்களில் வெளி வந்ததும், கோத்தபாயவின் ஊடகப் பிரிவு ஒப்புக்கு சப்பாணியாக மறுத்தது. கோத்தபாயவுக்கு தமிழர்களின் வாக்குகளும் தேவை என்று கூறியது. ஆனாலும், இதன் பின்னரும் சில பரப்புரைக் கூட்டங்களில் கோத்தபாயவும், அவர் தரப்பினரும் தமக்குத் தமிழர்களின் வாக்குகள் தேவையில்லை என்பதைக் கூறியிருந்தனர். சிங்கள மக்களின் வாக்குகளாலேயே வெல்வோம் என்று கூறிவந்தனர்.

அவர்களைக் கூறியதைப் போன்று அதை உறுதிப்படுத்துவதற்காக, சிங்கள மக்களிடம் இனவாதத்தை விதைத்தனர். ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதலைக் காட்டி முஸ்லிம்களை முன்னிறுத்தி சிங்கள மக்களிடம் பயப்பீதியை உருவாக்கினர். அவர்கள் எதிர்பார்த்த பலன் கிடைத்தது.

அரச தலைவர் தேர்தலில் சிங்கள மக்களின் வாக்குகள் இரண்டு பிரதான வேட்பாளர்களுக்கும் பிளவுபடும். தமிழ் மக்களின் வாக்குகள் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும்.

இப்படி 2010ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலிலிருந்து சொல்லப்பட்டு வருகின்றது. 2010ஆம் ஆண்டு தேர்தலில் இதை நம்பி தமிழ் மக்கள் சரத் பொன்சேகாவுக்கு வாக்களித்தனர்.

மகிந்த ராஜபக்ச தமிழ் மக்களின் வாக்குகள் இன்றி சுமார் 18 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் பொன்சேகாவை வெற்றி கொண்டார். 2015ஆம் ஆண்டு தேர்தலில் மாத்திரம், சிங்கள மக்களின் வாக்குகள் சமனாகப் பிளவடைந்தது. தமிழ் மக்களின் வாக்குகள் வெற்றியாளரைத் தீர்மானித்தது.

அந்தத் தேர்தல் முடிந்த கையோடு, 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ஆம் திகதி தனது தோல்விக்கு ஈழத்து வாக்குகளே காரணம் என்ற மகிந்தவின் வாக்குமூலம் சிங்கள மக்களிடம், இலங்கையின் தலைவரை தீர்மானிப்பவர்களாக தமிழர்கள் இருக்கக்கூடாது என்ற எண்ணத்தை விதைத்தது. இது இப்போது விஸ்வரூபம் எடுத்துள்ளது. நடந்து முடிந்த அரச தலைவர் தேர்தலில், சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் கோத்தபாயவுக்கான வாக்குகள் சுளையாக கிடைத்தமைக்கு இதுவும் ஒரு காரணம்.

சிங்கள மக்களின் மனவோட்டத்தைப் புரிந்து கொள்ளாமல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், சாவகச்சேரியில் நடந்த ரவிராஜ் நினைவுப் பேருரையில், முடிந்தால் தமிழர்களின் வாக்குகளின்றி கோத்தபாய வென்று காட்டட்டும் என்று சவால் விடுத்திருந்தார். இந்தச் சவாலில் சம்பந்தன் இப்போது படுதோல்வியைச் சந்தித்திருக்கின்றார். தமிழர்களின் வாக்குகள் இல்லாமலே வென்று காட்டியிருக்கின்றார் கோத்தபாய. மகிந்தவுக்கு 2015ஆம் ஆண்டு கிடைத்த தமிழ் வாக்குகள் கூட கோத்தபாயவுக்கு கிடைக்கவில்லை. ஆனாலும் பெரு வெற்றியைப் பெற்றிருக்கின்றார்.

சம்பந்தன் சவாலில் தோற்றிருக்கலாம். ஆனால் ஒட்டுமொத்தமாக இனிவரும் 5 ஆண்டுகளும் தமிழர்களுக்கு இருண்ட யுகமாகாமல் பார்த்துக் கொள்ளவேண்டியதும் அவரின் பொறுப்புத்தான். ■

> முடிந்தால் தமிழர்களின் வாக்குகளின்றி கோத்தபாய வென்று காட்டட்டும் என்று சவால் விடுத்திருந்தார். இந்தச் சவாலில் சம்பந்தன் இப்போது படு தோல்வியைச் சந்தித்திருக்கின்றார். தமிழர்களின் வாக்குகள் இல்லாமலே வென்று காட்டியிருக்கின்றார் கோத்தபாய.





கார்த்திகை - 01-30

**வடக்கு மாகாண மரநடுகை மாதம்**

உலகில் உள்ள கானகங்களுக்கு நாம் இழைத்திடும் கொடும் செயல்கள் நாம் நமக்குள் ஒருவருக்கொருவர் இழைத்திடும் கொடும் செயல்களின் பிரதிபலிப்பே.

*- மகாத்மா காந்தி*
*(அமெரிக்க எழுத்தாளர்)*

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,நவ.20
ஆனைக்கோட்டைசுழாவடியில் அமைந்துள்ள அபயம்மருத்துவசேவை நிலையத்தில் இலவச மருத்துவ ஆலோசனையும், சிகிச்சைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. வெளிநாடுகளில் இருந்து வருகை தந்திருக்கும் மருத்துவ நிபுணர்களால் இலவச ஆலோசனையும், சிகிச்சைகளும்வழங்கப்பட்டு வருகின்றன.
நேற்று முன்தினம் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்ட மருத்துவ சேவை, நாளை மறுதினம் வரை பிற்பகல் 3.30 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணி வரை இடம்பெறும். (க)

# 7 ஆயிரம் பயிலுநர்களை பணிக்கு அனுமதிக்கலாம்

### மாவட்டச் செயலர்களுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,நவ.20
கிராம அலுவலர்களுக்கு உதவியாளர்களாகப் பணியாற்றும் வகையில் தேசிய ரீதியில் க.பொ.த உயர்தரத்துடன் பயிலுநர்களாக ஒப்பந்த அடிப்படையில்நியமிக்கப்பட்டவர்களைப், பணிசெய்ய அனுமதிக்கலாம்என்று தேர்தல் ஆணைக்குழு சகலமாவட்டச்செயலர்களுக்கும் நேற்றுக் கடிதம் அனுப்பியுள்ளது.

நேர்முகத் தேர்வுகளின் அடிப்படையில்கடந்தசெப்ரெம்பர்16ஆம்திகதி 7ஆயிரம்பேருக்குநியமனம்வழங்கப்பட்டது.
வழங்கப்பட்ட நியமனத்தின் அடிப்படையில் புதிதாக நியமனம் கிடைத்தவர்கள் தமக்கான நியமனத்தைக் கோரி மாவட்டச் செயலகங்களுக்குப் படையெடுத்தனர். எனினும் அரசதலைவர்தேர்தல்முடிவடைந்த பின்பே பணிகளை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர்பணிப்புரை விடுத்திருந்தார்.
இந்தநிலையில்தேர்தல்நிறைவுற்ற பின்பு நியமனம் பெற்றவர்கள் மாவட்டச்செயலகங்களுக்குச்சென்றிருந்த நிலையில் செயலகங்கள் கைவிரித்தன. இதனால் நியமனம் கிடைத்தோர்தேர்தல்ஆணைக்குழுவின்கவனத்துக்குமீண்டும்கொண்டு சென்றனர். இதனையடுத்து தேர்தல் ஆணைக்குழு தான் விதித்த தடையை நீக்கி, எழுத்தில் கடிதம் அனுப்பியபோதும், குறித்தவிடயம் தொடர்பில் அமைச்சின் செயலாளரின் ஒப்புதல் கிடைக்கவில்லை என்று மாவட்டச் செயலர்கள் தெரிவிப்பதாகப் பாதிக்கப்பட்டோர் தெரிவிக்கின்றனர். (க-105)

## கசிப்பு உற்பத்தி; ரூ.75,000 தண்டம்

சாவகச்சேரி,நவ.20
சட்ட விரோத கசிப்பு உற்பத்தியில்ஈடுபட்ட சாவகச்சேரிகெருடாவில்வாசிக்கு 75 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டவழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

## ஆறுமுக நாவலர் நினைவுதின நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.20
நல்லை நகர் ஆறுமுக நாவலர் நினைவு தின நிகழ்வு இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம், நல்லூர் சிறி துர்க்கா மணி மண்டபத்தில் முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
தெல்லிப்பழைசிறிதுர்க்காதேவி ஆலயத்தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் "நாவலர் பெருமானின் கல்விப் பாரம்பரியம்" என்றதலைப்பில்சிறப்புரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியற்றுறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா நிகழ்த்தவுள்ளார்.
தொடர்ந்து மகேஸ்வரப் பூசையும் இடம்பெறும் என்றுஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.(ஐ)

## சிறப்புத்தேவையுடையோருக்கு வாய்ப்புக்களைக் கொடுங்கள்

### சமூக சேவை அலுவலகர் செ.ஸ்ரீநிவாசன் கோரிக்கை

வவுனியா, நவ.20
சிறப்புத்தேவையுடையோருக்கு சிறந்த வசதிகளைஏற்படுத்தினால்அவர்கள்உலகைமாற்றும் திறனாளிகளாக மாற்றம் பெறுவார்கள் என்று வவுனியா மாவட்ட சமூக சேவை அலுவலகர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்தார்.
பன்னாட்டு சிறப்புத் தேவையுடையோர் தினம் இவ் வருடம் "அனைவருக்கும் அணுகு வசதி கொண்ட எதிர்காலம்" என்ற தொனிப் பொருளில் கடைப்பிடிக்கப்படப்படவுள்ளது.
இதனை முன்னிட்டு வவுனியா மாவட்ட பாடசாலை மாணவர், ஆசிரியரிடையே விழிப்புணர்வு உரைகளை மாவட்ட சமூக சேவை அலுவலகம் நடத்தி வருகிறது.
நேற்று முன்தினம் திங்கட்கிழமை நெளுக்குளம்கலைமகள்வித்தியாலயத்தில்பாடசாலை அதிபர் க. சிவநாதன் தலைமையில் விழிப்புணர்வுநிகழ்வு நடைபெற்றது.
இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர்மேலும்தெரிவித்ததாவது;
"இன்றையமாணவர்களேநாளைபெரியஅதிகாரிகளாக தலைவர்களாக ஆசிரியர்களாக வரவுள்ளனர்.
ஆகவே சிறப்புத் தேவையுடையோர்களின் மாண்பு பற்றி நாம் விளங்கி அவர்களுக்கான வசதிகளை வாய்ப்புக்களை வழங்கினால் எதிர்காலத்தில் இவர்களே உலகையே மாற்றும் திறனாளிகளாக விளங்குவார்கள்.
உலகில் ஜஸ்டீன், தோமஸ் அல்வா எடிசன், கெலன் கெல்லர், பீத்தோபன், நவீன விஞ்ஞானிஸ்டீபன்ஹாகின்ஸ், நடிகர் சில்வஸ்டார் ஸ்ரோலன் போன்றோர் சிறப்புத் தேவையுடையோர்களாகப் பிறந்து பிற்காலத்தில் மாண்பு மிகு திறனாளிகளாக விளங்கினர்.
எனவேசிறப்புத்தேவையுடையபிள்ளைகளுக்கான உரிமைகளை இந்தச் சமூகம் வழங்கி ஊக்கப்படுத்தவேண்டும்"-என்றார். (ஐ-222)

## கிணற்றில் வீழ்ந்த பெண் இராணுவத்தால் மீட்பு

கிளிநொச்சி, நவ. 20
பாதுகாப்பற்ற கிணற்றுக்குள் வீழ்ந்த குடும்பப் பெண்ணொருவரை இராணுவத்தினர் மீட்டு காப்பாற்றிய சம்பவம் கிளிநொச்சி விசுவமடுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.
விசுவமடுதொட்டியடிப்பிரதேசத்தில் பாதுகாப்பற்ற ஆழமான கிணற்றுக்குள்51வயதானகுடும்பப் பெண்ணொருவர் விழுந்து விட்டார் என்று பிரதேசவாசிகள், அருகிலுள்ள இராணுவ முகாமிற்கு அறிவித்துள்ளனர். இதையடுத்து, அங்கு சென்ற இராணுவத்தினர்அப்பெண்ணை கிணற்றில் இருந்து மீட்டுள்ளனர்.
தொட்டியடியில் அமைந்துள்ள 6ஆவது சிங்க ரெஜிமெண்ட் சிப்பாய்களே குறித்த பெண்ணைக் காப்பாற்றினர்.
இந்நிலையில்மீட்கப்பட்ட பெண்உடனடியாகமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுஅவருக்குச்சிகிச்சையளிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் இடம்பெற்று சில நாள்கள் ஆனபோதும் நேற்று முன்தினம்சமூகவலைத்தளங்களின் மூலம் பிரபல்யமடைந்தது. (ஐ)

## ஒருநாள் ஆய்வரங்கு

யாழ்ப்பாணம்,நவ.20
ஆங்கில மொழிக்கற்பித்தல் துறையினர் நடத்தும் ஒருநாள் ஆய்வுக் கருத்தரங்கு இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணப்பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் பீட மண்டபத்தில் நடைபெறும்.
கலைப்பீடாதிபதி கலாநிதி க.சுதாகர் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் முதன்மை விருந்தினராக தகுதி வாய்ந்தஅதிகாரிபேராசிரியர்க.கந்தசாமிகலந்துகொள்வார்.
ஆய்வரங்கு சிறப்புரையைத் திறந்த பல்கலைக்கழக ஆங்கில பட்டமேற்படிப்பு நிறுவகப் பணிப்பாளர் பேராசிரியர் இறம்புக்பெல ஆற்றுவார்.
அதேவேளை பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, முன்னாள்பட்டமேற்படிப்புநிறுவகப்பணிப்பாளர்பேராசிரியர் றைகைனா ரஹீம் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன. தொடர்ந்து குழுநிலை விவாதங்களும், ஆங்கில மொழிக் கற்பித்தல் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்தலும் இடம்பெறும். (க)

## ஆங்கிலப் பாட வாய்மொழி செயற்பாட்டு முகாம்

சாவகச்சேரி,நவ.20
யாழ்ப்பாணம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான ஆங்கில் பாட வாய்மொழி செயற்பாட்டு முகாம் நேற்றுக் காலை பாடசாலையில் இடம்பெற்றது.
தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையிலான மாணவர்களின் ஆங்கிலஅறிவு தொடர்பாகஅவர்களின் ஆளுமையைமேம்படுத்தும்வகையிலானசெயற்பாடுகள் இடம்பெற்றன.
அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி சிவத்திரை சிவநாதன், சிறப்பு விருந்தினர்களாக வலய ஆரம்பக்கல்விஉதவிக்கல்விப்பணிப்பாளர்சோதிருக்குமரன், ஆரம்பக்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சி.சிவதாசன், கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியை ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-9)

## வீதி விபத்தில் குடும்பத் தலைவர் காயம்

சாவகச்சேரி,நவ.20
பயணிகளை இறக்குவதற்குதரிப்பிடத்தில்நிறுத்திய பேருந்துடன் பின் தொடர்ந்து வந்த உந்துருளி மோதியதில் அதில் பயணித்த குடும்பத் தலைவர் காயமடைந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி மருத்துவமனைக்கு முன்பாக ஏ9முதன்மை வீதியில் இடம்பெற்றது.
பளை கரந்தாயைச் சேர்ந்த 40 வயதுடைய குடும்பத்தலைவரேகாயமடைந்தவராவார்.(ஐ-9)

## தொலைத்த நகையை பொறுப்பேற்கவும்

யாழ்ப்பாணம்,நவ.20
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வளாகத்தினுள் தங்க நகையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.
உரியவர்கள் தகுந்த ஆதாரத்தைச் சமர்ப்பித்து நகையை அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு மருத்துவமனைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)




## எழுத்துப் பிழைகளுடன் பாடசாலையின் பதாகை

முல்லைத்தீவு.நவ.20
முல்லைத்தீவு முள்ளிவளை கேப்பாபுலவு அரசினர் தமிழ்கலவன் பாடச்ாலையில் படையினரால் பொருத்தப்பட்ட பெயர்ப்பலகை எழுத்துப் பிழைகளுடன் உள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
பெயர்ப் பலகையில் முள்ளியவளை பிரதேசத்தின் பெயரில் எழுத்துப்பிழை காணப்படுகின்றது. இதனை பாடசாலைச் சமூகம் உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பிரதேச கல்விச் சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.
பெயர்ப்பலகையை அமைப்பதற்கு தெற்கைச்சேர்ந்த ப்ரிட்ஸ்ரோ என்ற நிறுவனம் நிதி உதவி செய்துள்ளதுடன்அந்தநிறுவனத்தின் சின்னமும் பொறிக்கப்பட்டுள்ளது. பலகையை அமைப்பதற்கு தொழில்நுட்ப உதவி வழங்கியுள்ளதாக 59 ஆவது படைப்பிரிவின் 2 ஆவது பிரிவு படையினர் எனப் பெயர் பொறிக்கப்பட்டு படையினரின் சின்னத்துடனும் பாடசாலையின் பெயர்ப்பலகை நடப்பட்டுள்ளது.
இதனை அகற்றி மாற்று நடவடிக்கையை உடனடியாக பாடசாலை சமூகம் மேற்கொள்ளவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-ரி3)

# வடக்கில் தனியார் பஸ் சேவைகளை நவீன மயப்படுத்தும் திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.20
வடக்கு மாகாணத்துக்குள் தனியார் பேருந்துச் சேவைகளை மென்மேலும் திறம்பட நடத்துவதற்காக உலகத் தர வலை அமைப்பின் ஊடாக, நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
யாழ்ப்பாணத்தில் இருந்து, ஏனைய மாவட்டங்களுக்குப் போக்குவரத்தை மேற்கொள்ளும் வரையறுக்கப்பட்ட (உத்தரவாதம்) யாழ்.தூர சேவைப் பேருந்து உரிமையாளர் சங்கம், தனது பேருந்து உரிமையாளர்களுக்கு அதி நவீன முறையில் தயாரிக்கப்பட்ட கட்டணச் சிட்டை இயந்திரங்களை வழங்குவதுடன், ஜி.பி.எஸ் கருவிகளைப் பேருந்துக்களில் பொருத்தி வலையமைப்பின் ஊடாகக் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், பயணிகளின் பாதுகாப்பு, அவர்களின் இலகுவான பயணம், சேவைகளின் மேல் உள்ள நம்பகத்தன்மை என்பவற்றை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளது.
அந்த நடவடிக்கைகளில் முதல் முயற்சியாக யாழ்ப்பாணத்தில் இருந்து வடமாகாணத்துக்குள் தூர சேவைகளை மேற்கொள்ளும் அனைத்து வழித்தடப் பேருந்து உரிமையாளர்களுக்கும், குறிப்பிட்ட கட்டணச் சிட்டை நவீன இயந்திரங்களை, வடமாகாண ஆளுநர் சங்கத்தின் அனுசரணையுடன் வைபவரீதியாக கடந்த வாரம் வழங்கி வைத்தார்.
இதனூடாக பேருந்தின் வேகம், அதனுடைய தரிப்பு நேர நடவடிக்கைகள், போக்குவரத்து விதிகளை மீறும் செயல்கள், சேவை நேரங்கள் என்பன பேருந்தின் உரிமையாளராலும், சங்கத்தினாலும் கண்காணிக்க முடியும்.
அத்துடன் பயணிகள் தாங்கள் பயணிக்கும் பேருந்தின் இலக்கம், அதன் பெயர், பேருந்தில் ஏறிய இடம், இறங்க வேண்டிய இடம், அதற்கான நிர்ணயிக்கப்பட்ட கட்டணம், மிகுதிப்பணம் என்பவற்றை இயந்திரத்தால் பெறப்படும் கட்டணச் சிட்டை மூலம் தெரிந்து கொள்ளலாம்.
உரிமையாளரால் தனது பேருந்தில் பயணிக்கும் ஒவ்வொரு பயணியும் கட்டணமாகச் செலுத்தும் தொகையை தான் வீட்டில் இருந்து கொண்டே கைபேசியில் அவதானிக்க முடியும். இதனால் உரிமையாளர்களும் பயணிகளும் நன்மை அடைவர். இந்த நடவடிக்கை முதற்கட்டமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து வடமாகாணத்துக்குள் உள்ள ஏனைய மாவட்டங்களுக்கு தூர சேவைகளை மேற்கொள்ளும் பேருந்துக்களுக்கு வழங்கப்படுகின்றது.
அடுத்தடுத்த கட்டங்களாக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற மாவட்டச் சங்கங்களுக்கும் நடைமுறைப்படுத்தப்படும். வெளிநாடுகளில் நடைமுறையில் உள்ளது போல் "பயண அட்டைகள்" அதாவது பயணிகளுக்கும், மாணவர்களுக்கும், அலுவலர்களுக்கும் பருவகாலப் பயண அட்டைகள் என்பனவும் வழங்கத் திட்டமிட்டுள்ளது. - என்றுள்ளது. (க)




மரநடுகை மாதத்தை முன்னிட்டு கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் 350 மரங்கள் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பங்களிப்புடன் நடுகை செய்யப்பட்டன. (க-159)



யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை கூழாவடியில் அமைந்துள்ள அபயம் மருத்துவ சேவை நிலையத்தில் நேற்றுமுன்தினம் மருத்துவ ஆலோசனையும், சிகிச்சையும் வழங்கப்பட்டன. சிங்கப்பூரிலிருந்து வருகை தந்த நரம்பியல் மருத்துவ நிபுணர் உமாபதி சிகிச்சைகளை வழங்கினார். (க)

## கடுகதித் தொடருந்து மோதி இரண்டு மாடுகள் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,நவ.20
யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறை நோக்கிப் பயணித்த கடுகதித் தொடருந்து மோதி இரண்டு பசு மாடுகள் பரிதாபகரமாக உயிரிழந்தன.
இந்த விபத்து யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள தொடருந்துக் கடவையில் நேற்று இடம் பெற்றது.
குறித்த பகுதியில் பல தடவை இடம்பெற்ற விபத்துக்களில் மனித உயிர்களே பறிபோயுள்ளன. எனினும் கால்நடை வளர்ப்போர் அதனைக் கட்டி வளர்க்காது கட்டாக்காலிகளாக அலைய விட்டதால், கால்நடைகள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளன.
யாழ்.மாநகர சபை எல்லைப் பகுதிக்குள் கால்நடைகளை நடமாட விடுவதற்குத் தடைவிதிப்பதனா தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதும், இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (க-105)




## கட்டுப்பாட்டை இழந்த உந்துருளி: மூவர் காயம்

சாவகச்சேரி,நவ.20
வேகக் கட்டுப்பாட்டை இழந்த உந்துருளி பாதசாரிகள் கடவையில் சென்ற பெண்ணை மோதியதுடன், சற்றுத் தூரத்தில் முதியவர் ஒருவர் பயணித்த ஈருருளியையும் மோதித் தள்ளியது. அதில் மூவர் காயமடைந்தனர். இந்த விபத்து மீசாலை, புத்தூர் வீதியில் மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்துக்கு முன்பாக நேற்று இடம்பெற்றது.
விபத்தில் பாதசாரிகள் கடவையில் பயணித்த மீசாலை வடக்கைச் சேர்ந்த 52 வயதுக் குடும்பப் பெண்ணும், ஈருருளியில் பயணித்த மீசாலை வடக்கைச் சேர்ந்த 70 வயது முதியவரும், உந்துருளில் பயணித்த மந்துவில் மேற்கைச் சேர்ந்த 19 வயது இளைஞனும் காயமடைந்தனர். காயமடைந்த மூவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (க-9)

## "திருக்கேதீச்சரம் சிவபூமி" நூல் வெளியீட்டு நிகழ்வு

கொடிகாமம்,நவ.20
மறவன்புலவு சச்சிதானந்தனின் "திருக்கேதீச்சரம் சிவபூமி" நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை ஆவுஸ்திரேலியா சிட்னி முருகன் கோவில் மண்டபத்தில் மாலை 5 மணி நடைபெறவுள்ளது.
இந்த நூலில் கேதீச்சர சிவாலய தல புராணத்தின் சுருக்கம், மிகப் பழைய காலம் தொடங்கி 20 ஆம் நூற்றாண்டு வரை இக் கோவிலை வழிபட்டு பேறு பெற்றவர்கள் பற்றிய தகவல்கள், இப்பகுதியை ஆண்ட மன்னர்களைப்பற்றிய ஆதார பூர்வமான தகவல்கள், இக் கோவில் பலமுறை பிற சமயத்தவரால் தாக்கி அழிக்கப்பட்ட வரலாறுகள் ஆகியன உள்ளடங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஜ-159)

# காணாமலாக்கப்பட்டவர்களின் பிரச்சினையை பன்னாடுகள் கோத்தபாயவுடன் பேசவேண்டும்

## *அவர் அரசதலைவரானதால் அச்சத்துடனுள்ளோம் என்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் உறவுகள் கோரிக்கை*

முல்லைத்தீவு, நவ. 20

**கோ**த்தபாய ராஜபக்ச அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமையால் நாங்கள் அச்சத்துடன் இருக்கின்றோம். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தை பன்னாட்டுச் சமூகம் புதிய அரச தலைவருடனும், தம்முடனும் பேசி உண்மையான தீர்வைப் பெற்றுத்தர வேண்டும். தமது பாதுகாப்பையும் பன்னாட்டுச் சமூகம் உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறு காணாமலாக்கப்பட்டவர்களின் முல்லைத்தீவு மாவட்ட உறவுகளின் சங்க இணைப்பாளர் மரியசுரேஸ் ஈஸ்வரி தெரிவித்துள்ளார்.




முல்லைத்தீவு காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் தொடர்ச்சியாக தமது போராட்டத்தை முன்னெடுத்துவருகின்றனர். நேற்றுமுன்தினம் 986ஆவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில், அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய் அரசதலைவராக கோத்தபாய ராஜபக்ச தெரிவாகியிருக்கின்றார்.

அவர் போர்க்காலத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுடன் தொடர்புடையவர் என்பதால் அவரிடம் நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அவர் அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதால், அவரிடம்தான் இந்த உறவுகளின் முழுத் தகவல்களும் இருக்கின்றன.

அவர் எங்கள் உறவுகளைக் கண்டறிந்து தரமுடியும். அத்தகைய உணர்வுடன்தான் இருக்கின்றோம்.

அதே வேளையில் அச்சமும் எமக்கு இருக்கின்றது. அவரால் கடத்தப்படுவோமா, கொல்லப்படுவோமா போன்ற அச்ச நிலையும் இருக்கின்றது. எனினும் நாம் அச்சமடைய முடியாது. ஏனெனில் நாம் அவருக்கெதிராக ஆயுதம் ஏதும் ஏந்திப் போராடவில்லை.

எமது உறவுகளின் உயிர்களை அவர்களிடம் கொடுத்து, அந்த உயிர்களையே நாம் அவர்களிடம் தேடுகின்றோம்.

எந்த அரசதலைவர் வந்தாலும் நாம் இதைத்தான் கேட்டுக் கொண்டேயிருப்போம்.

கையளிக்கப்பட்ட உறவுகள் மற்றும் வெள்ளைவான் மூலம் கடத்தப்பட்ட உறவுகள் எங்கே? அவர்களுக்கு என்ன நடந்தது?. இருக்கின்றவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். இல்லாதவர்களுக்கான தக்க பதில்களை அவர்கள் கூறவேண்டும் என்பதை எதிர்பார்த்திருக்கின்றோம்.

இதில் எமக்குப் பாதுகாப்புப் பிரச்சினை இருக்கின்றது. பாதுகாப்புப் பிரச்சினைக்கு பன்னாட்டுச் சமூகமே முற்றுமுழுதான முடிவை எடுக்கவேண்டும்.

பாதுகாப்பு என்பது பெரும் பிரச்சினைதான். அரசதலைவர் தற்போது எவ்வாறு இருக்கின்றார் என்பதற்கு அப்பால், அவர் முன்பு எவ்வாறு இருந்தார் என்பதை நினைக்கும்போது, மிகவும் பயங்கரமாக இருக்கின்றது.

எமது போராட்டத்தை நாம் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வோம். அதில் எவ்வித மாற்றமும் இருக்காது.

எமக்கு ஓ.எம்.பி வேண்டாம், எந்த அரசு வந்தாலும் எங்களுடைய உறவுகளுக்கான பதில் எமக்கு கிடைக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பிலேயே இருக்கின்றோம்.

கோத்தபாய ராஜபக்ச தனது தேர்தல் அறிக்கையில், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இறந்துவிட்டார்கள் என்றுகூறி சான்றிதழ் தரப்படும் என்றுகூறியிருந்தார். அவர் அவ்வாறு கூறிவிட்டார் என்பதற்காக அதை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது.

முன்னாள் அரசதலைவரிடம் கோரிக்கை விடுத்தது போன்று தற்போதைய அரசதலைவரைச் சந்தித்தும் நாம் பேசவுள்ளோம், கோரிக்கைகளை முன்வைப்போம்.

அதற்காக அவர் இறப்புச் சான்றிதழ் தருவார் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம். நாம் வட்டுவாகலில் இருந்து ஓமந்தை வரையிலும் எத்தனையோ உறவுகளைக் கையளித்திருக்கின்றோம். வெள்ளைவானில் எத்தனையோபேர் கடத்தப்பட்டிருக்கின்றனர். அப்படியான உறவுகளுக்கு நீதி பெற்றுத்தரப்பட வேண்டும்.

அவரின் தேர்தல் அறிக்கையைப் பற்றி எமக்கு எவ்வித ஆட்சேபனையுமில்லை. எங்களுடைய உறவினர்கள் இருக்கின்றனர் என்பதை உறுதிப்படுத்தி இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றோம்.

கோத்தபாய ராஜபக்ச அரசதலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள சூழ்நிலையில், பன்னாட்டுச் சமூகம் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தை அரசிடம் கேட்க வேண்டும்.

முன்னாள் அரசதலைவர், தன்னுடைய காலத்தில் தனக்கு இது பற்றித் தெரியாது எனக்கூறியிருந்தார்.

அதற்கு முன்பிருந்த ஆட்சியாளர் சார்ந்தவரே, தற்போது மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கின்றார். எனவே பன்னாட்டுச் சமூகம் இது தொடர்பில் அவர்களிடம் கேட்டு எங்களுக்கான உண்மையான நீதியைப் பெற்றுத் தரவேண்டும். எமது பாதுகாப்பையும் பேண வேண்டிய கடமை பன்னாட்டுச் சமூகத்துக்கு இருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில் அவர்கள் எந்த மறுப்பும் தெரிவிக்க முடியாது. எனவே அரசுடனும் எம்மோடும் பேசவேண்டும் என்பதை எதிர்பார்த்திருக்கின்றோம்.

கோத்தபாய ராஜபக்ச அரசதலைவராகத் தெரிவுசெய்யப்பட்டு இதுவரையில் அச்சுறுத்தல் செயற்பாடுகள் எவையும் விடுக்கப்படவில்லை. எனினும் அவருடைய பேரைக் கேட்டுப் பயப்படுகின்றோம். முன்னைய காலங்களில் அவருடைய செற்பாடுகளை எண்ணிப் பயப்படுகின்றோம். வேறு எதற்கும் நாம் பயப்படவில்லை. - என்றார். (த-246)

# பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கும் யர்ழ்ப்பாணத்தில் டெங்குத் தொற்று

சாவகச்சேரி,நவ.20

யாழ்ப்பாண மாவட்டத்தில் பரவலாகக் காணப்படும் டெங்குக் காய்ச்சல் காரமாணமாக பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்.

கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் கடமையாற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர் ஒருவரே இவ்வாறு டெங்குத் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளார். டெங்கால் பாதிக்கப்பட்ட அவர் பருத்தித்துறை மந்திகை ஆதாரமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அண்மைக் காலமாக டெங்கால் பீடிக்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவ மனைகளில் சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது என்று சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது. விழிப்புனர்வுச் செயற்பாடுகளிலும் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டு மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வீடுகளுக்குச் செல்பவர்களிடம் பொது சுகாதர பரிசோதகர்கள் நேரடியாகச் சென்று விசாரணை மற்றும் பரிசோதனைகளை நடத்தி பணியகயத்தில் அறிக்கை தாக்கல் செய்து வருகின்றனர். அவ்வாறு வீடுகளுக்குச் சென்று பரிசோதனைகள் மேற்கொண்டபோதே குறித்த பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கும் டெங்குத் தாக்கம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-9)

# வாகன இலக்கத் தகடுகளை விரைவாக பெற்றுக்கொள்க

*யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அறிவிப்பு*

வாகன இலக்கத்தகடுகளைப் பெறாதவர்கள் அவற்றை விரைந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது. இது தொடர்பில் அந்தத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் அறிவித்துள்ளதாவது; யாழ்ப்பாணம் மோட்டார் போக்குவரத்து திணைக்கள தலைமை அலுவலகத்திலிருந்து கடந்த 2018ஆம் ஆண்டு ஜூலை தொடக்கம் டிசெம்பர் வரையான காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத் தகடுகளில் வாகன உரிமையாளர்களால் இதுவரை பெறப்படாதுள்ள இலக்கத்தகடுகள் 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கொழும்பு தலைமை அலுவலகத்துக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளன.

எனவே மேற்படி வாகன இலக்கத்தகடுகளை வாகன உரிமையாளர்கள் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாண மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளலாம் - என்றார். (ஐ)



## வாழ்வாதார உதவி

வவுனியா,நவ.20

வவுனியாபூவரசங்குளம் பகுதியில் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றுக்குக்கு வாழ்வாதார உதவியாக பசுமாடு அண்மையில் வழங்கப்பட்டது.

வீ 3 பவுண்டேஷன் அமைப்பின் ஊடாக ஆறுமுகம் சிவஞானசுந்தரம், திருச்செல்வம் சிவஞானசுந்தரம், அருட்செல்வம் சிவஞானசுந்தரம்,வாலாம்பிகா நாகமணி ஆகியோர் இணைந்து இந்த உதவியை வழங்கியுள்ளனர். (ஐ-222)

## மன்னார் மாவட்டத்தில் நாளை நடமாடும் சேவை

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மன்னார் உப காரியாலயம் நாளை மற்றும் நாளை மறுதினம் நடமாடும் சேவையை மன்னார் மாவட்டத்தில் நடத்தவுள்ளது.

முதலாவது நடமாடும் சேவை நாளை காலை 9.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை முசலி பிரதேச செயலர் பிரிவில் உள்ள முள்ளிக்குளம் மீள்குடியேற்றக் கிராமத்தில் மலங்காடு பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இரண்டாவது நடமாடும் சேவை நாளை மறுதினம் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள இலுப்பக்கடவைக் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலகங்கள், பதிவாளர் காரியாலயம், காணி ஆணையாளர் காரியாலயம், பொலிஸ் திணைக்களம், வலயக் கல்விப் பணிமனை, சிறுவர் நன்நடத்தைத் திணைக்களம், மகளிர் அலுவலகம், வனபரிபால திணைக்களம், , ஆட்பதிவுத் திணைக்களம், கிராம சேவையாளர் அலுவலகங்கள், சமூகசேவை அலுவலகங்கள் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியன கலந்து கொண்டு மக்களுக்கான சேவைகளை வழங்கவுள்ளன. (க-110)

பிரபாகரனுக்கா வாக்களித்தோம்?

# சிங்களவருக்கே வாக்களித்தோம் ஆனாலும் தாக்கப்படுகின்றோம்

## கனேபல தோட்ட மக்கள்

கொழும்பு, நவ. 20

நாங்கள் சிங்களவர் ஒருவருக்குத்தான் இந்தத் தேர்தலில் வாக்களித்தோம். பிரபாகரனுக்கு வாக்களிக்கவில்லை. ஆனாலும் அவர்கள் எங்களைத் தாக்குகின்றார்கள். இவ்வாறு கனேபல தோட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச வெற்றி பெற்று பதவியேற்றுள்ள நிலையில் நேற்றுமுன்தினம் இரவு, கேகாலை மாவட்டத்தின் யட்டியன்தோட்டை கனேபொல தோட்டத்தில் வசிக்கும் இந்திய வம்சாவளி தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

யாருக்கு வாக்களித்தீர்கள் என்று கேட்டு இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக அந்த மக்கள் தெரிவித்தனர். நாங்கள் இந்தத் தேர்தலில் பிரபாகரனுக்கா வாக்களித்தோம். இல்லையே. சிங்களவர் ஒருவருக்குத்தானே வாக்களித்தோம். ஆனாலும் சிங்களவர்கள் எங்களைத் தாக்குகின்றார்கள். தேர்தலில் வாக்களிக்க எங்களைப் பேருந்துகளில் ஏற்றி இறக்கிய ஒருவரும் நாங்கள் தாக்கப்படும்போது வரவில்லை என்று அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் தரப்பு தகவல் வெளியிடும்போது, மதுபோதையில் வந்த குழுவினர் அட்டகாசத்தில் ஈடுபட்டதாகக் குறிப்பிட்டனர். (ஒ-5)

# கட்சி மோதலில் இருவர் காயம்

கொழும்பு,நவ.20

இரண்டு கட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் இருவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் திருகோணமலை கந்தளாய், பேராறுப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

சிறிலங்கா பொது மக்கள் முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களுக்கு இடையே இந்த மோதல் இடம்பெற்றுள்ளது.

இதனால் வீதிப் போக்குவரத்துத் தடைப்பட்டு, பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மோதலில் காயமடைந்த இருவர் கந்தளாய்தள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பானமேலதிக விசாரணை களை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (க)

# சிறுபான்மையினம் மீதான தாக்குதலை விசாரிக்கவும்

## மகிந்த ராஜபக்ச உத்தரவு

கொழும்பு, நவ. 20



யட்டியாந்தோட்டை, கனேபொல தோட்டத்தில் சிறுபான்மையின மக்கள் மீது நேற்று முன்தினம் நடந்த தாக்குதல் தொடர்பில் உடனடி விசாரணை நடத்துமாறுசப்ரகமுவமாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச பணித்துள்ளார். நேற்றுக்காலை அந்தப் பகுதி நாடாளுமன்ற உறுப்பினர் கனக ஹேரத் மற்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உட்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளுடன் தொலைபேசி ஊடாகப் பேச்சு நடத்திய மகிந்த இந்த பணிப்பை விடுத்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில்வட்டிக்குப் பணம் கொடுக்கும் சிங்களவர் ஒருவருடன் தமிழர்ஒருவர்மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான பிர ச்சினையே பின்னர் கைகலப்பாக மாறி அரசியல் ரீதியாக சாயம்பூசப்பட்டுள்ளதாகப் பாதுகாப்புத் தரப்பினர்கூறுகின்றனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (து)

# பெரமுன தாக்கினால் உடனே அழையுங்கள்

கொழும்பு,நவ.20

அரச தலைவர் தேர்தலின் பின்னர் வன்முறைக்கு முகம் கொடுக்கும் தமது ஆதரவாளர்கள் கட்சி தலைமையகத்துக்கு தொலைபேசி இலக்கங்கள் ஊடாக அறிவிக்குமாறு ஜக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

ஐ.தே.க கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர், ஐ.தே.க ஆதரவாளர்கள் தாக்கப்படுகின்றனர். 2015 அரச தலைவர் தேர்தலுக்குப் பின்னர் நாங்கள் உருவாக்கிய அமைதியான மற்றும் நியாயமான சூழலைத் தொடர்ந்து நீடிக்கச்செய்வதற்குப் பொறுப்பானவர்கள் தவறிவிட்டார்கள் என்பது துன்பகரமானது.

ஐ.தே.கவை ஆதரித்த, சஜித்துக்கு வாக்களித்த மக்கள் சிரமத்துக்கு ஆளாகாமல், மிரட்டல் மற்றும் வன்முறைக்கு ஆளாகாமல் பாதுகாப்பது கட்சியின் கடமை.

அவ்வாறான நெருக்கடியைச் சந்திப்பவர்கள் கட்சி தலைமையகமான சிறிகோ த்தாவைத் தொடர்வு கொள்ள முடியும்.

அபாயத்தை எதிர்கொள்பவர்கள் 011 2889378 மற்றும் 0779215299 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் வழியாக தொடர்பு கொள்ள முடியும்-என்றுள்ளது. (க)

# 33 வேட்பாளர்களின் கட்டுப்பணம் இழப்பு

கொழும்பு,நவ.20

அரச தலைவர் தேர்தலில் போட்டியிட்ட 35 வேட்பாளர்களில், அநுரகுமார திசாநாயக்க உள்ளிட்ட 33 பேரும்கட்டுப்பணத்தை இழந்துள்ளனர்என்று தேர்தல்கள் ஆணைக்குழுதெரிவித்துள்ளது.

1981ஆம் ஆண்டின் அரச தலைவர் தேர்தல் சட்டத்தின் படி, செல்லுபடியான வாக்குகளில்12.5வீதமான வாக்குகளைப் பெறும் வேட்பாளர்களுக்கே கட்டுப்பணம் மீளச் செலுத்தப்படும்.

இந்த முறை அரச தலைவர் தேர்தலில் வெற்றி பெற்ற கோத்தாபய ராஜபக்சவும், அவரை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோல்வியடைந்தசஜித்பிரேமதாசவும் மாத்திரமே கட்டுப்பணத்தை மீளப் பெறுவதற்குத் தகுதியான வாக்குகளைப் பெற்றுள்ளனர்.

ஏனைய அனைவரும், 12.5 வீதத்து க்குட்பட்டவாக்குகளையே பெற்றுள்ளதால், அவர்களுக்குக் கட்டுப்பணம் மீள்ச் செலுத்தப்படாதுஎன்றும்திணைக்களம் தெரிவித்துள்ளது. (க)

# சந்திரிகாவுக்கு எதிராக சு.க. நடவடிக்கை

கொழும்பு, நவ. 20

அரச தலைவர் தேர்தலில் கட்சியின் தீர்மானத்தை மீறி வேறு வேட்பாளர்களை ஆதரித்த சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமையை நீக்குவதென சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதிரடியாகமுடிவெடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு கட்சியின் அரசியல்குழு கூடி இந்த முடிவை எடுத்தது.

முன்னாள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

கட்சிதலைமை மீண்டும் மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்கப்பட்டது. முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க, நாடாளுமன்ற உறுப்பினர்கள் விஜித் விஜிதமுனி சொய்சா, ஏ.எச்.எம்.பௌசி, எஸ்.பி.திசாநாயக்க, டிலான் பெரேரா ஆகியோரே ஒழுங்கு நடவடிக்கைக்குள்ளாகின்றனர். அத்துடன், கட்சி முடிவை மீறிய மாகாண சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டிருந்த ரோஹண லக்ஷ் மன் பியதாச குறிப்பிட்டார். (ஒ-5)

# தேர்தலுக்குப்பின்னரும் கூட்டங்களுக்குத் தடை

கொழும்பு,நவ.20

அரச தலைவர் தேர்தல் முடிவடைந்த போதும் பேரணிகள் மற்றும் கூட்டங்களை நடத்துவதற்குத் தடைசெய்யப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்குப் பின்னரான காலகட்டத்தில் நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் ஈடுபட்டுள்ளனனர்.

எனவே தேர்தல் சட்டங்களை மீறுபவர்கள் கைது செய்யப்பட்டு, தேர்தலுக்குப் பின்னரான காலகட்டத்தில் வழக்குத்தொடர முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# பிரபாகரன் வீரச்சாவு உண்மையே உரிமைகோராதது கோழைத்தனம்

## கோத்தாவின் ஆட்சியில் கருணா கருத்து

வவுனியா,நவ.20

தேசியத் தலைவர் இறந்தது உண்மையான விடயம். அது வீரச்சாவு. அந்த வீரச்சாவைக் கூட உரிமை கொள்ளாமல் இருப்பது எமது கோழைத்தனம். தமிழ்த் தலைவர்களின் கோழைத்தனமாகவே அதை நான் பார்க்கிறேன்.

இவ்வாறு கூறியுள்ளார், புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து சென்றவரும், புலிகள் தோல்வியடையக் காரணமாக இருந்தார் என்று விமர்சிக்கப்படுபவரும், கருணா அம்மான் என்று அழைக்கப்படுபவருமான விநாயகமூர்த்தி முரளிதரன்.

வவுனியாவில் தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் வாக்குகள் கோத்தபாயவுக்குக் குறைந்துள்ளன. எமக்குக் கிடைத்த பொன்னான வாய்ப்புகளை இழந்திருக்கிறோம்என்றுதான்நினைக்கிறேன்.

**ராஜபக்ச பழிவாங்கவில்லை**

எமது மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அவரிடம் கூறியிருக்கிறோம். இந்த அரசு அச்சமற்ற நிலையை உருவாக்கும். கடந்த முறையும் சரத் பொன்சேகாவுக்கு தமிழ் மக்கள் வாக்களித்திருந்தாலும் வெற்றிபெற்ற மகிந்த ராஜபக்ச பழிவாங்கும் நடவடிக்கைகளில்ஈடுபடவில்லை. எனவே வடக்குக் கிழக்கு தமிழர்களுக்கு இனி பொற்காலமாக அமையும்.

**கூட்டமைப்பின் போக்கு மாறிவிட்டது**

எமது தேசியத் தலைவரால் உருவாக்கப்பட்ட கட்சிதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அதற்காக அவருடன் இருந்து நானும் பாடுபட்டேன். எமது அரசியல் பிரச்சினைகளை நாடாளுமன்றில் முன்வைப்பதற்காகவே அது உருவாக்கப்பட்டது. ஆனால் இன்று கூட்டமைப்பின் போக்கு மாறிவிட்டது. அவர்கள் தங்களின் நலனுக்காக மக்களைத் திசை திருப்பியிருக்கிறார்கள். நேரத்துக்கு நேரம் மக்களை ஏமாற்றும் சக்தியாக மாறி வருகிறார்கள். அதனால் அவர்களுக்கு எதிராகப் பல கட்சிகள் உருவாகியுள்ளன. இந்தத் தேர்தலிலே மாற்றம் வரவேண்டும் என்று முன்னாள் முதல்வர் விக்கினேஸ்வரன்கூட தெளிவாகக் கூறியிருந்தார். வடக்குக் கிழக்கு இணைப்பு என்பது பெரும் பிரச்சினை. அது சட்டரீதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அது இணைய வேண்டும் என்பது எங்களுக்குத் தேவையான விடயம். அதைக் கருணா நிராகரிக்கவில்லை. அதனை எதிர்ப்பவர்கள் முஸ்லிம் தலைவர்கள். சிங்கள மக்களும் அதை அச்சத்துடனேயே பார்க்கிறார்கள். எனவே நடைமுறைச் சிக்கல்கள் இதில் இருக்கின்றன. கூட்டாட்சி வேண்டும் என்பதற்காகவே நான் புலிகளிடமிருந்து வெளியேறினேன். அவ்வாறான சந்தர்ப்பம் வரும்போது அந்த இணைப்புக்காகக் குரல் கொடுப்போம்.

**அரசியல் கைதிகள் விடயம் ஒரு சிறு பிரச்சினை**

அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும். அது ஒரு சிறு பிரச்சினை. இந்த 134 பேரும் சாதாரண போராளிகள். இதுஒரு பெரிய பிரச்சினையாக உலகளவில் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதனை நாம் கோத்தபாயவிடம் தெரிவித்துள்ளோம். அவர்களை நிச்சயம் விடுவிப்போம் என்று எமக்குத் தெரிவித்துள்ளனர். அதில் உள்ள சட்டச் சிக்கல்கள் தீர்க்கப்பட்டு அவர்கள் விடுவிக்கப்படுவார்கள். காணாமல் ஆக்கப்பட்டோர் இருக்கின்றார்களா என்பதை அரசு தலைவர் உத்தரவாதம் கொடுக்க வேண்டும். அதனையும் கோத்தபாயவிடம் எதிர்பார்க்கின்றோம்.

**காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினையை பெரிதுபடுத்தாதீர்கள்**

காணாமல் ஆக்கப்பட்டிருந்தால் குறிப்பிட்ட வருடத்துக்குப் பின்னர் அவர்களுக்கு இறப்பு அத்தாட்சிப் பத்திரம் கொடுத்திருக்கவேண்டும். நான் அமைச்சராக இருந்தபோது அனைத்துச் சிறைச்சாலைகளையும் அவதானித்துள்ளேன். அதன்படி இரகசிய முகாம் அல்லது இரகசிய கைதிகள் இருக்கின்றனர் என்று எனக்குத் தெரியவில்லை.

அந்த விடயத்தில் தெளிவான முடிவை எமது மக்களுக்கு நாம் வழங்கவேண்டும். இதையும் பெரியபிரச்சினையாக்கிக் கொண்டிருப்பதை என்னால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. எனது சகோதரனும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார். அவர் இறந்துவிட்டார் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அவருடைய உடலை நாம் எடுக்கவில்லை. அதற்காக அவர் இருக்கிறார் என்பதை நாம் நம்பவில்லை. போரில் அனைத்துப் பக்கமும் பிழை நடந்துள்ளது. கொலை செய்யாதவர் எவரும் இல்லை. இதைப் போலவே விடுதலைப் புலிகள். நாமும் போரில் நின்றிருந்தோம். நாம் அடைந்த வெற்றியினூடாக கொலைகள் இடம் பெற்றுள்ளன. ஒரு தாக்குதலில் இரண்டாயிரம் ராணுவம் கொல்லப்பட்டால் அதுவும் கொலை தான்.

**மன்னிப்புக் கோரவேண்டும்**

இது போர் நடந்த பூமி. அதற்கு அவர்கள் வருந்துகிறோம் என்று மன்னிப்புக் கோரவேண்டும். இதற்கு அரச தலைவரே பொறுப்புக் கூறவேண்டும். அதைவிட்டு போரில் ஒருவரும் கொல்லப்படவில்லை என்று கூறுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

**சரணடைந்தமை கேள்விக்குறியே**

இறுதிப் போரில் வெள்ளைக்கொடியுடன் சரணடைந்தார்களா இல்லையா என்பது கேள்விக்குறிதான். அப்படி நடந்து அரசு அதை மீறிச் செயற்பட்டிருந்தால் அது கண்டிக்கப்படவேண்டும்.

**காலங்கடந்த நடவடிக்கை**

எனினும் அந்த விடயம் எந்த அடிப்படையில் கூறப்படுகிறது என்பதை ஏற்கமுடியாது. போர் இறுதிக்கட்டத்தை அடையும் போது இதனை நிறுத்துவதற்கான சந்தர்ப்பம் பல இருந்தன. அது பயன்படுத்தப் படவில்லை. இறுதிக்கட்டத்தை நெருங்கும் போது சரணடைதல் என்பதைக் காலம் கடந்த நடவடிக்கையாகத்தான் பார்க்கிறேன். பொதுமக்களை மனித கேடயமாகப் பயன்படுத்தாமல் அவர்களை விடுவித்துவிட்டு எமது போராளிகள் மடிந்திருப்பார்களாக இருந்தால், உலகம் வரவேற்றிருக்கும்.

**மாவீரர் தினத்தை கொண்டாட அனுமதி கிடைக்கும்**

இதேவேளை மாவீரர் தினத்தைக் கொண்டாடுவதற்கான அனுமதி நிச்சயம் கிடைக்கும். தேசியத் தலைவருக்காக எப்போதாவது விளக்கேற்றினோமா? அல்லது வீரச்சாவை அடைந்தார் என்று அறிவித்திருக்கிறோமா?- என்றார்.

(த-110)

## ஹேமசிறி பூஜித்துக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு; நவ. 20

கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்ணான்டோ ஆகியோருக்கு டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றில் நீதிவான் பிரியந்த லியனகே முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன் போதே விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறன்று மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்காததன் ஊடாக கொலைக் குற்றம் புரிந்தனர் என்று அவர்கள் மீது குற்றம் சுமத்தி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களின் வங்கிக் கணக்குகள் தொடர்பில் விசாரணை செய்யப்பட்டன.

ஹேமசிறி பெர்ணான்டோவின் பெயரில் எவ்வித தனியார் அல்லது அரச வங்கிகளின் கணக்குகள் இல்லை என்று தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் பெயரில் 5 வங்கி கணக்குகள் உள்ளன. அவை தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றோம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த)

# சஜித்துக்கு வாக்களித்த மக்களுக்கு மிக்க நன்றி

கொழும்பு,நவ.20

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேண்டுகோளுக்கு இணங்க ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக, சஜித் பிரேமதாசவுக்கு வாக்களித்த அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நாட்டில் மீண்டும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காகவும், சிறந்த அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்காகவும் சஜித் பிரேமதாசவை அரச தலைவராக்கும் நோக்கில் எமது மக்கள் வாக்களித்தனர். துரதிஷ்டவசமாக அவரால் வெற்றி பெற முடியவில்லை. இருந்தாலும், எமது மக்கள் அவரை வெற்றி பெற வைக்க வேண்டும் என்ற நோக்கில் கூடுதல் பங்களிப்பை வழங்கினர். அவருக்கு வாக்களித்தது மாத்திரமன்றி தேர்தல் காலத்தில் களத்தில் இறங்கியும் செயற்பட்டனர்.

இனிவரும் காலங்களிலும் மக்கள் தொடர்ந்தும் எம்முடன் இவ்வாறு இணைந்திருக்க வேண்டும். அதேவேளை, புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஜனநாயகத்தை மதித்து நீதியான ஆட்சியை அவர் நடத்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன்- என்றுள்ளது. (க)

## கோத்தாவிடமே பாதுகாப்பு அமைச்சு

கொழும்பு, நவ. 20
புதிய அரச தலைவராகப் பொறுப்பேற்றுள்ள கோத்தபாய ராஜபக்ச, பாதுகாப்பு அமைச்சு தம்வசமே இருக்கும் என்று அறிவித்துள்ளார். அநுராதபுர ருவன்வெலிசயவில் பதவியேற்றுக் கொண்ட பின்னர், உரையாற்றிய போதே அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.
நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவராக, முப்படைத் தளபதிகளின் அதிபதியாக, பாதுகாப்பு அமைச்சராக தானே பதவி வகிப்பேன் என்றும் கூறினார்.
19ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவாக புதிய அரச தலைவர் அமைச்சுப் பதவிகளை வகிக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## கருணா அம்மான் மீது சி.ஐ.டி. விசாரணை

கொழும்பு, நவ. 20
தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் பிரதித் தலைவரும் இலங்கை அரசின் முன்னாள் பிரதி அமைச்சருமான கருணா அம்மான் என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் முஸ்லிம்களை இலக்கு வைத்து வெளியிட்டதாகக் கூறப்படும் கருத்துக்கள் தொடர்பில் சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
பொலிஸ் தலைமையகத்துக்கு தேர்தல்கள் ஆணைக் குழுவின் ஆணையாளர்களில் ஒருவரான பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் அனுப்பியுள்ள முறைப்பாட்டுக்கு அமைய இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
அதன்படி குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் பொறுப்பு பொலிஸ் தலைமையகத்தால் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (கு)

# தமிழரிடையே பகைமையையும் துவேசத்தையும் தூண்டிவிடுகின்றனர் தமிழகத் தலைவர்கள்

## நாமல் எம்.பி. சீற்றம்



கொழும்பு, நவ. 20
எமது மக்களிடையே பகைமையையும் துவேசத்தையும் தூண்டிவிடும் மூன்றாந்தர அரசியலைத் தவிர வேறு என்ன ஆக்கபூர்வமான விடயத்தை தமிழகத் தலைவர்கள் செய்திருக்கின்றார்கள் என்று கேள்வி எழுப்பியுள்ளார், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச.

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
தமிழகத்தின் சில தமிழ் அரசியல் தலைவர்கள் இலங்கைத் தமிழ் மக்களைப் பற்றி ஒருபோதும் ஆழமாகச் சிந்தித்ததும் இல்லை. அவர்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யும் வகையில் எந்த ஒரு ஆக்கபூர்வமான செயற்பாடுகளைச் செய்ததுமில்லை. மாறாக தங்களுடைய சுயநல மற்றும் சந்தர்ப்பவாத அரசியல் தேவைகளுக்காக எமது நாட்டு மக்களைப் பகடைக்காயாகப் பயன்படுத்துவது தான் மிகுந்த வேதனைதரும் உண்மை.
எமது கட்சியின் சார்பில் போட்டியிட்ட கோத்தபாய ராஜபக்ச இலங்கையின் அரச தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட போது பல நாடுகளின் தலைவர்கள் குறிப்பாக இந்திய தலைமை அமைச்சர் உள்ளிட்ட பாரதத்தின் பல அரசியல் தலைவர்களும் தமது வாழ்த்துக்களை வழங்கியிருந்தனர்.
தமிழகத்தில் தமது சுயநல சந்தர்ப்பவாத அரசியலைத் தக்கவைப்பதற்காக எமது நாட்டில் தமிழ் மக்களைப்பற்றி அக்கறையுள்ளவர்களாகக் காட்டி முதலைக் கண்ணீர் வடிக்கும் மதிமுகவின் பொதுச்செயலர் வைகோ, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன். பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸ், தமிழர் தேசிய முன்னணித் தலைவர் பழ.நெடுமாறன் ஆகியோரின் அறிக்கைகளைக் கண்ணுற்றேன். அப்பட்டமான சந்தர்ப்பவாத அரசியலைத் தவிர அவற்றில் வேறேதும் இல்லை. எமது மக்களைப் பகடைக்காய்களாக்கும். எம்மக்களிடையே பகைமையும் துவேசத்தையும் தூண்டிவிடும் மூன்றாந்தர அரசியலைத் தவிர வேறு என்ன ஆக்கபூர்வமான விடயத்தைச் செய்திருக்கிறீர்கள் என்ற கேள்வி என்னுள் எழுவதை என்னால் தடுக்க முடியவில்லை.
2009 இல் போர் நிறைவடைந்த காலத்தில் மறைந்த தமிழகத்தின் முதலமைச்சர் மரியாதைக்குரிய கலைஞர் கருணாநிதியின் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலான நாடாளுமன்றக் குழு இலங்கைக்குப் பயணத்தை மேற்கொண்டு, வடக்கு கிழக்குப் பகுதிகளைப் பார்வையிட்டதுடன் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுடன் சிநேக பூர்வமான சந்திப்பிலும் ஈடுபட்டிருந்தமை உலகம் அறிந்த விடயம். அதில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல் திருமாவளவன் கலந்து கொண்டதுடன், எம்முடன் சிநேகபூர்வ கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன், எமது நிலைப்பாடுகளையும் தெளிவுற அறிந்து கொண்டிருந்தார். அத்தகையவர் இன்று இவ்வாறு சந்தர்ப்பவாத அறிக்கை விடுவது எமக்கு அதிர்ச்சியாக உள்ளது.
எமது அரச தலைவர் உட்பட எமது எதிர்கால அரசானது அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் வெளிப்படைத் தன்மையுடனும், நல்லெண்ணத்துடனும் செயற்படும்.
தமிழகத்தின் அரசியல் தலைவர்களுக்கு நான் அன்புடன் கூறிக் கொள்ள விரும்புவது யாதெனில், நீங்கள் அனைவரும் அறிக்கையில் நிகழ்கால அரச தலைவர் மற்றும் அரசை விமர்சிப்பதை விட்டு விட்டு நடைமுறை அரசியலில் இலங்கைத் தமிழ் மக்களைப் பற்றிச் சிந்திப்பது சாலச் சிறந்தது.
ஊடகங்களில் சுயநல, சந்தர்ப்பவாத அறிக்கைகளை மட்டுமே விட்டுப்பரபரப்பை ஏற்படுத்துவதை விடுத்து எமது நாட்டுத் தமிழ் மக்களை உளப்பூர்வமாக நேசிக்கும் தமிழகத் தலைவர்களாக நீங்கள் இருந்தால், எமது மக்களது எதிர்காலவாழ்வு சுபீட்சமாக அமைய முடிந்த வரை பொறுப்புடன் செயற்படுவது காலத்தின் கட்டாயம் எனத் தமிழகத்தின் அரசியல் தலைவர்களை அன்புடன் மரியாதையுடன் கேட்டுக் கொள்கிறேன், என்றுள்ளது. (ஒ.5)

## புதிய அரச தலைவருக்கு ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நா. சபை வாழ்த்து

புதிய அரசதலைவருக்கு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளன.
கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகம் தனது கீச்சகத்தில் (டுவிட்டர்) வாழ்த்துத் தெரிவித்துப் பதிவிட்டுள்ளது.
அரசதலைவர் தேர்தலில் ஜனநாயக முறையில் மக்கள் வாக்களித்தனர் என்றும் அதை ஏற்றுக்கொள்கிறோம் என்றும் சமாதானம், நல்லிணக்கம், மனித உரிமைகள், நிலையானஅபிவிருத்திஆகிய விடையங்களில் தொடர்ந்தும் இணைந்து கடமையாற்ற எதிர்பார்க்கின்றோம் என்றும் வாழ்த்துச் செய்தியில்தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியமும் புதிய அரசதலைவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.
பல்வேறு துறைகள் தொடர்பில் இணைந்து செயற்பட எதிர்பார்ப்பதாகவும் சங்கம் தெரிவித்துள்ளது.
இதேவேளை, அமெரிக்க இராஜாங்க செயலர் மைக் பொம்பியோவும் புதிய அரச தலைவருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.
அரசதலைவருடன் இணைந்து செயற்பட அமெரிக்கா ஆர்வமாகவுள்ளது. பாதுகாப்பு படைகளின் மீள் கட்டமைப்பு, மனித உரிமை செயற்பாடுகளுக்கு மதிப்பளித்தல் வன்முறைகள் ஏற்படாதவாறு அரசதலைவர் அர்ப்பணிப்புடன் செயற்படுவார் என எதிர்ப்பார்க்கின்றேன் என்று தெரிவித்துள்ளார். சீனா, ஈரான், வியட்நாம் உள்ளிட்ட நாடுகளும் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளன.
இதேவேளை, வன்முறைகளற்ற சுதந்திர தேர்தல் செயல்முறை நன்கு நிர்வகிக்கப்பட்டதாக ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மரிசா மத்தியாஸ் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆரம்ப கட்ட தேர்தல் கண்காணிப்பு அறிக்கையில் கூறியுள்ளார். (கு)

## சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிரான வழக்கு ஜனவரிக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 20
வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்புக் குற்றப்பத்திரம் நேற்றுமுன்தினம் சமர்ப்பிக்கப்பட்டது. விசாரணையின் பின்னர் வழக்கு ஜனவரி மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.
வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரனை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியமை செல்லாது என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் கட்டளையிட்ட நிலையிலும் குறித்த அமைச்சுப் பதவியை வழங்காதமை உள்ளிட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கு முன்னாள் முதல்வர் உள்ளிட்ட மூவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு நடைபெற்று வருகின்றது. நேற்று முன்தினம் குற்றச் சாட்டுப் பத்திரம் மன்றில் சமரப்பிக்கப்படவிருந்த நிலையில் முன்னாள் முதல்வர் தரப்பில் இந்தமுறையும் நீதிமன்ற அவமதிப்புத் தொடர்பில் விசாரிக்க இந்த மன்றுக்கு நியாய ஆதிக்கம் இல்லை எனவும் 2 தொடக்கம் 5 வரையான குற்றச் சாட்டுக்களைத் தாக்கல் செய்யும் உரிமை சட்டமா அதிபருக்கு மட்டுமே உண்டு என்றும் பூர்வாங்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.
குறித்த ஆட்சேபனை தொடர்பில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட நிலையில் இந்த வழக்கை விசாரிக்கும் நியாய ஆதிக்கம் உண்டு என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளதோடு வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என்று ஆட்சேபனையை மன்று நிராகரித்தது.
இதன் அடிப்படையில் அமைச்சரவையிலிருந்து நீக்கியமை செல்லாது என்னும் இடைக்காலத் தடை இருந்த போதும் டெனீஸ்வரனை அமைச்சராகசெயல்படவிடாதுதடுத்துநீதிமன்றை அவமதித்தமை, இவ்வாறு இடைக்காலகட்டளைஇட்டமைசட்டமுரணானது என்று சபையில் உரையாற்றியமை மற்றும் இது தொடர்பில் பகிரங்க அறிக்கை வெளியிட்டமை உள்ளிட்ட 5 குற்றச் சாட்டுக்கள் அடங்கிய குற்றப்பத்திரம் மன்றுரைக்கப்பட்டன.
முதலாம் எதிரியான முன்னாள் முதல்வரும் இரண்டாம் எதிரியான முன்னாள் அமைச்சர் சிவநேசன் ஆகியோர் சுற்றவாளி நேற்றுமுன்தினம் மற்றுரைத்தனர். இதேநேரம் 3ஆம் எதிரியான அனந்தி சசிதரன் தனக்கு வைரஸ் தொற்றுக் காரணமாக மன்றுக்குச் சமுகமளிக்க முடியவில்லை என்று சட்டத்தரணியூடாக மருத்துவச் சான்றிதழின் பிரதியைச் சமர்ப்பித்திருந்தார். மருத்துவச் சான்றிதழின் மூலப் பிரதியை மறு தவணையில் ஒப்படைக்க வேண்டும் என்று மன்று கட்டளையிட்டதோடு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (கு-105)

# மனித உரிமைகள், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தவேண்டும் கோத்தபாய

## அமெரிக்கா ஆணித்தரமாக வலியுறுத்து

கொழும்பு, நவ. 20

அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச மனித உரிமைகளையும், பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்த வேண்டும் என்று அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியேயா வலியுறுத்தியுள்ளார்.

வோசிங்டனில் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமது ஜனநாயகத் தேர்தலை எதிர்கொண்ட மக்களுக்கு அமெரிக்கா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. புதிய அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்சவுடன் இணைந்து பணியாற்ற அமெரிக்கா தயாராக இருக்கிறது.

பாதுகாப்புத்துறை மறுசீரமைப்பு, பொறுப்புக்கூறல், மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் மற்றும் வன்முறை மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்தல் போன்ற இலங்கையின் கடப்பாடுகளை உறுதிப்படுத்த அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவுக்கு அழைப்பு விடுக்கிறோம்.

ஆசியாவின் பழமையான ஜனநாயகத்துக்கு ஏற்ற, ஒரு சுதந்திரமான, நியாயமான, வெளிப்படையான அரச தலைவர் தேர்தலின் மூலம் இலங்கை தனது ஜனநாயகத்தின் வலிமையை தொடர்ந்து வெளிப்படுத்தியுள்ளது.

அமைதியான தேர்தலை ஊக்குவித்ததற்காக தேர்தல் ஆணைக் குழு, சிவில் சமூகம் மற்றும் வேட்பாளர்களை நாங்கள் பாராட்டுகிறோம். இலங்கை ஒரு மதிப்புமிக்க பங்குதாரராக உள்ளது.

அனைத்து நாடுகளும் வளரக் கூடிய ஒரு சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோபசிபிக் பிராந்தியத்தை வளர்ப்பது, நல்லாட்சியை ஆழப்படுத்துவது மற்றும் நீதி, நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட இருதரப்பு மற்றும் பிராந்திய பிரச்சினைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்த இலங்கை அரசு மற்றும் மக்களுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறோம், என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

# அரசை ஒப்படைக்க ஐ.தே.க. தயார்

## பெப். 15 இற்கு முன்னர் தேர்தலுக்கு எதிர்ப்பு

கொழும்பு, நவ. 20

நாடாளுமன்றத்தை உடனடியாக கலைத்து தேர்தலை நடத்துவதற்கு, ஆதரவு வழங்க ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழு இணக்கம் தெரிவிக்கவில்லை என்றும், ஆனாலும் கோத்தபாய ராஜபக்சவிடம் எப்போதும் அரசை ஒப்படைக்கத் தயாராக இருப்பதாகவும், சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

'நாடாளுமன்றத்தை உடனடியாக கலைத்து தேர்தலை நடத்துவதற்கு, ஆதரவு அளிக்க ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழு இணக்கம் தெரிவிக்கவில்லை. எனினும், பொதுத் தேர்தலை பெப்ரவரி 15 அல்லது அதற்குப் பின்னர் நடத்துவதற்கு உடன்பட்டால், ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றக் குழு அது குறித்து பரிசீலிக்கும். தேர்தலுக்கான நாள் குறித்து அடுத்த சில நாள்களில் கலந்துரையாடல்கள் நடத்தப்படும்' என்றார் லக்ஸ்மன் கிரியெல்ல. (ஒ.5)

# "சொன்னோமே, கேட்டீங்களா" என்ற பாணியில் எவரும் பேசவேமுடியாது

## அமைச்சர் மனோ கருத்து

கொழும்பு, நவ. 20

"நாங்கள் சொன்னோமே, கேட்டீங்களா" என்றபாணியில் எவரும் பேச முடியாது என்று அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அவருடைய முகப்புத்தகத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசியல் கட்சிகள் சொல்லியோ சொல்லாமலோ தமிழ், முஸ்லிம் மக்கள் ஒரு தீர்மானத்துக்கு வந்து, ஒரு முனைப்பில் ஒரு செய்தியை சொல்லி வாக்களித்தார்கள். சிங்கள மக்களும் வேறு முனைப்பில் வாக்களித்தனர். எனவே நாங்கள் சொன்னோமே, கேட்டீங்களா? என்ற பாணியில் எவரும் பேச முடியாது.

சிங்கள பௌத்த மக்களின் வாக்களிப்புப் பக்கத்தில் இருந்த ஒருசில தமிழ், முஸ்லிம் கட்சிகள் அல்லது நபர்களால், இந்த வாக்களிப்பின்மூலம் உலகத்துக்கு, இந்த நாட்டின் புதிய ஆட்சியாளர்களுக்கு ஒரு செய்தி சொல்லப்பட்டுள்ளது. அதைப் புதிய அரசதலைவர் புரிந்துகொள்ள முயற்சிக்கிறார் என்பது, அந்தப் பக்கத்தில் இருக்கும் தமிழ், முஸ்லிம் கட்சிகளைத் தாண்டி எமக்குத் தெரிகிறது. நமது செய்தியை அவர்கள் புரிந்துகொள்வதைப் போன்று, சிங்கள மக்களின் செய்தியை நாமும் புரிந்துக்கொள்ள முயற்சிக்கவேண்டும்.

இந்தத் தேர்தல் முரண்பாட்டு மாற்றத்தை பயன்படுத்தி வெளிநாட்டுக்கு புலம் பெயர விரும்பும் சிறுகுழுக்கள் எப்போதும் போல் இருப்பார்கள். ஏற்கனவே புலம் பெயர்ந்து, வழக்காடி இப்போது மீண்டும் இலங்கைக்குத் திரும்பி வராமல் இருக்க இதைப் பயன்படுத்த விரும்புவோரும் இருப்பார்கள்.

இவர்கள் எப்போதும் இலங்கையைத் தாய்நாடாகக் கருதியவர்கள் அல்ல. ஆகவே அவர்கள் அப்படியே இருக்கட்டும். அவர்களைச் சார்ந்த அரசியல்வாதிகளும் வெளிநாடுகளில் தஞ்சமடையட்டும்.

இனி அந்த இருண்ட யுகம் மீண்டும் வரும் என நான் நம்பவில்லை. நமது அரசின் மீது எவ்வளவோ குறைபாடுகள் இருந்தாலும், இந்தநாட்டில் ஜனநாயக இடைவெளியை நாம் ஏற்படுத்தி விட்டோம். இனி இன்றைய உலக ஒழுங்கில், அது பின்னோக்கி நகர முடியாது- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# புதிய செயலர்கள் நியமனம்

கொழும்பு,நவ.20

அரச தலைவரின் புதிய செயலாளராக பி.பீ ஜயசுந்தர நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை திறைசேரியின் செயலாளராக முன்னாள் மத்திய வங்கியின் பிரதி ஆணையாளர் எஸ்.ஆர் ஆட்டிகல நியமிக்கப்பட்டுள்ளார்.

அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவினால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# சிறுபான்மையினர் மீதான தாக்குதலுக்குக் கண்டனம்

கொழும்பு, நவ. 20

அரசதலைவர் தேர்தல் நிறைவடைந்த பின்னர் நாட்டில் ஆங்காங்கே இனவாதிகள் சிலர் சிறுபான்மைச் சமூகத்தினர் மீது தாக்குதல் நடத்துவதற்கு பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தேர்தலில் வெற்றி தோல்வி சகஜமானது. வெற்றியின் போதையில் அவர்களின் எல்லையைக் கடந்து செயற்படுவது என்றுமே ஏற்றுக் கொள்ள முடியாதது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச வெற்றி பெற்றதையடுத்து நாடு முழுவதும் பல வெற்றிக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன. சிறுபான்மையின மக்களை வதைத்து, யாருக்கு வாக்களித்தீர்கள்? என்று கேட்டும் சிறுபான்மை என்ற ரீதியில் தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களின் மூலமும் சிறுபான்மையின மக்களுக்கு ஏற்படும் அநீதியைப் பார்த்துக்கொண்டு வாய்மூடி நிற்க முடியாது. எமது பொறுமைக்கும் எல்லையுண்டு. மற்ற இனத்தைப் பழிவாங்குவது காட்டுமிராண்டிதனமான செயல்.

இனவாதத் தாக்குதல்கள் இடம்பெற்ற பிரதேச பொலிஸ் நிலைய உயர் அதிகாரிகளுக்கும் இது தொடர்பில் எச்சரித்துள்ளேன். என்று அவருடைய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# மக்கள் ஆணையை அரசு மதிக்கும் என நம்புகிறேன்

## ஹெகலிய எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ. 20

தற்போதைய அரசு மக்கள் ஆணையை மதித்து தார்மீக முடிவை எடுக்கும் என்று நம்புகின்றேன் என்று பொதுமக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த சில தேர்தல்களில் ஐ.தே.கவை மக்கள் நிராகரித்தனர். கோத்தபாய ராஜபக்ச வெற்றியீட்டியதும், நாட்டின் அரசியல் கலாசாரத்தில் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டுள்ளது. கோத்தபாயவின் வெற்றியுடன் கொழும்பு பங்குச் சந்தையில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இது பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமானது - என்றார் (த)

# பாற்சோறு பரிமாறினார் கேணல் ரட்ணபிரிய பந்து



கிளிநொச்சி,நவ.20

அரச தலைவராக கோத்தபாய ராஜபக்ச கடமையேற்றதை அடுத்து, கேணல் ரட்ணபிரிய பந்து தலைமையில் கிளிநொச்சியில் மக்களுக்கு நேற்று பாற்சோறு பரிமாறப்பட்டது.

கிளிநொச்சி டிப்பர் சந்தியில் சிறப்பாக அமைக்கப்பட்ட பந்தலில் பாற்சோறு பரிமாறப்பட்டது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பொறுப்பு வாய்ந்த கட்டளை அதிகாரியாக செயற்பட்ட ரட்ணபிரிய பந்து, கோத்தபாயவுக்கு ஆதரவு தெரிவித்து, தேர்தல் மேடைகளில் பேசியிருந்தார்.

இந்த நிலையில் தேர்தலில் கோத்தபாய வெற்றி பெற்று அரச தலைவராகப் பொறுப்பேற்றுள்ள நிலையில், இந்த வெற்றிக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. (க-6)

உதயன்
@UthayanPrint
புதன் பொய்கை
நவம்பர் 20, 2019

**இன்று நாவலரது குருபூசை தினம்.** இதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.




■ இராமநாதபுரத்தூர் நிஷாந்தன்

# ஆறுமுகநாவலர்

## ஆளுமை பல கொண்ட உயர் பண்பாளர்

> உரை நடை எழுதுவதில் நாவலரைப் போல் சிறந்தவர் அகிலத்தில் யாருமில்லை எனும் அளவிற்கு நாவலரின் உரை நடை சிறப்புற்றிருந்தது. இக் காரணம் கொண்டே வசனநடை கைவந்த வள்ளலார் என்று அழைக்கப்பட்டார் நாவலர்.

தமிழையும், சைவத்தையும் தன் இரு கண்களாகக் கொண்டு அவற்றின் பெரு வளர்ச்சிக்காக அரும் பணியாற்றிய உயர் பண்பாளர் ஆறுமுகநாவலர் என்றால் மிகையாகாது. ஈழத்தில் தமிழ் மற்றும் சைவத்தின் விடிவெள்ளியாகத் தோன்றி அவற்றில் மிகப்பெரும் புரட்சியை தனி ஒருவராக முன்னெடுத்தவர் இந்த நாவலர் பெருமான். இந்தக் காரணம் கொண்டே ஐந்தாம் குரவர் என்று சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டு வருகின்றார் நாவலர்.

### நாவலரின் பிறப்பும் இளமைக் காலமும்

நாவலர் யாழ்ப்பாணம் நல்லூர் எனும் ஊரிலே 1822ஆம் ஆண்டு மார்கழி 18ஆம் திகதி கந்தப்பிள்ளை மற்றும் சிவகாமி ஆகியோருக்கு புத்திரனாகப் பிறந்தவர். நாவலரின் இயற்பெயர் ஆறுமுகம் பிள்ளை என்பதாகும். தன் ஐந்தாவது வயதில் வித்தியாரம்பம் பெற்ற நாவலர் அதன்பின் சுப்பிரமணிய உபாத்தியாயர், சேனாதிராச முதலியார், சரவணமுத்து உபாத்தியாயர் முதலியோரிடத்தில் மரபு ரீதியூன குருகுலக் கல்வியினைக் கற்றுக் கொண்டார். தன் பன்னிரண்டாவது வயதிலே தமிழ் மற்றும் சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்று அவற்றில் புலமை பெற்றார். மேலும் யாழ்ப்பாணத்தின் மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையில் (தற்போதைய யாழ் இந்துக் கல்லூரி) தன் கல்வியைத் தொடர்ந்து தனது 19ஆவது வயதில் அப்பாடசாலையிலேயே ஆசிரியராகவும் பணியாற்றினார். தமிழையும் சைவத்தையும் தன் இரு கண்களாகக் கொண்ட நாவலர் பெருமான் அவற்றின் வளர்ச்சிக்காகப் பணியாற்ற வேண்டி பிரம்மச்சரிய நெறியைத் தன் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்தார்.



### நாவலரின் சமயப் பணிகள்

நாவலர் சைவசமயத்தின் வளர்ச்சிக்காக பல்வேறுபட்ட செயற்பாடுகளை முன்னெடுத்தவர். அவ்வகையில் சமயப் பிரசங்கங்களை சைவசமய மக்களின் நன்மை கருதி மேற்கொண்டார் நாவலர். நாவலரின் பிரசங்க ஆற்றலை வியந்து திருவாவடுதுறை ஆதினம் நாவலர் எனும் சிறப்புப் பட்டத்தை வழங்கியதும் இங்கு நினைவு கூரத்தக்கதாகும். மேலும் உரை நடை எழுதுவதில் நாவலரைப் போல் சிறந்தவர் அகிலத்தில் யாருமில்லை எனும் அளவிற்கு நாவலரின் உரை நடை சிறப்புற்றிருந்தது. இந்தக் காரணம் கொண்டே வசனநடை கைவந்த வள்ளலார் என்று அழைக்கப்பட்டார் நாவலர். உரைநடையோடு கூடிய பதிப்புத் துறையிலும் நாவலர் தேர்ச்சி பெற்றிருந்தார். இதற்காக அச்சுக் கூடம் ஒன்றினை அமைத்து பல சைவ சமய நூல்களை அச்சிட்டும், பதிப்புச் செய்தும் வெளியிட்டுள்ளார்;. இதுதவிர சைவப் பாடசாலைகளை நிறுவி சைவப் பாரம்பரியத்தினை முன்னெடுத்தார். மேலும் சைவ நிறுவனங்களையும் அமைத்து கல்விப் பணியினை விரும்புடன் முன்னெடுத்தவர் நாவலர். தவிர ஈழத்தின் இந்து ஆலயங்களின் புனருத்தாரணம் நாவலருடைய வழிகாட்டலில் சிறப்புற நடைபெற்றிருந்தது. இவற்றோடு சைவ ஆலயங்களில் புராண படனத்தினை அறிமுகம் செய்து அந்த மரபை பெரு வளர்ச்சியுறச் செய்தவர். சைவ மக்கள் கடைப் பிடிக்கின்ற விரதத்திற்கு வரைவிலக்கணம் கூறியவரும்; நாவலரே. தவிர சைவப் பிள்ளைகளுக்கு மாலை நேரங்களில் தன் வீட்டில் பாடங்களையும் விருப்புடன் சொல்லிக் கொடுத்தவர். நாவலர் மேற்கொண்ட பணிகளில் முக்கியமானதாக சமயக் கண்டனங்களை மேற்க் கொண்டதைக் குறிப்பிடலாம். சைவ சமயத்திற்கு எதிராகச் செயற்பட்ட சமயத்தவர்களை எதிர்த்து கண்டனப் பிரசுரங்கள், கண்டன அறிக்கைகள், பத்திரிகைகள் என்பவற்றை வெளியிட்டு இந்தச் செயற்பாட்டினை முன்னெடுத்து அதில் வெற்றியும் கண்டார் நாவலர்.


### நாவலரின் சமூகப்பணிகள்

நாவலர் பெருமான் சமயப் பணியோடு சமூகப் பணிகளையும் முன்னெடுத்திருந்தார். மக்களோடு சகிப்புத் தன்மையுடன் நடந்து கொண்டவர் நாவலர். கடும் வறட்சியால் ஏற்பட்ட பஞ்சத்தினால் மக்கள் துன்பப்பட்ட போது நாவலர் கஞ்சித் தொட்டி அமைத்து மக்களின் துன்பம் போக்கும் அரிய கைங்கரியத்தை மேற்கொண்டார். மேலும் விவசாய மக்களுக்கு போதியளவு விதைநெல் கிடைக்காத வேளையில் அரசின் மீது கடுமையான கண்டன அறிக்கையினை வெளியிட்டார். தவிர சமூகத்தில் மதுபாவனை, சூதாட்டம் என்பவற்றை இல்லாது செய்திப் பணி செய்தார். இவ்வாறு நாவலரின் சமூகப் பணிகளும் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுக் கொண்டன.

### நாவலரின் நூலாக்கப் பணி

நாவலர் தனது நிறைவான கல்வி அறிவின் துணை கொண்டு சைவ மக்களுக்கு உதவும் வகையில் பல நூல்களை ஆக்கித் தந்துள்ளார். உரைநடை நூல்கள், பதிப்புச் செய்த நூல்கள், எழுதிய நூல்கள் மற்றும் மொழி பெயர்ப்பு நூல்கள் என அவற்றின் வகையறாக்கள் அமைவறுகின்றன. இவரால் உரை எழுதப்பட்டு சிறந்த முறையில் பதிப்புச் செய்யப்பட்ட நூல்களாக சூடாமணி, நிகண்டு, சேது புராணம், திருவிளையாடற் புராணம், பெரியபுராணம், கந்தபுராணம், திருக்குறள் பரிமேலழகர் உரை, ஆத்தி

சூடி, வாக்குண்டாம், சைவசமய நெறி என்பவற்றைக் குறிப்பிடலாம். மேலும் நாவலரவர்கள் எழுதி வெளியிட்ட நூல்களாக பால பாடம் 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் புத்தகங்கள், சைவசமய வினாவிடை, இலக்கண விடை, சிவாலய தரிசன விதி, சிதம்பர மான்மியம் முதலியவற்றைக் குறிப்பிடலாம். தவிர கிறிஸ்தவ சமய புனித நூலாகிய பைபிள் எனும் வேதாகமத்தை தமிழில் மொழி பெயர்ப்பதில் நாவலருடைய பங்களிப்பு முக்கிய காரணமாக அமைந்திருந்தது. இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது குறிப்பிட்ட சில நூல்களின் பெயர்கள் மட்டுமே. இவைதவிரவும் நாவலரது ஆளுமையின் அறுவடைகளாக இன்னும் பல நூல்கள் உள்ளன என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.



**நாவலரும் வாதமகாசபையும்**

1879ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை சைவப் பிரகாச வித்தியா சாலையில் மாபெரும் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இலங்கை சட்டசபைக்கு அந்தக் காலத்தில் யாரைத் தெரிவு செய்வது என்பதற்காகவே அந்தக் கூட்டம் நடைபெற்றது. சேர். பொன். இராமநாதன் மற்றும் பிறிற்றோ ஆகியோர் சட்டசபை உறுப்பினருக்கான போட்டியாளர்கள். இராமநாதன் நாவலரின் ஆசி பெற்றவர். பிறிற்றோ தலைசிறந்த வழக்கறிஞர். இருவரில் ஒருவரை சட்டசபை உறுப்பினராக தெரிவு செய்வதற்காக அக் கூட்டம் நடைபெறுகின்றது. அன்றைய தினம் கூட்டத்திற்கு தலைமை தாங்க வேண்டிய நாவலர் பெருமான் தனக்கு ஏற்பட்டிருந்த தொய்வு வருத்தம் காரணமாக தன் அன்பிற்குரிய விஸ்வநாதப்பிள்ளையை கூட்டத்திற்கு தலைமை தாங்க வைத்தார். தான் கூட்ட மண்டபத்தில் அமர்ந்திருந்து கூட்ட நடைமுறைகளை கண்ணுற்றவாறு இருந்தார். நாவலர் கூட்டத்துக்கு தலைமை தாங்கவில்லை என்பது பிறிற்றோ கட்சியினருக்கு சாதகமாக போய்விட்டது. அச் சமயத்தில் பிறிற்றோவின் வெற்றியும் உறுதியாகி விட்டது. அப்போது யாது செய்வது என்பதை அறியாது விஸ்வநாதப்பிள்ளை நாவலரைப் பார்த்தார். அவர் மட்டுமல்ல. சபையில் இருந்த அத்தனை பேரினது கண்களும் நாவலரையே பார்த்தன. நாவலர் பெருமான் தன் நிலையிலிருந்து எழுந்தார்.

கம்பீரமான தோற்றத்துடன் வாதமேடையை நோக்கி நடந்தார். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அக் காட்சியை கம்பரின் பாடலை ஆதாரமாக்கி அழகுற எடுத்துரைக்கின்றார்.

*பொழிந்த நெய்யாகுதி வாய் வழி பொங்கி
எழுந்த கொழுங் கனல் என்ன எழுந்தார்...
மாக மடங்கலும் மால் விடையும் பொன்னாகமும்
நாகமும் நாண நடந்தார்*


இவ்வாறு வாத மேடை சென்ற நாவலர் தன் தமையனார் புத்திரனிடம் எடுத்துக் கொண்டு வா தந்தி தபாற் கட்டுக்களை.. என்று கூறினார். மேலும் நாவலர் பெருமான் ஒருவர் ஒருவராகவோ அல்லது இருவராகவோ அல்லது பலர் கூட்டங் கூட்டமாகவோ என்னுடன் வாதத்திற்கு வரலாம் என்று முழங்கினார். அங்கிருந்தவர் யாவரும் எதுவும் புரியாது பிரமித்துப் போனார்கள். நாவலரின் கையில் இருந்த கடித மற்றும் தந்திக் கட்டிற்குள் பிறிற்றோ அனுப்பிய சில அந்தரங்கமான கடிதங்களும் உள்ளன என்பதுடன் பிறிற்றோவின் நேர்மையற்ற செயலையும் அது சொல்லாமல் சொல்லியது. நாவலரின் வருகையால் பிறிற்றோ கட்சியினர் நிலையிழந்து போயினர். சபையில் இருந்த அனைவரது ஆதரவுடனும், நாவலர் பெருமானின் ஆசீர்வாதத்தாலும் சேர்.பொன். இராமநாதன் இலங்கை சட்டசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். நாவலர் பெருமானின் இத்தகு ஆளுமை கண்டு வியக்காதவர் அச் சபையில் யாருமே இல்லை எனலாம்.


**சைவத்தின் காவலனை போற்றிடுவோம்**

சைவத்தையும், தமிழையும் தழைத்தோங்க செய்திட்ட நாவலர் பெருமான் 1879ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்க்கையை முடித்து இறையடி சேர்ந்தார். நல்லை நகர் நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே? சுருதி எங்கே? என்று மொழியப்படும் வாக்கிற்கு அமைவாக நாவலரது ஆளுமைகளையும், பெருமைகளையும் எழுத்தில் வடித்திட முடியா.

இன்றும் யாழ்ப்பாணத்தில் கந்தபுராணக் கலாசாரம் சிறப்புறுவதற்கு நாவலர் பெருமானே வழி சமைத்திருக்கின்றார் என்பது கண்கூடு. இத்தகு நாவலரது பணியினை நினைவு கூரும் வகையிலேயே இலங்கை அரசு அவரது புகைப் படம் தாங்கிய தபால்தலை ஒன்றை வெளியிட்டது. மேலும் யாழ்ப்பாணத்தில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு அருகே நாவலர் மணிமண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. ஆக நாவலர் பெருமானின் பெருமை தனை நாமும் போற்றிப் புகழ்ந்திடுவோம்.

**இன்றும் யாழ்ப்பாணத்தில் கந்தபுராணக் கலாசாரம் சிறப்புறுவதற்கு நாவலர் பெருமானே வழி சமைத்திருக்கின்றார் என்பது கண்கூடு. இத்தகு நாவலரது பணியினை நினைவு கூரும் வகையிலேயே இலங்கை அரசு அவரது புகைப்படம் தாங்கிய தபால் தலை ஒன்றை வெளியிட்டது.**





## சமாதான நீதிவான்

கண்டி, கலஹாவை பிறப்பிடமாகவும் திருகோணமலையில் வசிப்பவருமாகிய சுப்பிரமணியம் ஸ்ரீதர் அகில இலங்கை சமாதான நீதிவானாக கண்டி மாவட்ட நீதிமன்ற நீதிபதி பரீக்ஷன் முன்னிலையில் அண்மையில் பதவியேற்றார்.

இவர் தெல்தோட்டை மலைமகள் இந்து மத்திய கல்லூரி, கண்டி புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரி என்பவற்றின் பழைய மாணவராவார்.

தெல்தோட்டை மலைமகள் இந்து மத்திய கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக கடமையாற்றிய இவர், தற்போது திருகோணமலை மெதடிஸ்த மகளிர் கல்லூரியில் கடமையாற்றி வருகின்றார்.



## கலைச்சுடர் விருது வழங்கி மதிப்பளிப்பு

லக்ஸ்டோ மீடியா நெட்வோர்க் சிறிலங்கா ஆர்.கே. மீடியா இலங்கை எழுத்தாளர் சங்கத்துடன் இணைந்து சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் அண்மையில் நடத்திய திறமைக்கான தேடல் விருது வழங்கும் நிகழ்வில் கல்வி, கலை, இலக்கிய, ஊடகத்துறை, சமூக சேவை பங்களிப்புக்காக பல் துறை கலைஞர் டாக்டர் கலாபூசணம் கந்தப்பு லோகேஸ்வரன் 'கலைச்சுடர்' விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டார்.

## விருது வழங்கி மதிப்பளிப்பு


சமாதான நீதிவான்கள் பேரவையின் வடக்கு மாகாண மாநாட்டில் இளம் சமூக சேவகர் சத்தியகுமாரன் போல் தர்ஷந் அண்மையில் நடைபெற்ற வடக்கு மாகாண பேரவை நிகழ்வில் வைத்து தேசிய பணிப்பாளர் கலாநிதி பாஹாத் மஜீடமிருந்து 'தேச சக்தி' விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டார்.

இவர் அகில இலங்கை சமாதான நீதிவான் என்பதோடு கீர்த்திசிறி விருது பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.





# கோவில்களுக்குப் பூமாரிபொழிய புஸ்பக விமானங்கள் கொள்முதல்



■ தேவநாயகம் தேவானந்த்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடமும் வருடாந்தம் ஒருவார காலம் மாணவர்களுக்கு இடையே பல்வேறு போட்டிகளை நடத்தி அவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கு இறுதி நாளில் பரிசில்கள் வழங்கிக் கொண்டாடுவது வழமை. அவ்வாறான போட்டிகளில் நாடகப் போட்டியும் நடைபெறுவது வழமையாகும். நான்கு வருடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இடையில் அந்தப் போட்டி நடைபெறும். இவ்வாறான ஒரு போட்டியில், 1998ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீட மாணவர்கள் நடத்திய விஞ்ஞான வார நிகழ்வில் நாடகப்போட்டி நடத்தப்பட்டது. அதில் மேடையேற்றப்பட்ட சே.சேதுபரின் 'சடங்குகள் நீத்த தகனங்கள்' நாடகம் முக்கியமானது. அதன் காலப்பொருத்தம் மற்றும் குறியீட்டுப்பாங்கில் நாட்டின் நிலைமையை கனகச்சிதமாகப் பேசியது போன்றவற்றால் அதன்பதிவு முக்கியமானதாகிறது. அந்த நாடகம் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டதோடு தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும் மேடையேற்றப்பட்டது.

⊙ ⊙ ⊙ ⊙

'சடங்குகள் நீத்த தகனங்கள்' நாடகத்தைப் பார்த்த தமிழ் நாடகமேதை குழந்தை ம.சண்முகலிங்கம் தனது குறிப்பில், "விஞ்ஞானதுறை மாணவர்களிடமிருந்து நாடகத்துறை மாணவர்கள் கற்றுக் கொள்ளவேண்டும்" என்றார்.

அந்தளவுக்கு விஞ்ஞானபீட மாணவர்கள் அதனை நன்கு கட்டமைத்திருந்தார்கள். அந்த நாடகத்தில் நடித்த எல்லோருமே சிறப்பாக நடித்திருந்தார்கள் இதனால் நாடகத்தில் நடித்த அனைவருக்கும் சிறந்த நடிகருக்கான விருது வழங்கப்பட்டது.

'சடங்குகள் நீத்த தகனங்கள்' நாடகத்தன் திரை விலகும்போது மேடையின் மையத்திலே ஒளி விளக்கு எரிந்தது கொண்டிருக்கும். அதனை மக்கள் பக்தியோடு வணங்கி நிற்பர். ஒருபாடல் ஒலித்துக் கொண்டிருக்கும், அது விழுமியங்களையும் கலை கலாசாரத்தை போற்றிப் பாடுவதாகவிருக்கும். அப்போது சிலர் ஒரு வண்டில்சில்லை மேடையில் உருட்டியபடி வருவார்கள், மக்களும் இணைந்து கொள்வார்கள். இப்போது, மேடையின் மத்தியில் அழகான தேவதை போன்ற தோற்றத்தில் அதிகாரம் தோன்றும். அதன் கையில் ஒரு பொதி காணப்படும். அதனை மக்களை நோக்கி நீட்டி "இவை அனைத்தும் உங்களுக்காகவே, என்னருகே, வாருங்கள்" என்று கூவி அழைக்கும். மக்கள் அதனை வியப்பாகப் பார்ப்பார்கள். அப்போது, சில்லை உருட்டும் பிரதானமானவர் மக்களைத் தடுத்து நிறுத்த முயற்சிப்பார். ''எங்கள் கைகளை நம்பியே நாங்கள் வாழ வேண்டும். உழைத்து வாழ்வோம்' என்று கூறிமக்களைத் தடுக்க முயற்சிப்பார். இருப்பினும் சில சுயநலமிகள் ஓடிச்சென்று அதிகாரத்தின் அடிவருடிகளாக மாறிவிடுகிறார்கள். மக்கள் போவதா? விடுவதா? என்ற குழப்பத்திலிருப்பார் கள். இப்போ அதிகாரத்தின் காலைப்பிடித்து அடிவருடுவோர், "மக்களை வாருங்கள் வாருங்கள்" என்று கூப்பிடுவார்கள். இப்போ, மக்கள் மெல்ல அவர்களை நோக்கி நகர்வார்கள் போலும். மக்கள் விலகிச் செல்ல சில்லை ஒருவர் மட்டுமே நகர்த்துவார், மிகவும் கஸ்ரப்படுவார்.

அதிகாரம் அடிவருடிகளைக் கொண்டு மக்களை ஆட்டிப்படைக்கும். அதிகாரத்தின் காலைப் பிடித்தவர்கள் செல்லப் பிள்ளைகளாக சேட்டைகள் பல விடுவார்கள். மக்களைக் கவருவதற்காக அடிவருடிகள் விளையாட்டுப் பொருள்கள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் போன்ற பலவற்றையும் கொடுத்து மக்களை வசீகரிக்க முயற்சிப்பார்கள். மக்களும் மெல்ல அதற்குப் பழக்கப்படுகிறார்கள் போலும். இப்போது தேர்தல் ஒன்று வருகின்றது. மேடையில் ஒரு பலகை இருக்கும். அதில் இரண்டு சின்னங்கள் காணப்படும். அதற்கு புள்ளடியிடும்படி மக்கள் கேட்கப்படுவார்கள். புள்ளடியிட முன்னர் மக்களுக்கு விளையாட்டுப் பொருள்கள் வழங்கப்படும். அதனை அவர்கள் அடிபட்டு வாங்குவார்கள். புள்ளடியை அதிகளவில் பெற்றவர் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்படுவார். இப்போ மேடைக்கு ஒரு கதிரை வருகிறது. அந்தக் கதிரைக்காக அடிவருடிகள் சண்டையிடுவார்கள்.

இந்தச் சூழலில் ஓர் இளம்பெண் வீதியால் செல்கிறாள். அவளை ஒரு கறுத்த உருவம் பின்தொடரும், இப்போ மேடையின் முன்பகுதியில் இடதுபுற ஓரமாக ஒரு ரோஜா செடி காணப்படும். அதில் ஒரு ரோஜா பூ அழகாகப் பூத்திருக்கும். அதிகாரம் அந்தப் பூவைப் பிடிங்கி முகர்ந்து பார்த்து பின்னர் கசக்கி எறியும். அந்தவேளை கறுப்பு உடையணிந்தவன் ஒரு வெள்ளைத் துணியைக் கொண்டுவந்து வீசப்பட்ட பூவை மூடுவான். இதன் போது, ஒரு தாய் மேடைக்குள் ஓடிவருவாள். தன் பிள்ளையைக் காணவில்லை என்று கதறி அழுவாள்.



எழுதப்படாத நாடக வரலாறு

29

⊙ ⊙ ⊙ ⊙

இதற்கு, அடுத்த காட்சியாக மக்களிடம் கறுத்த செய்தித்தாள்கள் கொடுக்கப்படும். கறுத்த தாள்களில் ஏதோ எழுதியிருக்கிறது போலும். மக்கள் அதனை வாசிப்பார்கள். அதில் 'புனிதத் திருத்தலங்கள் மீது பூமாரி பொழிய புஸ்பக விமானங்கள் கொள்முதல்' என்ற செய்தி இருக்கும். அதனை உரத்து வாசிப்பார்கள். அந்தக் காலகட்டத்தில் நல்லூர் கோவிலின் தேர்த் திருவிழாவின் போதும் விமானங்கள் பூமாரி பொழிவதும், வன்னியில் விமானக் குண்டுவீச்சுகள் நடைபெறுவதும் பார்ப்போரின் நினைவுகளில் நிழலாடிச் செல்லும்.


நாடகத்தின் அடுத்த காட்சியாக, அதிகாரம் மக்களிடம் பொதியொன்றை கொண்டுவந்து கொடுக்கும். மக்கள் ஆர்வத்தோடு அந்தப் பொதியை வாங்குவார்கள். ஆர்வமேலீட்டோடு, அதனைப் பிரிப்பார்கள். ஆனால் அதற்குள் இன்னொரு சிறிய பொதி காணப்படும் அதனைத் திறந்தால் மேலுமொரு சிறிய பொதி காணப்படும். இவ்வாறு ஐந்து சிறிய பொதிகள் இருக்கும். சிறிது சிறிதாகச் சுருங்கி கடைசியில் மிகச்சிறிய பொதிதான் மக்களுக்குக் கிடைக்கும். தமிழர்களுக்கு சிங்கள அரசுகள் தருவதாகச் சொல்கிற தீர்வுப் பொதிகள் கடைசியில் சிறுத்துத் சிறுத்து ஒன்றுமில்லாமல் போய்விடுவதை இந்தக் காட்சி அற்புதமாகக் காட்டிநிற்கும். அப்போது அதிகாரம் நீலநிறத் துணியால் தன்னைப் போர்த்தியபடி காணப்படும். மக்கள் பொதிகளை ஒவ்வொன்றாகப் பிரிக்கும் போது அதிகாரம் நீலநிறமாகத் தெரியும். தற்செயலாக அதிகாரம் போர்த்தியிருந்த துணி விலக அதிகாரத்தின் உண்மையான கொடூர தோற்றம் தெரியும், மக்கள் பயத்தில் இருப்பார்கள். அதிகாரத்தின் உடலில் எலும்புகள் மண்டையோடுகள் காணப்படும். இப்போது அவசர அவசரமாக ஒரு பச்சைத் துணியைக் கொண்டு வந்து அதிகாரத்தைப் போர்த்தி எலும்புக் கூடு மண்டையோட்டை மறைக்க முயற்சிப்பார்கள். பச்சைத் துணியால் கொடூரத்தை மூடிமறைப்பார்கள். அப்போது இனி நன்மையே நடக்கும் என்பார்கள். இலங்கைத் தீவில் மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற இரண்டு பிரதான கட்சிகளும் தமிழர்களுக்குத் தீர்வெ தனையும் தந்துவிடமாட்டார்கள். அவர்களின் மனநிலை, கடந்த கால வரலாறு எல்லாம் ஒன்றுதான் என்பதை இந்தக்காட்சி புலப்படுத்தும். மக்கள் அதிகாரத்தின் உண்மை முகத்தைக் கண்டதும், ஒரு தெளிவுக்கு வந்தவர்களாக ஓடிச்சென்று வண்டில் சில்லைப் பிடிப்பார்கள். எல்லோரும் சேர்ந்து வண்டில் சில்லை உருட்ட முயற்சிப்பார்கள். இதனோடு நாடகம் நிறைவடைகிறது.

ஆறு, ஏழு தடவைகள் நாடகம் பல்கலைக் கழகத்துக்கு வெளியே மேடையேற்றப்பட்டது. அப்போது அரசு சார்பு அரசியல் கட்சியொன்றின் அழுத்துக்கும் ஆளாக வேண்டியிருந்தது.

'சடங்குகள் நீத்த தகனங்கள்' நாடகம் தமிழர்களின் ஆழமான அரசியல் மற்றும் வாழ்வியல் பிரச்சினைகளைப் பேசிய நாடகமாகும். தொடர்ச்சியாகத் தமிழர்கள் ஏமாற்ற முயல்வது, தமிழ் கட்சிகள் சுயலாப நோக்கத்தோடு அதிகாரத்தின் பின்னால் செல்வது, மக்கள் வாழ்வதற்காக தினமும் போராட வேண்டியிருப்பது போன்ற பல பிரச்சினைகளை உள்ளூறை பொருளாகப் பேசிய அற்புத நாடகம் எனலாம். ■

## மன்னாரில்

# பார்வளன் நாடக சரிதம் படைத்த புலவர் செபமாலை மொத்தம்போல்




■ கே.எஸ்.சிவஞானராஜா

மன்னார்மாதோட்டமானதுஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே கலைகளுக்கும்கலைஞர்களுக்கும்ஒரு பெட்டமாகவிளங்குகின்றது. இலக்கண, இலக்கிய, இசை, நாட்டுப்பாடல், நாட்டுக் கூத்து, நாடகம், விளையாட்டு, கைத்தொழில், வைத்தியம், வர்த்தகம், வரலாறு, பண்டமாற்று, நூலாக்கம், மும்மொழிப் பாவனை எனப் பன்முகக் கலாசாரப் பரிவர்த்தனைநடைபெறும்முக்கியகேந்திர இடமாக மன்னார் விளங்குகின்றது. வறண்ட பிரதேசமாக இருந்தபோதும், மண்ணும் மொழியும் மக்களைப் பண்ணும் பயனும் பலதும் பத்தும் ஆக்கிப் பாரம்பரியம் கூட்டும் பண்பாடாக்கியும் வைத்துள்ளது. அந்தவகையில்மாதோட்டம்என்பது மரபுவழியமைந்த ஒருதிறவு கோலாக வரம் பெறுகிறது.

பெஞ்சமின் செல்வம் எழுதிய மன்னார் மாதோட்டத்தமிழ்ப்புலவர் சரித்திரம் என்னும் நூலின் வாயிலாக நூற்றுக்கணக்கான புலவர்களையும் கலைஞர்களையும் நாம் தெரிந்தும் புரிந்தும் உணர்ந்தும்கொள்ள முடிகிறது. அந்தவகையில் பார்வளன் நாடகசரிதம் என்ற அற்புதமானநூலினை இனிதேபடைத்தருளிய புலவர் செபமாலை மொத்தம் போல் என்பவர் வரலாற்றில் பதிவு செய்யப்படுகின்றார்.

### வேதாகமப் பின்னணி

திருவிவிலியத்தின் பழைய ஏற்பாடு குல முதுவர்களின் ஒருவராகிய சூசை (யோசேப்பு) என்பவரை அடிப்படையாக வைத்தே இந்த நாடகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நூலாக்க முயற்சியில் ஓய்வு பெற்ற அதிபர் மு.சுந்தரம் பாண்டியனின் ஆர்வமும் அயராத முயற்சியும் எண்ணி வியக்கத்தக்கது.

செபமாலைமொத்தம்போல்ஒருபன்முக மேதாவியாகத் திகழ்ந்துள்ளார். ஆசிரியர், அதிபர், கவிஞர், புலவர், கட்டுரையாளர், விமர்சகர், ஆராய்ச்சியாளர், நூலாசிரியர், வைத்தியர் பக்திமையாளர், சமூகத்தொண்டர், சமூகஉறவாளர், மண்பற்றாளர்எனபல்பரிமாணமிக்கவர். இவரது புலமைக்குக் குருவாக அமைந்தவர் அவரது உறவினரான சுண்டிக்குளிப் புலவர் என அறியப்படும் விறாசு கபிரிகேல் மொத்தம்போல் ஆவார். குறிப்பாகச்செய்யுள்யாப்புஇலக்கணங்களைமரபுவழிகுன்றாமல்கவிதைஆக்குவதில், கவிதை புனைவதில், கற்பனை செய்வதில் காத்திரம் ஆக்குவதில் புலவர் போல் பிரபல்யமாகிபிரமுகர்ஆகின்றார்.

இவருடைய தந்தையார் பெயர் திருசந்தியோகு செபமாலை எனப்பெயர்கொண்ட சித்த ஆயுள்வேத வைத்தியராவார். அப்பரம்பரையின் வாசனையும்வாலாயமும்இவரிடமும்பலித்தது. இவரது தாயார் புதுக்கமத்தைச் சேர்ந்த புலவர் குருகுல நாட்டுத் தேவர் வழிவந்த மரிசால் எதிர்மன்னசிங்கம் மடுத்தீனின் மூத்த புதல்வியாவார்.

இவர் வஞ்சியன்குளம் வங்காலைறோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் ஆரம்ப இடைநிலைக் கல்வியைப் பெற்றபின் 1945ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இணைந்து ஆசிரியப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றார். முப்பத்தைந்து ஆண்டுகள் ஆசிரியப் பணியாற்றி பயபக்தியான மாணவ பரம்பரையை பரோபகரமாக உருவாக்கினார்.

முருங்கன், நானாட்டான், முத்தரிப்புத்துறை, மன்னார்நல்லாயன், ஆண்டாங்குளம், ஆகிய பாடசாலைகளில் ஆசிரியம் சிறக்கவும், மன்னார் சூரியகட்டைக் காடுறோமன் கத்தேரிலிக்கத் தமிழ்ப் பாடசாலையில் பத்து ஆண்டுகள் அதிபராகவும்பாடசாலைச்சமூகம்மேம்படவும் தம்மை அர்ப்பணித்தார்.

### முக்கியமான படைப்புக்களாக பார்வளன் நாடாக சரிதம்

நத்தார் கூத்து, கல்வாரிக் களப்பலி, புனிதவீரமங்கை, மும்மணிகள்சரிதை, சிலுவைப் பாதைகளின் தாழிசைகள் சுண்டிக்குளிப்புலவர் வரலாறு,மாந்தை மாதாவே மருதமடு மாதா, குருகுல நாட்டுத்தேவர் மற்றும் ஏராளமான தனித்துவப் பாடல்கள் வாழ்த்துப் பாடல்கள் என அவரது படைப்புக்கள் இன்றும் என்றும் பிரகாசிக்கின்றன.

# சைவத்துக்கு அரும்பெரும் பணியாற்றியவர் சிவபாலன்

■ நாச்சியார் செல்வநாயகம்

சைவத்திரு காசிநாதர் சிவபாலன் அமரத்துவமடைந்து இன்று ஒரு மாதம் நிறைவடைந்துள்ளது. மட்டுவில் மண் சைவத்தமிழ் வளர்க்கும், அதைப் பேணிப் பாதுகாக்கும் சிவபூமியாக விளங்கி வருகின்றது. அத்தகைய மண்ணில் காசிநாதருக்கும் சிவ காமிசுந்தரிக்கும் மகனாகத் தோன்றித் தவ வாழ்க்கை வாழ்ந்தமாந்தரே அமரர். சாதாரணமானவர்கள் மனிதர்களாக வாழ்கின்றனர். நிறைமொழியுடைய இறை இன்ப அனுபவத்தில் மூழ்கித் திளைக்கும் மனிதர்களேமாந்தர்எனச்சிறப்புப்பெறுபவர். கல்வியில் ஈடுபாடு உள்ள உறவுகள் இவருக்கு உறவினராக இருந்துள்ளார்கள், இருந்து வருகின்றார்கள்.

இவருடைய தந்தையார் சுந்தர காசிநாதர் சந்திர மௌலீச வித்தியாசாலை மட்டுவில் பகுதியில் தொன்றுவதற்கு நிலம் அளித்துப் பாடசாலை நிறுவுனராக இன்றும் பாடசாலைச் சமூகத்தால் நினைவு கொள்ளப்பட்டு வருகின்றார். அமரர் சிவபாலன் ஆரம்பக் கல்வியை மட்டுவில்சந்திரமௌலீசவித்தியாலயத்திலும்உயர்கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கற்றுப் பின் தனது இளமைக் காலத்தில் அதி உயர் ஆன்மிக சிந்தனையுடன் பெரிய தந்தை முறை உறவுக்காரனான மட்டுவில் முத்துமாரியம்பாள் தர்மகர்த்தா இ.தாமோதரம் பிள்ளையுடன் துணை நின்று மட்டுவில் முத்துமாரியம்பாள் ஆலய வளர்ச்சிக்கு உழைத்தார்.

இன்முகத்துடன் அனைவரையும் வரவேற்கும் பண்பு அவர் பக்கம் எல்லோரையும் ஈர்த்தது. அமரர் சிவபாலன் ஒரு சித்த புருஷனாக வெள்ளை வேட்டியுடன்



வெள்ளைச் சால்வையும் அணிந்து வெள்ளை உள்ளத்துடன் பழகுவதால் துர்க்கா புரத்துக்கு வரும் வெளிநாட்டுச்சைவத்தமிழ் மக்களின் அன்புக்கும் பெருமதிப்புக்கும் பாத்திரமாகினார். ஆலயத்துக்கு வரும்பிரமுகர்களும்அரசியல் வாதிகளும் தம்பி சிவபாலன் எங்கேஎன்றுகேட்டு உரிமை பாராட்டிப் பழகி வந்துள்ளனர். அதனால் அவர்களும் அமரருடன் தொடர்புகொண்டு துர்க்காபுரத்தில் தமது நேர்த்தியை நிறைவேற்றி வந்துள்ளனர்.

அமரர்சிவபாலன்மட்டுவிலில்உள்ளதனக்குச்சொந்தமான நிலத்தில் ஒரு பகுதியை தென்மராட்சிப் பிரதேச செயலக கிராம அலுவலர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அலுவலர் காரியாலம் அமைத்து வழங்கியுள்ளார். மீதமுள்ள நிலத்தில் நூல் நிலையம் ஒன்றை அமைத்து நடத்துவதற்குக் கட்டடம் அமைக்கும் பணியை மேற்கொண்டிருந்தார். ஆனால் அந்தப் பணி முழுமையாக முன்பு அவர் அமரத்துவம் அடைந்து விட்டார். சிறுவயது முதல் இறைபக்தியும் தமிழ்ப்பற்றும் கொண்டுதூயவாழ்க்கைவாழ்ந்தவரே இவர். ஆதலால் அவர் எங்கள் மனங்களில் என்றும் வாழ்வார்.

*கட்டுரையாளர்: முன்னாள் முதுநிலை விரிவுரையாளர் தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.*



## சமாதான நீதிவானாக நியமனம்

அல்லாரை வடக்கு மீசாலையைச் சேர்ந்த சரவணமுத்து இரத்தினசிங்கம் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக அண்மையில் பதவியேற்றார்.

இவர்கால்நடைஉற்பத்திச்சுகாதாரத்திணைக்களத்தில் கால்நடை அபிவிருத்தி அலுவலராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவராவார். (ம-9)



கிளிநொச்சிமாவட்டசமூகசேவைகள்திணைக்களத்தினால் பன்னாட்டு முதியோர் தின விழா அண்மையில் இடம்பெற்றது. (421)

# ஆசிரியத்துவத்தில் மேம்பட்டவர் திருமதி ச.அமிர்தலிங்கம்

எஸ்.ரி.அருள்குமரன்





கல்லூரி ஆசிரியர்களது சேவைக் காலத்தால் கொண்டாடப்பட வேண்டியதும், சேவையினை பாராட்டவேண்டியதும் காலத்தின் கடமையாகும். ஒவ்வொரு ஆசானும் தன்னலம் பராது சமூக நலனோம்பல் நிலை சார்ந்த வகையில் தமது ஒய்வு நிலை வரை இயங்குகின்றனர் என்பது கண்கூடு.

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் பிரதி அதிபராக இருந்து அண்மையில் ஒய்வுபெற்ற திருமதி ச.அமிர்தலிங்கம் தனது ஆளுமை திறத்தினால் தனது அதிகார கட்டமைப்புவெளிக்குள் நின்று எடுத்த காரியத்தினை இம்மியும் பிசகாத வகையில் நடத்தி முடிப்பவராக விளங்கினார்.

கல்லூரியில் எட்டு ஆண்டுகளிற்கு முன்னர் ஆசிரியராக நான் இணைந்து கொண்ட காலப்பகுதியில் இருந்து அவரது ஆளுமைத்திறனை அருகிருந்து பார்ப்பதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டது. தனது ஆளுகைக்குக் கீழ் ஒரணியானவர்களை ஒருங்கிணைத்து ஒழுங்கமைவுகளை கச்சிதமாக மேற்கொண்டு எடுத்த காரியத்தை ஆற்றிமுடிக்கும் வல்லமையை கொண்டிருந்தார்.

இவர் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு புவியியல் ஆசிரியராக இணைந்து கொண்டார்.

இக்கல்லூரியில் இவர் ஆசிரியர், வகுப்பாசிரியர், ஒழுக்காற்று குழுவில் உறுப்பினர், பரிசளிப்புவிழா ஒழுங்கமைப்பு குழுவின் தலைவர், இல்லமெய்வல்லுநர் போட்டிகளின் போது நிகழ்வுப்பதிவிடுனர், பகுதித்தலைவர், பிரதிஅதிபர் என பல தளங்களில் செயற்பட்டு தான் சார்ந்த வகையில் கல்லூரிச் செயற்பாட்டில் காத்திரமான பங்களிப்பினை நல்கியிருந்தார்.

இவர் கலைத்திட்ட வடிவமைப்பினை தனது கண் எனக்கொண்டு செயற்பட்டதுடன் ஐந்தாண்டு திட்ட வடிவமைப்பின் பிரதான கர்த்தாவாகச் செயற்பட்டார். ஓய்வு நிலை முதல்வர் எஸ்.சிவநேஸ்வரன் பாடசாலையினை பல தளங்களில் மாற்றியமைக்க முயன்ற போது அவரது எண்ணங்களிற்கு செயல் வடிவம் கொடுத்து செயற்பட்டிருந்ததை அறிய முடிகின்றது. அந்த வகையில் குறிப்பாக மகுடவாசகம், தூரநோக்கு போன்றன இவரால் வடிவமைக்கப்பட்டதுடன், கல்லூரியின் வரலாற்றைத் தொகுத்துயாத்த பெருமைக்குரியவர். மேலும் கல்லூரி நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடியபோது கல்லூரியின் பல்வேறு தள நிலை பதிவுகளை உள்ளடக்கி நூற்றாண்டு விழா மலரினை உருவாக்கிய முதன்மை செயற்பாட்டாளராக விளங்குகின்றார்.

கல்வியுடன்இணைந்த வகையில் இணைப்பாட விதான செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்த வேண்டும் என்பதில் முனைப்புக்காட்டியவர். மாணவர்களுக்கு கிடைக்க வேண்டியவற்றிற்காக இவர் காட்டுகின்ற கரிசனை வியக்கத்தக்கது.

நிகழ்வில் ஆசியுரையினை பழைய மாணவர் சங்க தலைவர் வ.ஸ்ரீகாந்தன்,கல்லூரி முதல்வர் சி.இந்திரகுமார், முன்னாள் பழையமாணவர் சங்க தலைவர், கல்லூரியின் பிரதி அதிபர் ,உபஅதிபர் இவரிடம் கற்ற மாணவர்கள் எனப் பலரும் உரை நிகழ்த்தியதுடன், பொண்ணாடை போர்த்தியும்,நினைவுச்சின்னம் வழங்கியும் கௌரவித்தனர்.

# மக்கள் மனதிருக்கும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அமரர் கந்தசாமி நிமலன்

செ.மகேஷ்

காலங்கள்விரைந்துகொண்டிருக்க இங்கு வாழ்வோர் பலர் கனத்த இதயங்களுடன் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். பிறப்பதும் இறப்பதும் இயற்கையேயாயினும் இறந்தவர்களில் பலரும்



வாழ்ந்து கொண்டிருப்போர் மனங்களில் இன்றும் நிலைத்திருப்பது அவர்தம் வாழ்க்கையின் சிறப்பாகும்..

நல்ல பண்பும், நட்புடன் பழகும் உள்ளமும் கொண்டு உலவிய அன்பர் கந்தசாமி நிமலன் காலமாகி ஆண்டொன்று கடந்ததென்பது மனத்தை வருத்தும் நினைவாகிறது. தம் வாழ்நாளில் அவர் ஆற்றிய செயல்கள் உற்றார், உறவினர், நண்பர்கள் நினைவில் அவரது வாழ்வின் பெருமையை எமக்குள் உணர்வூட்டி நிற்கின்றன.

கந்தசாமி நிமலன் 1978ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் இருபத்தோராம் திகதி பிறந்தவர். இவரது தந்தையார் கந்தசாமி சிறந்த அதிபராக இருந்து இளைப்பாறியுள்ளார். தாயார் செல்வநாயகி ஆசிரியையாக இருந்து ஓய்வுபெற்றுள்ளார். அன்னாரது சகோதரியான கலைச்செல்வி ஓர் ஆசிரியை ஆவார்.

யாழ்ப்பாணம் வேலணை மத்திய கல்லூரி. யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், வரணி மாங்குளம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்றவர். நல்லதோர் ஒழுக்க சீலராக வளர்ந்த மாணவர், கல்வியோடு கிரிக்கெட், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்களில் பாடசாலை நாட்களிலும் அதன் பின்னரும் ஆர்வமாக ஈடுபட்டுத் தமது திறமையை வெளிக்காட்டியவர். மிகவும் இளவயதிலேயே தனது செய்கைகளால் மூத்தோர் மனங்களில் மதிக்கப்பட்டார் தாம் கற்ற கல்வித் தரத்தினால் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றியவர்.

மட்டக்களப்பைச் சேர்ந்தவரும் அரச பணியில் சேவையாற்றுபவருமான பாலரத்தினம் கவிதாவை மணம் செய்து இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையாகி மகிழ்ச்சி தந்த வேளையில் இவர் திடீரெனக் காலமானார்.

ஊர்காவற்றுறை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராக முதல்நியமனம் பெற்றவர். பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களை மேம்படுத்தும் சேவைகளில் ஈடுபட்டு மக்களின் மனத்தைக் கவர்ந்தார். நெடுந்தீவு கூட்டுறவுச்சங்கக் கிளைகளை மீளவும் செயற்படுத்திய பெருமையால் அவர் பாராட்டுக்களைப் பெற்றார். ஊர்காவற்றுறை தம்பாட்டி மீன்பிடிக் கூட்டுறவுச்சங்கத்தின் உயர்வுக்காக உழைத்தவர். கிளிநொச்சி மன்னார் ஆகிய பிரதேசங்களில் அவரது கூட்டுறவுப் பணிகள் சிறந்து விளங்கின. ஆன்மிக ஈடுபாடு கொண்டவர். நாரந்தனை சரவணை கருணந் தோட்டம் சிவசுப்பிரமணியர் கோவில் வருடாந்த சித்திரா பௌர்ணமியில் கஞ்சி கொடுத்தல் அவரது இறையருட் பணிக்கு எடுத்துக்காட்டாகும்.

2018ஆம் வருடம் செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி திடீரென எம்மை விட்டுப் பிரிந்தாலும் அவரது சேவைகள் அவரது அன்புக்குரியோர் மனங்களில் என்றும் நிலைத்திருக்கும் வண்ணமே வாழ்ந்தார் என்பது எம்மை ஆறுதல் படுத்துவதாகும். அன்னாரது சேவைகளை நினைந்து அவரது ஆன்மசாந்திக்காகப் பிரார்த்திப்போம்.



# வடகொரியா திடீர் இராணுவப் பயிற்சி கிம் ஜோங் உன் நேரில் சென்று பார்வை

பியோங்ஜாங்,நவ.20

வடகொரிய இராணுவத்தின் வான் படைப் பிரிவின் போர் வானூர்தி எதிர்ப்புப் படையைச் சேர்ந்த பரசூட் சிப்பாய்களின் மிகப்பெரும் இராணுவப் பயிற்சி நடைபெற்றது. இந்தப் பயிற்சியை அந்த நாட்டின் தலைவர் கிம் ஜோங் உன் நேரில் சென்று பார்வையிட்டார். எந்தவித முன் அறிவிப்பும் இன்றி வடகொரிய இராணுவம் தொடர் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

இந்தப் பயிற்சிகளின் விரிசையில் 3ஆவது நாளன்று நடந்த வான்படையினரின் இராணுவப் பயிற்சியையே கிம் ஜோங் உன் நேரில் சென்று பார்வையிட்டார்.

அத்தோடு, 'வடகொரியாவின் இராணுவத்தை வெல்ல முடியாத இராணுவமாக உருவாக்குவதற்கும், போருக்குத் தயார் நிலையில் இருப்பதற்கும் இப்படி அறிவிப்பு இல்லாமல் பயிற்சியை மேற்கொள்வது அவசியம்' எனக் கூறினார் கிம்.

கொரியா எல்லையில் அமெரிக்கா மற்றும் தென்கொரியாவின் வான் படைகள் இணைந்து இராணுவப் பயிற்சியில் ஈடுபடுவதற்குத் திட்டமிட்டிருந்த நிலையில், வடகொரியா முன்னெடுத்து வருகின்ற இந்தப் பயிற்சியால் அது தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டது.

இது தொடர்பாகத் தனது கீச்சகத்தில் அமெரிக்கா அதிபர் ட்ரம்ப் குறிப்பிடுகையில் கிம் ஜோங் உன், நீங்கள் விரைந்து செயற்பட்டுக் கொரிய தீபகற்பத்தை அணுஆயுதமற்ற பிரதேசமாக மாற்றுவதற்கான ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்துங்கள். விரைவில் உங்களைச் சந்திக்கிறேன்' என்றார்.

## அமெரிக்காவுடன் இனிப் பேச்சில்லை கூட்டுப் பயிற்சியை நிறுத்தவேண்டும்

*வடகொரியா தெரிவிப்பு*



அமெரிக்காவுடன் இனிப் பேச்சுக்கு இடமில்லை என்றும் தென்கொரியாவுடன் அமெரிக்கா இணைந்து நடத்தும் இராணுவப் பயிற்சியை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் வடகொரியா தெரிவித்தது. எங்களுக்கு அமெரிக்காவுடன் அர்த்தமற்ற பேச்சுக்களை நடத்துவதற்கு ஆர்வம் இல்லை.

அத்தோடு அமெரிக்கா நடத்தும் பேச்சுக்களை இலகுவாக்குவதாயின் தென்கொரியாவுடன் அது நடத்தும் இராணுவப் பயிற்சியை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் வடகொரியா தெரிவித்தது. இந்த நிலையில் வடகொரியா திடீரென்று இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டது. இதனால் இந்த மாதம் நடக்கவிருந்த கூட்டு இராணுவப் பயிற்சியை நல்லெண்ண அடிப்படையில் தள்ளிவைப்பதாக அமெரிக்காவும், தென்கொரியாவும் தெரிவித்தன.

இது குறித்து அமெரிக்காவுடன் பேச்சுகளில் ஈடுபடுகின்ற வடகொரியாவின் மூத்த அதிகாரி கிம் ஜோங் ஜோல் கூறும்போது, கூட்டு இராணுவப் பயிற்சியை தள்ளிவைப்பது பொருத்தமற்றது.

இந்தக் கூட்டு இராணுவப் பயிற்சியை அமெரிக்கா கைவிட வேண்டும் என்றார். அமெரிக்கா - தென்கொரியா நடத்தும் இராணுவப் பயிற்சி தம்முடனான போருக்கான ஒத்திகை என்று வடகொரியா அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மாலியில் தாக்குதல் 24 சிப்பாய்கள் சாவு

பமாகோ,நவ.20

மாலி நாட்டின் எல்லைப்பகுதியில் ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் இராணுவச் சிப்பாய்கள் 24பேர் சாவடைந்தனர். 29 பேர் காயமடைந்தனர். மாலியின் வடகிழக்கிலுள்ள காவ் பிராந்தியத்தின் டபான்கோர்ட் பகுதியில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் நடந்தது.

அத்தோடு இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் ஆயுததாரிகள் தரப்பில் 17 பேர் கொல்லப்பட, 100 க்கும் மேற்பட்டோர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர் என்று இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது என்று மாலிப் பொலிஸார் தெரிவித்தனர். தாக்குதல் நடத்திய ஆயுததாரிகள் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறித்து எந்தத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை.

## சீனாவில் சுரங்க விபத்து

*15 பேர் சாவு*

பீஜிங்,நவ.20

சீனாவில் நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 15 பேர் சாவடைந்தனர். 9 பேர் காயமடைந்தனர். சீனாவின் வடக்கில் உள்ள ஷான்சி மாகாணத்தில் இந்தச் சம்பவம் நடந்தது. குறித்த நிலக்கரிச் சுரங்கத்தில் பணியாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கும்போது திடீரென இந்த விபத்து ஏற்பட்டது.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சுரங்கத்தில் உள்ள எரிவாயுக் கலன் வெடித்ததால் இந்த விபத்து ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இன்றைய நாள்

**மேடம்:** ஆரவாரம் தவிர்ப்பதால் அன்றாட பணி சரியாக நிறைவேறும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற மாற்று உபாயம் உதவும். பண வரவை விட செலவு அதிகரிக்கும். உடல் நலத்திற்கு சிறு அளவில் மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்.

**இடபம்:** முன்னர் செய்த நல்ல செயலுக்கு உரிய பலன் தேடிவரும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு எளிதாக நிறைவேறும். உபரி பண வருமானம் கிடைக்கும்.

**மிதுனம்:** பணிகளில் திட்டமிட்டு செயற்படுவதால் அதிக நன்மை கிடைக்கும். தொழில், வியாபார இலக்கு கால அவகாசத்தில் நிறைவேறும். சேமிப்பு பணம் முக்கிய செலவுகளுக்கு பயன்படும்.

**கடகம்:** முக்கியமான பணி ஒன்றை நிறைவேற்றுவீர்கள். அன்பு, பாசத்துடன் குடும்ப உறுப்பினர்கள் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி விலகும். பண பரிவர்த்தனையில் நல்ல முன்னேற்றம் உண்டு.

**சிம்மம்:** இடையூறு செய்பவரை அடையாளம் காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலையை சம்யோசிதமாக சரி செய்ய வேண்டும். குறைந்த அளவில் பண வரவு இருக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். தாய் வழி உறவினர் அன்பு, பாசத்துடன் உதவுவர். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். தாராள பண வரவு கிடைக்கும்.

**துலாம்:** உங்களின் தனி திறமையை வெளிப்படுத்துவீர்கள். தாமதமான பணி ஒன்று எளிதாக நிறைவேறும். தொழிலில் உற்பத்தி, விற்பனை முன்னேற்றம் பெறும்.

**விருச்சிகம்:** அறிமுகம் இல்லாதவரிடம் சொந்த விஷயம் பேச கூடாது. தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற தாமதமாகலாம். தியானம், தெய்வவழிபாடு மனம்நிம்மதிபெற உதவும்.

**தனுசு:** உங்கள் சிரமத்தை பிறரிடம் சொல்லவேண்டாம். இஷ்டதெய்வத்தின் கருணையால்சிலநன்மை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான வளர்ச்சி இருக்கும்.

**மகரம்:** திட்டமிட்ட பணியை எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை மேன்மை பெறும். பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும்.

**கும்பம்:** பணிகளில் சில மாற்றங்களை பின்பற்றுவீர்கள். இடையூறு செய்தவர் விலகி போவர். தொழில், வியாபாரம் அபரிமிதமான முன்னேற்றம் பெறும்.

**மீனம்:** உங்களின் பொறுப்பான செயல் தவறாக விமர்சிக்கப்படலாம். சக தொழில், வியாபாரம் சார்ந்தவர்களுடன் சச்சரவு பேச வேண்டாம். அளவான பணவரவு கிடைக்கும்.

## தமிழரின்...

அரச தலைவர் தேர்தலில் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் ஓரணியில் திரண்டு சஜித் பிரேமதாசவுக்கு பெருமளவு வாக்குகளை அள்ளி வழங்கியுள்ளார்கள். தங்கள் கட்சியின் சார்பில் அரச தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள கோத்தபாயவை வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் நிராகரித்து விட்டார்கள் அல்லவா? தங்கள் ஆட்சியில் தமிழர்களை எப்படி நோக்குவீர்கள்?' என்று மகிந்த ராஜபக்சவை நேற்றுமுன்தினம் இரவு சந்தித்த வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் சிலர் கேட்டனர். அதற்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

தமிழ் மக்களும் இலங்கைக் குடிமக்கள் தான். அவர்களை வடக்குத் தமிழர் என்றோ அல்லது கிழக்குத் தமிழர் என்றோ அல்லது தெற்குத் தமிழர் என்றோ நாம் வேறுபடுத்திக் காட்ட முடியாது. தமிழ் மக்களின் வாக்குகள் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்குப் பெருமளவில் கிடைக்கவில்லை என்பது உண்மைதான். இதைப் புதிய அரச தலைவர் கோத்தபாய தனது பதவியேற்பு நிகழ்வில் பகிரங்கமாகவே ஒத்துக்கொண்டுள்ளார். தமிழ் மக்களின் வாக்குகள் எமது கட்சிக்குப் பெருமளவில் கிடைக்கவில்லை என்பதற்காக அவர்களை நாம் ஒதுக்கி வைக்க முடியாது. அவர்கள் இந்த நாட்டில் தலைமிர்ந்து வாழும் நிலையை எமது ஆட்சியில் ஏற்படுத்துவோம். அவர்களின் மனங்களை வெல்லும் வகையில் நாம் செயற்படுவோம்.

எமது புதிய அரச தலைவர் கோத்தபாய இந்த நாட்டில் வாழும் சகல மக்களினதும் மனநிலையை நன்கு அறிந்தவர். அதற்கேற்ற மாதிரி அவர் தனது செயற்பாடுகளை முன்னெடுப்பார். சகல இன மக்களையும் அரவணைத்துக்கொண்டு பயணிப்பதே அவரின் நோக்கம். அதுதான் அனைவரையும் இலங்கையர்கள் என்ற நாமத்துடன் தன்னுடன் கைகோர்த்துச் செயற்பட வருமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி இந்த நாட்டில் நிலவி வந்தது. அதனால் நாடு அபிவிருத்திப் பாதையில் செல்லவில்லை. ஊழல், மோசடிகளே அந்த ஆட்சியில் அரங்கேற்றப்பட்டன. ஆனால், எதற்கெல்லாம் எமது ஆட்சியில் இடமில்லை. நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்வோம். கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக சீரழிக்கப்பட்ட இந்தநாட்டைக்கட்டியெழுப்புவோம். ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதார நெருக்கடியால் தமிழ் மக்கள் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். ஆனால், ஐ.தே.க. அரசோ அரசியல் தீர்வைத் தருவோம் என்று கூறி தமிழ் மக்களை ஏமாற்றி வந்தது. தமிழ் மக்கள் மட்டுமல்ல நாட்டிலுள்ள மூவின மக்களும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டார்கள். அந்த நிலைமை எமது ஆட்சியில் வராது.

அரச தலைவர் தேர்தலில் நாட்டு மக்கள் வழங்கிய ஆணையால் எமது கட்சியின் வேட்பாளர் கோத்தபாய அரச தலைவராகப் பதவியேற்றுள்ளார். அவரின் தலைமையில் நாம் இப்போது ஆட்சியைக் கொண்டு சென்றாலும் பழைய அரசு (ஐ.தே.க. அரசு) நாடாளுமன்றத்துக்குள் ஊளையிடும். எனவே, நாடாளுமன்றத் தேர்தலை உடன் நடத்தினால் மக்களின் ஆணையை அதிலும் எமது கட்சி பெற்றுக்கொண்டு திறம்பட ஆட்சியை நடத்தலாம். சில தினங்களில் இது தொடர்பில் நாம் ஒரு தீர்மானத்துக்கு வருவோம் என்றார். (ஓ.5.22)

## தமிழர்கள்...

வன். மூவின மக்களினதும் தலைவன். நாட்டையும்மக்களையும்பாதுகாப்பதேஎனது பிரதான கடமை. இவ்வாறு அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

நுகேகொடையிலுள்ள அவரது வீட்டில் நேற்றுமுன்தினம் இரவு வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் சிலரைச் சந்தித்து உரையாடியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் தேர்தலில் பெரும்பான்மை இன மக்களின் ஆதரவுடன் நான் வெற்றி பெறுவேன் என்று எண்ணியிருந்த போதிலும் இப்படிப் பெரும் சாதனைபடைத்துவெற்றியடைவேன்என்று நான் நினைக்கவில்லை. உண்மையில் எனது மக்களின் பாசத்தைக் கண்டு நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்தத் தேர்தலில் தமிழ், முஸ்லிம் மக்களில் பெரும்பாலானோர் என்னைப் புறக்கணித்தாலும் அவர்களின் காவலனாக இருப்பேன். ஏனெனில், நான் இப்போது நாட்டின் தலைவன். சகல இன மக்களினதும் தலைவன். நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதே எனது பிரதான கடமை. எனவே, இந்த நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் என அனைத்து இன மக்களும் ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகள் போல் ஒற்றுமையாக வாழ வேண்டும். அதற்கான சூழ்நிலையை நான் ஏற்படுத்துவேன்.

ஜனநாயக வழியில் மக்களின் வாக்குரிமைப் பலத்தால் நான் அரச தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளேன். இதை வெளிநாடுகள் உணர்ந்துகொள்ள வேண்டும். அரச தலைவர் என்ற ரீதியில் நாட்டின் எதிர்கால நலன் கருதி அனைத்து வெளிநாட்டுத் தலைவர்களுடனும் நேரில் பேசுவதற்கு நான் தயராக இருக்கின்றேன். பல வெளிநாட்டுத் தலைவர்கள் எனது வெற்றிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்கள் என்றார். (ஓ.5.22)

## இடைக்கால...

யோகபூர்வமாகத் தனது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றார்.

அதையடுத்து அரசைக் கையளித்து எதிர்க்கட்சியாகச் செயற்படுவதா? அல்லது உடனடியாகப் பொதுத் தேர்தலுக்குச் செல்வதா? என்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆலோசித்திருந்தது. நேற்றுமுன்தினம் இந்த விடயம் தொடர்பாக ஆராய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழு கூடியபோதும் அதில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் நாடாளுமன்றத்தைக் கலைக்காது அரசைக் கையளித்து எதிர்க்கட்சியாகச் செயற்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளனர்.

அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேசி இது தொடர்பாக முடிவு எடுக்கப்படும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

நேற்று அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் சந்தித்துப் பேசியுள்ளனர் என்றும், இந்தச் சந்திப்பில் 4 மாத கால இடைவெளிக்குள் பொதுத் தேர்தலை நடத்துவது என்று இருவருக்கும் இடையே இணக்கம் எட்டப்பட்டது என்றும் தெரியவருகின்றது. ஐக்கிய தேசிய முன்னணி அரசு விலகி எதிர்க்கட்சியில் அமர்வது என்றும் முடிவெடுக்கப்பட்டது என்றும் அறியமுடிகின்றது.

இந்தநிலையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இன்று பதவி விலகுவார் என்றும், அதைத் தொடர்ந்து அரச தலைவரால் இடைக்கால அரசு ஒன்று இன்று பதவியேற்கும் என்றும் நேற்றிரவு தகவல்கள் வெளியாகின.

15 பேரைக் கொண்ட சிறிய அமைச்சரவை ஒன்று பதவியேற்று, பொதுத் தேர்தல் வரையில் செயற்படும் என்றும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன. ஆனால் சம்பந்தப்பட்ட தரப்புகள் எவையும் இந்தத் தகவலைநேற்றிரவுஉறுதிப்படுத்தவில்லை. அதேவேளை, அரசமைப்பின்படி எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதியே நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும். (எ)

## அடுத்த கட்டம்...

கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்று சபாநாயகர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சபாநாயகர் அலுவலகத்தால் நேற்று வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புதிய அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச பதவி பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் ஏனைய கட்சி தலைவர்கள் உள்ளிட்டோர் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து சபாநாயகரை சந்தித்து கலந்துரையாடினர்.

சபாநாயகருடனான சந்திப்பில் பெரும்பான்மையான மக்களின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டுள்ளமைக்கு அமைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதே பலரது நிலைப்பா டாகக் காணப்பட்டது. அதற்கமைய மூன்று மாற்று நடவடிக்கைகள் குறித்து இதன் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அரசமைப்புக்கு ஏற்ப 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு ஏப்ரலில் நாடாளுமன்ற தேர்தலுக்குச் செல்லுதல் முதலாவது மாற்று நடவடிக்கையாகும்.

இரண்டாவது நடவடிக்கை நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தைக் கலைத்து உடனடியாக தேர்தலுக்குச் செல்லுதலாகும்.

தலைமை அமைச்சர் உள்ளிட்ட ஏனைய அமைச்சர்கள் விருப்புடன் பதவிகளிலிருந்து நீங்கினால், அதனைத் தொடர்ந்து, அரச தலைவர் புதிய அமைச்சரவை நியமிக்கப்படுதல் மூன்றாவது நடவடிக்கையாகும். இவ்வாரத்தில் கட்சி தலைவர்களை சந்தித்து அதன் போது இறுதி முடிவை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே தலைமை அமைச்சரும் எதிர்க்கட்சி தலைவரும் தத்தமது கட்சி தலைவர்களுடன் கலந்துரையாடி தீர்மானமொன்றை எடுப்பதோடு, அந்த தீர்மானத்தை சபாநாயகருக்கு அறிவித்ததன் பின்னர் சபாநாயகர் இறுதி தீர்மானத்தை அறிவிப்பார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ.5.22)

## கூட்டமைப்பின்...

ளுக்கு நான் அறிவிப்பேன். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கையின் 7ஆவது அரச தலைவராக கோத்தபாய ராஜபக்ச பதவியேற்றுள்ளார். தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் அடுத்தகட்ட நகர்வு என்னவாக இருக்கும்? என்று அதன் தலைவர் இரா.சம்பந்தனிடம் வினவியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் அனைவரும் ஓரணியில் நிற்கின்றார்கள்.என்பதையும், அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்கின்றார்கள் என்பதையும் நடந்து முடிந்த தேர்தல் பெறுபேறுகள் வெளியுலகுக்கு எடுத்துக்காட்டியுள்ளன.

எமது கோரிக்கையின் பிரகாரம் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் சஜித் பிரேமதாசவை ஆதரித்தார்கள். அதனால்தான் அவர் தமிழர் தாயகத்தில் பெருமளவு வாக்குகளைப் பெற்றார். எமது கோரிக்கைக்கு மதிப்பளித்துச் செயற்பட்ட தமிழ் மக்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வடக்கு, கிழக்கின் நிலமை இவ்வாறாக இருந்தவேளை தெற்கின் நிலைமை எவரும் எதிர்பாராத விதமாக அமைந்துள்ளது. அங்குள்ள 60 வீதமான பெரும்பான்மை இன் மக்கள் கோத்தபாய ராஜபக்சவையே ஆதரித்துள்ளார்கள். அதனால்தான் அவர் இந்தத் தேர்தலில் வெற்றியடைந்துள்ளார்; சாதனை படைத்துள்ளார். அவருக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த நாட்டில் தேசிய இனப்பிரச்சினைக்கு இன்னமும் அரசியல் தீர்வு கிடைக்காதபடியால் தமிழ் மக்களின் மனநிலையும், பெரும்பான்மை இன மக்களின் மனநிலையும் வேறுபட்டதாக உள்ளன. இதை இந்தத் தேர்தல் முடிவுகள் எடுத்தியம்பியுள்ளன.

எவர் ஆட்சியமைத்தாலும் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்பதே எமது பிரதான கோரிக்கையாகவும், தமிழர் நலன் சார்ந்த எமது செயற்பாடுகளின் பிரதான இலக்காகவும் இருக்கின்றது. இது புதிய அரச தலைவர் கோத்தபாயவுக்கும் தெரிந்த விடயம். ஆனால், அந்தத் தீர்வை எந்த வழியில் நாம் பெற வேண்டும் என்பதே இப்போதுள்ள கேள்வி.

இந்தநிலையில், அரசியல் தீர்வு உள்ளிட்ட தமிழர் நலன் சார்ந்த எமது செயற்பாடுகளின் அடுத்தகட்ட நகர்வு தொடர்பில் அறிவிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இது தொடர்பில் பேசுவேன். அந்தப் பேச்சில் எடுக்கப்படும் தீர்மானத்தை மக்களுக்கு நான் அறிவிப்பேன் - என்றார். (ஓ.5.22)

## கண்டியில்..

ஸார் பி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.

பாடசாலையின் முன்னாள் அதிபரின் பெயரிடப்பட்டு குறித்த குண்டுப் புரளி விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. கண்டியிலிருந்தே அந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அது தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று பொலிஸார் மன்றுரைத்தனர். இந்த வழக்கு எதிர்வரும் டிசெம்பர் 3ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த உயர்தரப் பாடசாலையில் இன்னும்ஒருமாதத்தில்குண்டுவெடிக்கும்என்று ஆங்கில மொழியில் குறிப்பிட்டு, திகதியிடப்படாத குறித்த அநாமதேயக் கடிதம் கடந்த ஒக்ரோபர் 31ஆம் திகதி யாழ்ப்பாண தபாலகத்துக்குக் கிடைத்துள்ளது. வேம்படி பாடசாலை முன்னாள் அதிபர் வேணுகா சண்முகரத்தினம் என்ற பெயரில் பாடசாலை விலாசம் இடப்பட்டு அது வந்துள்ளது. குறித்த அதிபர் ஓய்வு பெற்றுச் சென்றதை அறிந்திருந்த உரிய தபால் அலுவலர் அவர் இருக்கும் கொக்குவில் பகுதிக்குச் செல்லும் தபால் அலுவலரிடம் அந்தக் கடிதத்தைக் கொடுத்து விட்டுள்ளார்.

முன்னாள் அதிபரின் வீட்டுக்குச் சென்ற போது, அங்கே எவரும் இல்லாததால் கடிதத்தைப் படலையால் போட்டுவிட்டு தபால் ஊழியர் வந்துள்ளார்.

அன்று மதியம் வீடு திரும்பிய முன்னாள் அதிபர் கடிதத்தைப் பார்த்துவிட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-37)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ.20
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சூரிய மஹால் அனுசரணையுடன் நடத்தும் வைத்தியர் மயிலேறும் பெருமாள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் திக்கம்முனை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற கரணவாய் மத்திய விளையாட்டுக் கழக அணிக்கும் கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கரணவாய் மத்தி விளையாட்டுக் கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு ஆட்டத்தில் அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணிக்கும், கலைமதி விளையாட்டுக் கழக பி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் விளையாட்டுக் கழக அணி 7 : 1என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வல்வை விளையாட்டுக் கழக பி அணிக்கும், பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மற்றுமொரு ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழக ஏ அணிக்கும், கரவெட்டி நவசக்கதி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழக ஏ அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)





# உலகக் கிண்ண றோல்போல் போட்டியில் தமிழ் வீர, வீராங்கனைகள் அசத்தலாட்டம்




யாழ்ப்பாணம், நவ.20
சென்னையில் நடைபெறும் 5ஆவது உலகக் கிண்ண றோல் போல் போட்டியில் தமிழ் வீரர்களான வினுஷா, திவ்வியா, நிலானி, மற்றும் புவிந்திரன் பங்கேற்றனர்.

சென்னையில் நடைபெறும் 5ஆவது உலகக் கிண்ண றோல் போல் போட்டியில் ஆண்களுக்கான லீக் போட்டியில் இலங்கை அணி உருகுவே அணியை 5:0 என்ற கோல் கணக்கிலும், பங்களாதேஷ் அணியை 2:0 என்ற கோல் கணக்கிலும், பிரான்ஸ் அணியை 7:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றது.

மற்றுமொரு ஆட்டத்தில் இங்கிலாந்து அணியுடன் மோதிய போட்டியில் இரு அணிகளும் தலா 2 கோல்களைப் பதிவு செய்ய ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இலங்கை அணி காலிறுதியாட்டத்தில் கென்யா நாட்டு அணியுடன் தோல்வியைத் தழுவியது. மேற்படி போட்டிகளில் தமிழ் வீரர் புவிந்திரன் களமிறங்கி தனது திறமையை வெளிப்படுத்தினார்.

இதேவேளை, பெண்களுக்கான லீக் போட்டியில் இலங்கை அணி செனகல் அணியையும், இங்கிலாந்து அணியையும் 4:1 என்ற கோல் கணக்கிலும், போர்த்துக்கல் அணியை 2:1 என்ற கோல் கணக்கிலும் வீழ்த்தி வெற்றியீட்டியது.

இலங்கை பெண்கள் அணி காலிறுதியாட்டத்தில் எகிப்து அணியுடன் தோல்வியைத் தழுவியது. மேற்படி போட்டிகளில் தமிழ் வீராங்கனைகளான வினுஷா, திவ்வியா, நிலானி களமிறங்கி தமது அபார திறமையை வெளிப்படுத்தினர். மகளிர் அணிக்கான பயிற்றுவிப்பாளராக வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பிரியங்கா செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (23)

# கலட்டி அணி மகுடம் சூடியது

யா[illegible]பாணம், நவ.20
கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் கலட்டி விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு கொலின்ஸ் பழைய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலட்டி விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் கலட்டி விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக கலட்டி விளையாட்டுக் கழக அணி வீரர் பேரின்பராஜ் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த கோல் காப்பாளராக கலட்டி விளையாட்டுக் கழக அணி கோல் காப்பளார் பாலா தெரிவானார். தொடராட்ட நாயகனாக கலட்டி விளையாட்டுக் கழக அணி வீரர் ராஜா தெரிவானார். சிறந்த பின்கள வீரராக வல்வை விளையாட்டுக் கழக அணி வீரர் சிறிதரன் தெரிவானார்.

மனோகார விளையாட்டுக் கழக அணிக்கும், அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை தான தாக்கிக் கொண்டது.



இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் கால்பந்தாட்ட, துடுப்பாட்ட வீரர் சி.காண்டீபன் மற்றும் மதிப்புறு விருந்தினர்களாக கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் கால்பந்தாட்ட வீரர்களான சி.வசந்தகுமார், கா.பிரகாஸ், மற்றும் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நலன் விரும்பி க.தவேந்திரராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (23)

# பதினொருவர் அணியை இன்ஸ்டாகிராமில் பகிர்ந்த வீராங்கனைக்கு ஓராண்டு தடை

போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் அணியில் இடம் பிடித்திருந்த 11 பேர் கொண்ட குழாமை வெளியிட்ட வீராங்கனைக்கு ஓராண்டு தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் பெண்களுக்கான பிக் பாஷ் ரி-20 லீக் தொடர் நடைபெற்று வருகிறது. கடந்த வாரம் ஹோபார்ட் ஹரிகேன்ஸ் சிட்னி தண்டர்ஸ் அணிகள் விளையாட இருந்தது. இந்தப் போட்டி ஆரம்பிப்பதற்கு அரை மணி நேரத்துக்கு முன்பே, ஹரிகேன்ஸ் அணியைச் சேர்ந்த எமிலி ஸ்மித் தனது இன்ஸ்டாகிராமில் 11 பேர் கொண்ட அணியை பகிர்ந்தார்.

இது ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்பு பிரிவுக்கு எதிரானது என்று அவருக்கு ஓராண்டு தடைவிதிக்கப்பட்டது. இதனால் பிக் பாஷ் லீக், அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள பெண்களுக்கான தேசிய கிரிக்கெட் லீக்கிலும் அவர் விளையாட முடியாது.





பாகிஸ்தான் சென்று விளையாட

# இலங்கை அணியின் மூத்த வீரர்கள் மூவர் இணக்கம்

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் திமுத் கருணாரத்ன, அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் சுரங்க லக்மல் ஆகியோர் பாகிஸ்தான் சென்று டெஸ்ட் போட்டியில் விளையாட இணக்கம் தெரிவித்துள்ளனர்.

கடந்த செப்டெம்பர் மாதம் இலங்கை கிரிக்கெட் அணியானது பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஒருநாள் மற்றும் ரி-20 போட்டிகளில் விளையாடியது.

பாதுகாப்பு அச்சுறுத்தல்களைக் காரணம் காட்டி இலங்கை அணியின் முன்னணி வீரர்களான திமுத் கருணாரத்ன, சுரங்க லக்மல், அஞ்சலோ மத்தியூஸ் உள்ளிட்ட பல மூத்த வீரர்கள் இந்த சுற்றுப் பயணத்தில் கலந்துகொள்ளவில்லை. எனினும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும், அந்த நாட்டு அரசாங்கமும் அளித்த அதியுயர் பாதுகாப்பினால் இந்தத் தொடரை இலங்கை கிரிக்கெட் சபை வெற்றிகரமாக முடித்தது.

இந்த நிலையில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் இலங்கை அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கெண்டு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

இந்தத் தொடரில் கலந்துகொள்வதற்காக இலங்கை அணியின் தலைவர் திமுத் கருணாரத்ன, அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் சுரங்க லக்மல் ஆகியோர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

# பும்ரா, டிரென்ட் போல்ட் இணை மும்பை அணிக்கு பெரும் பலம்

பயிற்சியாளர் மகேல கணிப்பு



ஐ.பி.எல். தொடரில் பும்ரா, டிரென்ட் போல்ட் இணை அபாயகரமான இணையாகத் திகழும் என்று மும்பை இந்தியன்ஸ் பயிற்சியாளர் மகேல ஜெயவர்தனே தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். 2020ஆம் ஆண்டு பருவகாலத்துக்கான வீரர்களை ஏலம் எடுக்கும் நிகழ்வு அடுத்த மாதம் கொல்கத்தாவில் இடம்பெறவுள்ளது. இதற்கு முன் ஒவ்வொரு அணிகளும் தாங்கள் விரும்பும் வீரர்களை வெளியேற்றவும், ஏனைய அணிகளில் இருந்து வாங்கவும் முடியும்.

இதில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணிக்காக விளையாடி வந்த டிரென்ட் போல்டை மும்பை இந்தியன்ஸ் அணி வாங்கியுள்ளது. டிரென்ட் போல்ட் பும்ரா உடன் இணைந்து பந்து வீசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இணை மிகவும் அபாயகரமானதாக இருக்கும் என்று மும்பை இந்தியன்ஸ் அணி தலைமை பயிற்சியாளர் ஜெயவர்தனே தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்;

ஜேசன் பெரெண்டர்ப்பை அணியில் வைத்து எப்படி செயற்படுத்துவது என்பது எங்களுக்கு மிகப்பெரிய கவலையாக இருந்தது. அவருக்குப் பதிலாக மாற்று வீரரை தேட வேண்டியிருந்தது. கடந்த முறை எங்களுக்காக பெரெண்டர்ஃப் சிறப்பாக விளையாடியிருந்தார்.

டெல்லி அணி டிரென்ட் போல்டை விலக்குகிறது என்ற செய்தி வந்தபோது, அவர் உலகத்தரம் வாய்ந்த வீரர் என நாங்கள் உணர்ந்தோம். பும்ரா உடன் இணைந்து அவர் பந்து வீசினால் அணி நல்ல முன்னேற்றத்தை எட்டும் என எண்ணினோம்- என்றார்.

## பங்களாதேஷ் வீரர் இடைநீக்கம்

சக வீரரை அடித்த வேகப் பந்து வீச்சாளர் ஷகாதத் ஹுசைனை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை இடைநீக்கம் செய்தது.

தேசிய கிரிக்கெட் லீக் போட்டி பங்களாதேஷில் இடம்பெற்று வருகின்றது. இதில் டாக்கா மண்டலம், குல்னா மண்டலம் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் மண்டல அணிக்காக விளையாடி வரும் பங்களாதேஷ் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஷகாதத் ஹுசைன், சக வீரர் அராபத் சன்னியை கோபத்தில் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். தனது பந்து வீச்சு திறமை குறித்து அராபத் சன்னி குறை கூறியதால் ஏற்பட்ட ஆத்திரத்தில் அவர் தாக்கியதாக கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் சபைக்கு முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து அவர் உடனடியாக இடைநீக்கம் செய்யப்பட்டார். ஷகாதத் ஹுசைனுக்கு ஓர் ஆண்டு தடை மற்றும் தண்டம் விதிக்கப்பட வாய்ப்பு இருப்பதாகவும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஷகாதத் ஹுசைன் பங்களாதேஷ் அணிக்காக 38 டெஸ்ட், 51 ஒருநாள் மற்றும் 6 ரி-20 போட்டிகளில் விளையாடி உள்ளார்.



ஆர்.சி.பி அணி

# வில்லியர்ஸ், கோக்லியை மட்டும் நம்பியிருக்க முடியாது

மொயீன் அலி காட்டம்

போட்டியில் வெற்றி பெறுவதற்கு பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியில் விராட் கோக்லி மற்றும் டி வில்லியர்ஸ் ஆகியோரை மட்டுமே நம்பி இருக்க முடியாது என மொயீன் அலி தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் விளையாடும் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி 12 வீரர்களை அதிரடியாக வெளியேற்றியுள்ளது. அதில் ஸ்டெயின், சவுத்தி, கவுல்டர்நைல் ஆகிய முக்கிய பந்து வீச்சாளர்களாவார்கள். இவர்களுடன் மார்கஸ் ஸ்டாய்னிஸ், கொலின் டி கிராண்ட்ஹோம் ஆகியோரையும் வெளியேற்றியுள்ளது.

விராட் கோக்லி, டி வில்லியர்ஸ் ஆகிய இருவர்தான் அணியின் துடுப்பாட்டத்தின் முதுகெலும்பாக உள்ளனர்.

இதுகுறித்து அந்த அணியின் சுழற்பந்து வீச்சாளரான மொயீன் அலி தெரிவிக்கையில்;

எங்களுக்கு நல்ல ஆரம்ப இணை தேவை. நாங்கள் எப்போதுமே தொடரை மெதுவாக தொடங்குகிறோம் என்று நினைக்கிறேன். சொந்த மைதானத்தில் விளையாடும்போது எங்களுக்கு தைரியம் தேவை. பெங்களூர் ஆடுகளம் மிகவும் சிறந்தது. எங்கள் அணியின் வெற்றிக்கு விராட் கோலி மற்றும் ஏபி டி வில்லியர்ஸ் ஆகியோரை மட்டுமே சார்ந்து இருக்க முடியாது - என்றார்.

# ஊழல் மோசடிகளை ஒழிப்பதற்கு நாடாளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டதில் முழு திருப்தியடைகின்றேன்

ஹரின் பெர்னாண்டோ தெரிவிப்பு

தற்போதைய அரசியல் கலாசாரத்தில் மாற்றம் அவசியம் என தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, விளையாட்டுத்துறை ஆகிய அமைச்சர் பதவிகளில் இருந்து விலகிய ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்சவின் வெற்றியை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, மக்களின் ஆணையை மதித்து அமைச்சர் பதவியில் இருந்து விலகுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

அரசியலில் எதுவும் நிலையானதல்ல. விளையாட்டுத்துறை அமைச்சராக பதவி வகித்த மிகக் குறுகிய காலத்தில் விளையாட்டுத்துறையில் ஊழல் மோசடிகளை, சூதாட்டத்தை முற்றாக ஒழிப்பதற்கு விளையாட்டுத்துறை சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதையிட்டு முழு திருப்தி அடைகின்றேன். இந்த சட்டத்தை தயாரிப்பதற்கு உதவிய விளையாட்டுத் துறை அமைச்சு ஆலோசகர் சட்டத்தரணி பண்டுக்க கீர்த்தினந்தவுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். இனி மேலும் விளையாட்டுத்துறையின் வளர்ச்சியை நாசம் செய்யவோ, விளையாட்டுத் துறையில் களவாடவோ முடியாது.

இலங்கை வறிய நாடு. வீர, வீராங்கனைகள் மத்தியில் திறமை இருக்கின்றது. அவர்களுக்கு வசதி, வாய்ப்புகள் செய்து கொடுக்கப்படவேண்டும். பன்னாட்டு வீரர்களுக்கு அரசாங்கத்தில் தொழில் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதில் மிகவும் ஆவலாக இருந்தேன். அதற்கான ஏற்பாடுகளையும் செய்துவந்தேன். இனி பதவிகளுக்கு வருபவர்கள் அதனை நிறைவேற்றுவார்கள் என நம்புகின்றேன் - என்றார்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1077
சீட்டிழுப்பு திகதி 2019.11.18 திங்கட்கிழமை
L 17 23 55 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 83,194,652/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
மஞ்சள், பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 796
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.11.19
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 65,394,660/-
வெற்றி இலக்கங்கள் 19 27 46 47 G
அபிவிருத்தி லொத்தர் சபை
0114 825 825
பச்சை நிற டிக்கெட்டுக்கள் இன்றைய சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1622
சீட்டிழுப்பு திகதி 19.11.2019
வெற்றி இலக்கங்கள் 06 17 32 69 V
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ.41, 103, 808/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
செம்மஞ்சள் நிற டிக்கெட்டுக்கள் 21.11.2019 திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 19.11.2019 வெற்றி வாரம் 2682 வர்ணம் சிவப்பு
மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 09 13 18 61
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 4, 109, 362/=
20.11.2019 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919



# இங்கிலாந்து - நியூசி. வீரர்கள் பாரம்பரிய முறையில் வரவேற்பு

இங்கிலாந்து அணி நியூஸிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இரு அணிகளுக்குமிடையில் ரி- 20 மற்றும் டெஸ்ட் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் முதலாவதாக நடைபெற்று முடிந்த ரி- 20 தொடரை இங்கிலாந்து அணி 3:2 என்ற கணக்கில் கைப்பற்றிய நிலையில் இவ்விரு அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி நாளை ஆரம்பமாகவுள்ளது. இந்த நிலையில் இங்கிலாந்து மற்றும் நியூஸிலாந்து கிரிக்கெட் அணியினரை அந்தப் பிரதேச வாழ் பழங்குடியினர் பாரம்பரிய முறையில் வரவேற்பு அளித்துள்ளனர்.



## விற்பனைக்கு

இருபாலை சந்தி, பருத்தித்துறை வீதியில் 5 பரப்புக் காணியும் 3000 சதுர அடி விஸ்தீரணமான மாடிக் கட்டடமும் விற்பனைக்குண்டு. விற்பனை முகவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
(CS 29407)

0772306653

## மரண அறிவித்தல்

# நாகரட்ணம் (இராசம்மா) நடராசா



பிறப்பு 05.11.1922 இறப்பு 17.11.2019

யாழ். குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி வளாக வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரட்ணம் (இராசம்மா) நடராசா 17.11.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னதங்கச்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் புவனேஸ்வரி, புவனேந்திரன், தெய்வேந்திரம், தேவிமனோகரி, காலஞ்சென்ற மனோகரன், அம்பிகாதேவி, கெங்காதேவி, யமுனா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான சீவரட்ணம், நாகம்மா, இராசேந்திரம்(வைரமுத்து) மற்றும் நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கமலநாதன், றஞ்சனா, சிறிறஞ்சனி, சிறிகங்கநாதன், காலஞ்சென்ற பராசக்தி, தனபாலசிங்கம், ராஜநாதன், உதயசேகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், மந்தாகினி குமரேசன், துளசிகா சேந்தகுமாரன், சேரலாதன் சர்மிலா, எல்லாளன் ஷியாமி, நந்திவர்மன், ரேகா தேவன், தர்ஷிக்கா ரஜனிகாந், சங்கீதா தீபன், கார்த்திகா முகிலன், பிராத்தனா துஷி, மதுரா ரட்ணகுமார், மயூரன் அனுசியா, செந்தூரன் சிந்து, சஞ்சீவ் திருமகள், அர்ஜீன் பிரஷா, சாருலதா பரன், லக்ஸ்மன் புஸ்பா, துவாரகன், சஞ்சிகா திலக், சஞ்சயன், அருஞ்சயன், பிர்தீப் மிதுஷா, சந்துரு, அஸ்வின் நர்மதா, சந்தியா நிசான், மைலோன், கீர்த்தனா, சேயோன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், ஆர்த்தி, ஆரன், சான்றோன், சத்யன், ஹரீஸ், அக்சயா, சுருதி, ஆருகன், ஆதிரன், கௌசிகன், ஆதித்தன், லிடிஷ், திவ்யேஷ், பீஷ்மர், விதுரன், கவின், ஆகன், பிரகல், ஜரிகா, ஜோவிகா, அட்விகா, அதிதீ, ஜத்ரேயா, ஆராதனா, தியா, இசான், கிரிஷ், சந்தோஷ், தேஜாஷ்வி, ஷாண்விக்கா, இசான், நவிசா, அதிரா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.11.2019) வியாழக்கிழமை காலை 08:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் மு.ப 10:00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வளாக வீதி,
திருநெல்வேலி.

(CS 29416)(14.17)

தகவல் :
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.